அரங்கசாமி
T. 13485

# சிவவாக்கியம்

[illegible]

ஷ. 55518
202

இஃது

[illegible]

[illegible]

திருமணம்

# முனிசாமிமுதலியார்

அவர்களாற் றமது

நாமகள்விலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1903.

*Registered Copy Right*

# சிவவாக்கியம் 1000.

## ஆயிரம் பாடல்.

### காப்பு.

அரியதோர் நடச்சிவாய மாதியந்த மானதும்
ஆறிரண்டு நூறுதேவ ரன்றுரைத்த மந்திரம்
கூரியதோ ரெழுத்தையுன்னி சொல்லுவேன்சிவாக்கியம்
தோஷதோஷ பாவமாய்கை தூரதூரவோடவே
கரியதோர்முகத்தையொத்தகற்பகத்தைக்கைதொழக்
கலைகள்நூல்கள் ஞானமுங் கருத்தில்வந் துதிக்கவே
பெரியபோகள்சிறியபேர்கள் கற்றுணர்ந்தபேர்க்கெலாம்
பேயனாகி யோதிடும் பிழைபொறுக்க வேண்டுமே.

### தத்வநிலை பரந்தாமனேயெனப் பாடியது.

பூநிலாயவைந்துமாய்ப புனற்கண்நின்றநான்குமாய்
தீநிலாயமூன்றுமாய்ச் சிறந்தகாலிரண்டுமாய்
மீநிலாயதொன்றுமாகி வேறுவேறு தன்மையாய்
நீநிலாயவண்ண நின்னையார்நினைக்கவல்லரோ. ௧

ஆறுமாறுமாறுமாயோ ரைந்துமைந்துமைந்துமாய்
ஏறுசீரிரண்டுமூன்று மேழுமாறுமெட்டுமாய்
வேறுவேறுஞானமாகி மெய்யினோடுபொய்யுமாய்
ஊனொடோசையாயவைந்து மாயஆயமாயனே. ௨

ஐந்துமைந்துமைந்துமாகி யல்லவற்றுளாயமாய்
ஐந்துமூன்றுமொன்றுமாகி நின்றவாதிதேவனே
ஐந்துமைந்துமைந்துமாகி யந்தரத்தணைந்துநின்று
ஐந்துமைந்துமாயநின்னை யாவர்காணவல்லரோ. ௩

கூசமொன்றுமின்றி மாசுணம்படுத்துவேலைநீர்
பேசநின்றதேவர்வந்து பாடமுன்கிடந்ததும்
பாசம்நின்றநீரில்வாழு மாமையானகேசவா
ஏசவன்றுநீகிடந்த வாறுகூறுதேவனே. உ0

ஆரங்கனேதரங்கநீர்கலங்கவன்றுகுன்றுசூழ்
மரங்கடேயமாநிலம் குலுங்கமாசுணம்சுலாய்
நெருங்கநீகடைந்தபோது நின்றசூ ரென்செய்தார்
குரங்கையாளுகந்தவெந்தை கூறுதேரவேறிதே. உக

பண்டுமின்றுமேலுமா யோர்பாலனாகிஞாலமேழும
உண்டுமண்டியாலிலைத் துயின்றவாதிதேவனே
வண்டுகிண்டுதண்டுழா யலங்கலாய்கலந்தசீர்ப்
புண்டரீகபாவைசேரு மார்பபூமிநாதனே. உஉ

வானிறத்தோர்சியமாம் வளர்ந்தவாளெயிற்றவன்
ஊனநிறத்துகிர்த்தல மழுத்தினாய்உலாயசீர்
நால்நிறத்தவேதநாவர் நல்லயோகினால்வணங்கு
பால்நிறக்கடல்கிடந்த பற்பநாபனல்லையே. உங

கங்கைநீர்பயந்தபாத பங்கயத்தெம்மண்ணலே
அங்கையாழிசங்குதண்டு வில்லும்வாளுமேந்தினாய்
சிங்கமாயதேவதேவ தேனுலாவுமென்மலர்
மங்கைமன்னிவாழுமார்ப ஆழிமேனிமாயனே. உச

வரத்தினில்சிரத்தைமிக்க வாளெயிற்றுமற்றவன்
உரத்தினில்கரத்தைவைத் துகிர்த்தலத்தையூன்றினாய்
இரத்தநீயிதென்னபொய் யிரந்தமண்வயிற்றுளே
கரத்திஉன்கருத்தை யாவர்காணவல்லர்கண்ணனே. உரு

ஆணினோடுபெண்ணுமாகி யல்லவோடுநல்லவாய்
ஊணொடோசையூறுமாகி யொன்றலாதமாயையாய்
பூணிபேணுமாயனாகிப் பொய்யினோடுமெய்யுமாய்
காணிபேணுமாணியாய்க் கரந்துசென்றகள்வனே. உசு

விண்கடந்தசோதியாய் விளங்குஞானமூர்த்தியாய்
பண்கடந்ததேசமேவு பாவநாசநாதனே
எண்கடந்தயோகினோ டிரந்துசென்றுமாணியாய்
மண்கடந்தவண்ணநின்னை யார்மதிக்கவல்லரே. உஎ

படைத்தபாரிடந்தளந்த துண்டுமிழ்ந்துபௌவநீர்
படைத்தடைத்ததிற்கிடந்து முன்கடைந்தபெற்றியோய்
மிடைத்தமாலிமாலிமான் விலங்குகாலனூர்புக
படைககலம்விடுத்தபல் படைத்தடக்கைமாயனே. ௨௮

பரத்திலும்பரத்தையாதி பௌவநீரணைக்கிடந்து
உரத்திலுமொருத்திதன்னை வைத்துகந்ததன்றியும்
நரத்திலும்பிறத்திநாத ஞானமூர்த்தியாயினாய்
ஒருத்தரும்நினாது தன்மை யின்னதென்னவல்லரே. ௨௯

வானகமுமமண்ணகமும் வெற்புமேற்கடல்களும்
போனகம்செய்தாலிலைத் துயின்றபுண்டரீகனே
தேனகஞ்செய்தண்ணறு மலர்த்துழாய்நன்மாலையாய்
கூனகம்புகத்தெறித்த கொற்றவில்லியல்லையே. ௩0

காலநேமிகாலனே கணக்கிலாதகீர்த்தியாய்
ஞாலமேழுமுண்டுபண்டோர் பாலனாயபண்பனே
வேலைவேவவில்வளைத்த வெல்சினத்தவீரநின்
பாலராயபத்தர்சித்தம் முத்திசெய்யும்மூர்த்தியே ௩௧

குரக்கினப்படைகொடு குரைகடலின்மீதுபோய்
அரக்கரங்கரங்கவெஞ் சரந்துரந்தவாதிநீ
இரக்கமண்கொடுத்தவற் கிரக்கமொன்றுமின்றியே
பரக்கவைத்தளந்துகொண்ட பற்பபாதனல்லையே. ௩௨

மின்னிரத்தெயிற்றரக்கன் வீழவெஞ்சரம்துரந்து
பின்னவற்கருள்புரிந் தரசளித்தபெற்றியோய்
நன்னிறத்தொரின்சொலேழை பின்னைகேள்வமன்னுசீர்ப்
பொன்னிறத்தவண்ணனாய புண்டரீகனல்லையே. ௩௩

ஆதியாதியாதிநீயொ ரண்டமாதியாதலால்
சோதியாதசோதிநீ யதுண்மையில்விளங்கினாய்
வேதமாகிவேள்வியாகி விண்ணினோடுமண்ணுமாய்
ஆதியாகியாயனாய மாயமென்னமாயமே. ௩௪

அம்புலாவுமீனுமாகி யாமையாகிஆழியார்
தம்பிரானுமாகிமிக்க தன்புமிக்கதன்றியும்
கொம்பராவுநுண்மருங்கு லாயர்மாதர்பிள்ளையாய்
எம்பிரானுமாயவண்ண மென்கொலோவெம்மீசனே. ௩௫

ஆடகத்தபூண்முலை யசோதையாய்ச்சிபிள்ளையாய்
சாடுதைத்தோர்புள்ளதாவி கள்ளதாயபேய்மகள்
வீடவைத்தவெய்யகொங்கை ஐயபாலமுதுசெய்து
ஆடகக்கைமாதர்வா யமுதமுண்டதென்கொலோ. ௧௬

காய்த்தநீள்விளங்கனி யுதிர்த்தெதிர்ந்தபூங்குருந்தம்
சாய்த்துமாபிளந்தகைத் தலத்தகண்ணனென்பரால்
ஆய்ச்சிபாலையுண்டுமண்ணையுண்டு வெண்ணெயுண்டுபின்
பேய்ச்சிபாலையுண்டு பண்டொரேனமாயவாமனா. ௧௭

கடங்கலந்தவன்கரி மருப்பொசித்தோர்பொய்கைவாய்
விடங்கலந்தபாம்பின்மேல் நடம்பயின்றநாதனே
குடங்கலந்தகூத்தனாய கொண்டல்வண்ணதண்டுழாய்
வடங்கலந்தமாலைமார்ப காலநேமிகாலனே. ௧௮

வெற்பெடுத்துவேலைநீர் கலக்கினாயதன்றியும்
வெற்பெடுத்துவேலைநீர் வரம்புகட்டிவேலைசூழ்
வெற்பெடுத்தவிஞ்சிசூ ழிலங்கைகட்டழித்தநீ
வெறபெடுத்துமாரிகாத்த மேகவண்ணனல்லையே. ௧௯

ஆனைகாத்தோரானைகொன் றதன்றியாயர்பிள்ளையாய்
ஆனைமேய்த்தியானையுண்டி அன்றுகுன்றமொன்றினால்
ஆனைகாத்துமையரிக்கண் மாதரார்திறத்துமுன்
ஆனையன்றுசென்றடர்த்த மாயமென்னமாயமே. ௨௰

ஆயனாகியாயர்மங்கை வேயதோள்விரும்பினாய்
ஆயநின்னையாவர்வல்ல ரம்பரத்தொடிம்பராய்
மாயமாயமாயைகொல் அதன்றிநீவகுத்தலும்
மாயமாயமாக்கினா யுன்மாயமுற்றுமாயமே. ௨௧

வேறிசைந்தசெக்கர்மேனி நீறணிந்தபுன்சடை
கீறுதிங்கள்வைத்தவன்கைவைத்தவன்சிறமிசை
ஊறுசெங்குருதியால் நிறைத்தகாரணந்தனை
ஏறுசென்றடர்த்தவீச பேசுகூசமின்றியே. ௨௨

வெஞ்சினத்தவேழவெண் மருப்பொசித்துருத்தமா
கஞ்சனைக்கடிந்துமண் ணளந்துகொண்டகாலனே
வஞ்சனத்துவந்தபேய்ச்சி யாவிபாலுள்வாங்கினாய்
அஞ்சனத்தவண்ணனாய ஆதிதேவனல்லையே. ௨௩

பாலிநீர்மைசெம்பொனீர்மை பாசியின்பசும்புறம்
போலுநீர்மைபொற்புடைத்தடத்துவண்டுவிண்டுலா
நீலநீர்மையென்றிவை நிறைந்தகாலநான்குமாய்
மாலினீர்மைவையகம் மறைத்ததென்னநீர்மையே. ௪௪

மண்ணுளாய்கொல்விண்ணுளாய்கொல் மண்ணுளேமயங்கிநின்று
எண்ணுமெண்ணகப்படாய்கொ லென்னமாயைநின்தமர்
கண்ணுளாய்கொல்சேயைகொ லனந்தன்மேல்கிடந்தவெம்
புண்ணியாபுனந்துழாயலங்கலம்புனிதனே. ௪௫

தோடுபெற்றதண்டுழா யலங்கலாடுசென்னியாய்
கோடுபற்றியாழியேந்தி யஞ்சிறைப்புள்ளூர்தியாய்
நாடுபெற்றநன்மை நண்ணமில்லையேனுமநாயினேன்
வீடுபெற்றிறப்பொடும் பிறப்பறுக்குமாசொலே. ௪௬

காரொடொத்தமேனிநங்கள் கண்ணவிண்ணினாதனே
நீரிடத்தராவணைக் கிடத்தியென்பவர்அன்றியும்
ஓரிடத்தையல்லையெல்லை யில்லையென்பராதலால்
சேர்விடத்தைநாயினேன் தெரிந்திறைஞ்சுமாசொலே. ௪௭

குன்றில்நின்றுவானிருந்து நீள்கடல்கிடந்துமண்
ஒன்றுசென்றதொணடையுண்ட தொன்றிடந்துபன்றியாய்
நன்றுசென்றநாளவற்றுள் நல்லுயிர்படைத்தவர்க்கு
அன்றுதேவமைத்தளித்த வாதிதேவனல்லையே. ௪௮

கொண்டைகொண்டகோதைமீது தேனுலாவுகூனிகூன்
உண்டைகொண்டரங்கவோட்டி யுள்மகிழ்ந்தநாதனூர்
நண்டையுண்டுநாரைபேர வாளைபாயநீலமே
அண்டைகொண்டுகெண்டைமேயு மந்தணீரரங்கமே. ௪௯

வெண்டிரைக்கருங்கடல் சிவந்துவேவமுன்னோர்நாள்
திண்டிறல்சிலைக்கைவாளி விட்டவீரர்சேருமூர்
எண்டிசைக்கணங்களு மிறைஞ்சியாடுதீர்த்தநீர்
வண்டிரைத்தசோலைவேலி மன்னுசீரரங்கமே. ௫௰

சரங்களைத்துரந்து வில்வளைத்துலங்கைமன்னவன்
சிரங்கள்பத்தறுத்துதிர்த்த செல்வர்மன்னுபொன்னிடம்
பரந்துபொன்னிரந்து நுந்தி வந்தலைக்கும்வார்புனல்
அரங்கமென்பர்நான்முகத் தயன்பணிந்தகோயிலே, ௫௧

பொற்றையுற்றமுற்றல்யானை போரொதிர்ந்துவந்ததை
பற்றியுற்று, மற்றதன் மருப்பொசித்தபாகனார்
சிற்றெயிற்றுமுற்றல்மூங்கில் மூன்றுதண்டரொன்றினர்
அற்றபற்றர்சுற்றிவாழு மந்தணீரரங்கமே. ௫௨

மோடியோடிலச்சையாய சாபமெய்திமுக்கணான்
கூடுசேனைமக்களோடு கொண்டுமண்டிவெஞ்சமர்த்
தோடவாணனாயிரம் கரங்கழித்தவாதிமால்
பீடுகோயில்கூடுநீ ரரங்கமென்றபேரதே. ௫௩

இலைத்தலைச்சரந்துரந் திலங்கைகட்டழித்தவன்
மலைத்தலைப்பிறந்திழிந்து வந்துநுந்துசந்தனம்
குலைத்தலைத்திறுத்தெறிந்த குங்குமக்குழம்பினோடு
அலைத்தொழுகுகாவிரி யரங்கமேயவண்ணலே. ௫௪

மன்னுமாமலர்க்கிழத்தி வையமங்கைமைந்தனாய்
பின்னுமாயர்பின்னைதோள் மணம்புணர்ந்ததன்றியும்
உன்னபாதமென்னசிந்தை மன்னவைத்துநல்கினாய்
பொன்னிசூழரங்கமேய புண்டரீகனல்லையே. ௫௫

இலங்கைமன்ன னைந்தொடைந்து பைந்தலைநிலத்துக்
கலங்கவன்றுசென்றுகொன்று வென்றிகொண்டவீரனே
விலங்குநூலர் வேதநாவர் நீதியானகேள்வியார்
வலங்கொளக்குடந்தையுள் கிடந்தமாலுமல்லையே. ௫௬

சங்குதங்குமுன்கைநங்கை கொங்கைதங்கலுற்றவன்
அங்கமங்கவன்றுசென் றடர்த்தெரிந்தவாழியான்
கொங்குதங்குவார்குழல் மடந்தைமார்குடந்தைநீர்
பொங்குதண்குடந்தையுள் கிடந்தபுண்டரீகனே. ௫௭

மரங்கெடநடந்தடர்த்து மத்தயானைமத்தகத்து
உரங்கெடப்புடைத்தோர்கொம் பொசித்துகந்தவுத்தமா
துரங்கம்வாய்பிளந்து மண்ணளந்தபாதவேதியர்.
வரங்கொளக்குடந்தையுள் கிடந்தமாலுமல்லையே. ௫௮

சாலிவேலிதண்வயல் தடங்கிடங்குபூம்பொழில்
கோலமாடநீடுதண் குடந்தைமேயகோவலா
காலநேமிவக்கரன் கரன்முரன்சிரமவை
காலனோடு கூடவில் குனித்தவில்கைவீரனே. ௫௯

செழுங்கொழும்பெரும்பனி பொழிந்திட உயர்ந்தவேய்
விழுந்துலர்ந்தெழுந்து விண் புடைக்கும்வேங்கடத்துள்நின்று
எழுந்திருந்து தேன்பொருந்து பூம்பொழில் தழைக்கொழும்
செழுந்தடக்குடந்தையுள் கிடந்தமாலுமல்லையே. ௬௰

நடந்தகால்கள்நொந்தவோ நடுங்கஞாலமேனமாய்
இடந்தமெய்குலுங்கவோ விலங்குமால்வரைச்சுரம்
கடந்தகால்பரந்தகா விரிக்கரைக்குடந்தையுள்
கிடந்தவாறெழுந்திருந்து பேசுவாழிகேசனே. ௬௧

கரண்டமாடுபொய்கையுள் கரும்பனைப்பெரும்பழம்
புரண்டுவீழவாளைபாய் குறுங்குடிநெடுந்தகாய்
திரண்டதோளிரணியன் சினங்கொளாகமொன்றையும்
இரண்டுகூறுசெய்துகந்த சிங்கமென்பதுன்னையே. ௬௨

நன்றிருந்துயோகநீதி நண்ணுவார்கள்சிந்தையுள்
சென்றிருந்து தீவினைகள் தீர்த்ததேவதேவனே
குன்றிருந்தமாடநீடு பாடகத்துமூரகத்தும்
நின்றிருந்துவெஃகணைக் கிடந்ததென்னநீர்மையே. ௬௩

நின்றதெந்தையூரகத் திருந்ததெந்தைபாடகத்து
அன்றுவெஃகணைக்கிடந்த தென்னிலாதமுன்னெலாம்
அன்றுநான்பிறந்திலேன் பிறந்தபின்மறந்திலேன்
நின்றதுமிருந்ததும் கிடந்ததுமென்னெஞ்சுளே. ௬௪

நிற்பதுமோர்வெற்பகத் திருப்பவிண்கிடப்பதும்
நற்பெருந்திரைக்கடலுள் நானிலாதமுன்னெலாம
அற்புதனனந்தசயன னாதிபூதன்மாதவன்
நிற்பதுமிருப்பதுங் கிடப்பதுமென்னெஞ்சுளே. ௬௫

இன்றுசாதல்நின்றுசாத லன்றியாருமவ்வையகத்து
ஒன்றிநின்றுவாழ்தலின்மை கண்டுநீசரென்கொலோ
அன்றுபாரளந்தபாத போதையுன்னிவானின்மேல்
சென்றுசென்றுதேவராயிருக்கிலாதவண்ணமே. ௬௬

சண்டமண்டலத்தினூடு சென்றுவீடுபெற்றுமேல்
கண்டுவீடிலாதகாத லின்பம்நாளுமெய்துவீர்
புண்டரீகபாதபுண்ணிய கீர்த்திநுஞ்செவிமடுத்
துண்டுநும்முறுவினைத் துயருள்நீங்கியுய்மினோ. ௬௭

முத்திறத் துவாணியைத் திரண்டுடிலான் முனீசர்கள்
மத்தராய் மயங்குகின்ற மெய்ப்படியிறக்குமேயோக்
தெத்திறத்து முள்ளதேவ ரூபமில்லையுங்குறில்
தொத்திறுத்த தண்டுழாய் மன்மாலைவாழ்த்தி வாழ்மினே. ௬௮

காணிலுமுருப்பொலார் செவிக்கினாதகீர்த்தியார்
பேணிலும்வரந்தரா மிடுக்கிலாததேவரை
ஆணமென்றடைந்துவாழும் ஆதர்காள்எம்மாதிபால்
பேணிறும்பிறப்பெனும் பிணக்கறுக்ககிற்றிரே. ௬௯

குந்தமோடுசூலம்வேல்கள் தோமரங்கள்தண்டுவாள்
பந்தமானதேவர்கள் பரந்துவானகமுற
வந்தவாணனீரைஞ்ஞாறு தோள்களைத்துணித்தநாள்
அந்தவந்தவாகுல மமரரேயறிவரே. ௭௦

வண்டுலாவுகோதைமாதர் காரணத்தினால்வெகுண்டு
இண்டவாணனீரைஞ்ஞாறு தோள்களைத்துணித்தநாள்
முண்டநீறன்மக்கள்வெப்பு மோடியங்கியோடிடக்
கண்டுநாணிவாணனுக் கிரங்கினானெம்மாயனே. ௭௧

மாதுதங்குகூறனேற தூர்தியென்றுவேதநூல்
ஓதுகின்றதுண்மையல்ல தில்லைமற்றுரைக்கிலே
போதுதங்குநான்முகன்மக னவன்மகன்சொலில்
போதில்மங்கைபூதலக் கிழத்திதேவியன்றியும் ௭௨

மரம்பொதச்சரந்துரந்து வாலிவீழமுன்னொர்நாள்
உரம்பொதச்சரந்துரந்த வும்பராளியெம்பிரான்
வரம்குறிப்பில்வைத்தவர்க் கலாதுவானமாளினும்
நிரம்பிநீடுபோகமெத் திறத்துமியார்க்குமில்லையே. ௭௩

அறிந்தறிந்துவாமனை னடியிணைவணங்கினால்
செறிந்தெழுந்தஞானமோடு செல்வமுஞ்சிறந்திடும்
மறிந்தெழுந்ததெண்டிரையுள் மன்னுமாலைவாழ்த்தினால்
பறிந்தெழுந்துதீவினைகள் பற்றறுதல்பான்மையே. ௭௪

ஒன்றிநின்றுநல்தவஞ்செய் தூழியூழிதோறெலாம
நின்றுநின்றவன்குணங்க ளுள்ளியுள்ளம்தூயராய்
சென்றுசென்றுதேவதேவ ரும்பரும்பரும்பராய்
அன்றியெங்கள்செங்கண்மாலை யாவர்காணவல்லரே. ௭௫

புன்புலவழியடைத் தரக்கிலச்சினைசெய்து
நன்புலவழிதிறந்து ஞானநற்சுடர்கொளீஇ
என்பிலெள்கிநெஞ்சுருகி யுள்கனிந்தெழுந்ததோர்
அன்பிலன்றியாழியானை யாவர்காணவல்லரே ௭௬

எட்டுமெட்டுமெட்டுமாயோ ரேழுமேழுமேழுமாய்
எட்டுமூன்றுமொன்றுமாகி நின்றவாதிதேவனை
எட்டினாயபேதமோ டிறைஞ்சிநின்றவன்பெயர்
எட்டெழுத்துமோதுவார்கள் வல்லர்வானமாளவே. ௭௭

சோர்விலாதகாதலால் துடக்கறுமனத்தராய்
நீரராவணைக்கிடந்த நின்மலன்நலங்கழல்
ஆர்வமோடிறைஞ்சிநின் றவன்பெயரெட்டெழுத்தும்
வாரமாகவோதுவார்கள் வல்லர்வானமாளவே. ௭௮

மத்தினோடுபத்துமா யொரேழினோடொரொன்பதாய்
பத்தினான்திசைக்கணின்ற நாடுபெற்றநன்மையாய்
பத்தினாயதோற்றமோ டோராற்றல்மிக்கவாதிபால்
பத்தராமவர்க்கலாது முத்திமுற்றலாகுமே. ௭௯

வாசியாகிநேசமின்றி வந்தெதிர்ந்ததேனுகன்
நாசமாகிநாளுலப்ப நன்மைசேர்பனங்கனிக்கு
வீசிமேல்நிமிர்ந்ததோளி னில்லையாக்கினாய்கழற்கு
ஆசையாமவர்க்கலா லமரராகலாகுமே. ௮௦

கடைந்தபாற்கடல்கிடந்து காலநேமியைக்கடிந்து
உடைந்தவாலிதன்றனக் குதவவந்திராமனாய்
மிடைந்தவேழ்மரங்களு மடங்கவெய்துவேங்கடம்
அடைந்தமாலபாதமேயடைந்துநாளுமுய்ம்மினோ. ௮௧

எத்திறத்துமொத்துநின் றுயர்ந்துயர்ந்தபெற்றியோய்
முத்திறத்துமூரிநீர ராவணைத்துயின்றநின்
பத்துறுத்தசிந்தையோடு நின்றுபாசம்விட்டவர்க்கு
எத்திறத்துமின்பமிங்கு மங்குமெங்குமாகுமே ௮௨

மட்டுலாவுதண்டுழா யலங்கலாய்புலன்கழல்
விட்டுவீள்விலாதபோகம் விண்ணினண்ணியேறினும்
எட்டினோடிரண்டெனும் கயிற்றினான்மனந்தனைக்
கட்டிவீடிலாதுவைத்த காதலின்பமாகுமே. ௮௩

பின்பிறக்கவைத்தனன்னை யன்றிநின்று தன்கழற்கு
அன்புறைக்கவைத்தனா னறிந்தனன்கொலாழியான்
தன்திறத்தொரன்பிலா வறிவிலாதநாயினேன்
என்திறத்திலென்கொலெம் பிரான்குறிப்புள்வைத்ததே. ௮௪

நச்சராவணைக்கிடந்த நாதபாதபோதினில்
வைத்தசிந்தைவாங்குவித்து நீங்குவிக்கநீயினம்
மெய்த்தன்வல்லையாதலா லறிந்தனன்நின்மாயமே
உய்த்துநின்மயக்கினில் மயக்கலென்னைமாயனே. ௮௫

சாடுசாடுபாதனே சலங்கலந்தபொய்கைவாய்
ஆடரவின்வன்பிடர் நடம்பயின்றநாதனே
கோடுநீடுகையசெய்ய பாதநாளுமுள்ளினால்
வீடனாகமெய்செயாத வண்ணமென்கொல்கண்ணனே. ௮௬

நெற்றிபெற்றகண்ணன்விண்ணி னாதனோடுபோதின்மேல்
நற்றவத்துநாதனோடு மற்றுமுள்ளவானவர்
கற்றபெற்றியால்வணங்கு பாதநாதவேதநின்
பற்றலாலோர்பற்றுமற்ற துற்றிலேனுரைக்கிலே. ௮௭

வெள்ளைவேலைவெற்புநாட்டி வெள்ளெயிற்றராவளாய்
அள்ளலாக்கடைந்தவன் றருவனைக்கொராமையாய்
உள்ளநோய்கள்தீர்மருந்து வானவர்களித்தஎம்
வள்ளலாமையன்றிமற்றோர் தெய்வம்நான்மதிப்பனே. ௮௮

பார்மிகுத்தபாரமுன் னொழிச்சுவானருச்சுனன்
தேர்மிகுத்தமாயமாக்கி நின்றுகொன்றுவென்றிசேர்
மாரதாக்குவான்கொடுத்து வையமைவர்பாலதாம்
சீர்மிகுத்தநின்னலாலோர் தெய்வம்நான்மதிப்பனே. ௮௯

குலங்களாய்விரிரண்டி லொன்றிலும்பிறந்திலேன்
நலங்களாயநற்கலைகள் நாலிலும்நவின்றிலேன்
புலன்களைந்தும்வென்றிலேன் பொறியிலேன்புனிதநின்
இலங்குபாதமன்றிமற்றோர் பற்றிலேனெம்மீசனே. ௯௰

பண்ணுலாவுமென்மொழிப் படைத்தடங்கணாள்பொருட்டு
எண்ணிலாவரக்கரை நெருப்பினால்நெருக்கினாய்
கண்ணலாலோர்கண்ணிலேன் கலந்தசுற்றம்மற்றிலேன்
எண்ணிலாதமாயநின்னை யென்னுள்நீக்கலென்றுமே. ௯௧

விடைக்குலங்களேழடர்த்து வென்றிவேல்கண்மாதரார்
கடிக்கலந்ததோள்புணர்ந்த காலியாய்வேலைநீர்
படைத்தடைத்ததிற்கிடந்து முன்கடைந்துநின்றனக்கு
அடக்கலம்புகுந்தவென்னை யஞ்சலென்னவேண்டுமே. ௯௨

சுரும்பரங்குதண்டுழாய் துதைந்தலர்ந்தபாதமே
விரும்பிநின்றிறைஞ்சுவேற் கிரங்குஅரங்கவாணனே
கரும்பிருந்தகட்டியே கடல்கிடந்தகண்ணனே
இரும்பரங்கவெஞ்சரம் துரந்தவில்லிராமனே. ௯௩

ஊனின்மேயவாவிநீ உறக்கமோடுணர்ச்சிநீ
ஆனில்மேயவைந்துநீ அவற்றுள்நின்றதூய்மை
வானினோடுமண்ணும்நீ வளங்கடற்பயனும்நீ
யானும்நீயதன்றியெம் பிரானும்நீயிராமனே. ௯௪

அடக்கரும்புலன்கள்ஐந் தடக்கியாசையாமவை
துடக்கறுத்துவந்துநின் தொழிற்கணின்றவென்னைநீ
விடக்கருதிமெய்செயாது மிக்கோராசையாக்கிலும்
கடல்கிடந்தநின்னலாலோர் கண்ணிலேனெம்மண்ணலே. ௯௫

வரம்பிலாதமாயமாய வையமேழும்மெய்ம்மையே
வரம்பிலூழியேத்திலும் வரம்பிலாதகீர்த்தியாய்
வரம்பிலாதபல்பிறப் பறுத்துவந்துநின்கழல்
பொருந்துமாதிருந்தநீ வரஞ்செய்புண்டரீகனே. ௯௬

வெய்யவாழிசங்குதண்டு வில்லும்வாளுமேந்துசீர்க்
கையசெய்யபோதில்மாது சேருமார்பநாதனே
ஐயிலாயவாக்கைநோ யறுத்துவந்துநின்னடைந்து
உய்வதோருபாயம்நீ யெனக்குநல்கவேண்டுமே. ௯௭

மறம்துறந்துவஞ்சமாற்றி யைம்புலன்களாசையும்
துறந்துநின்கணாசையே தொடர்ந்துநின்றநாயினேன்
பிறந்திறந்துபேரிடர்ச் சுழிக்கணின்றுநீங்குமா
மறந்திடாதுமற்றெனக்கு மாயநல்கவேண்டுமே ௯௮

காட்டினான்செய்வல்வினைப் பயந்தனால்மனந்தனை
நாட்டிவைத்துநல்லவல்ல செய்யவெண்ணினாரென
கேட்டதன்றியென்னதாவி பின்னைகேள்வநின்னொடும்
பூட்டிவைத்தவென்னைநின்னுள் நீக்கல்பூவைவண்ணனே, ௯௯

பிறப்பினேடுபேரிடர்ச் சுழிக்கணின்றநீங்குமஃது
இறப்பவைத்தஞானநீ சரைக்கரைக்கொடேற்றுமா
பெறற்கரியநின்னபாத பத்தியானபாசனம்
பெறற்கரியமாயனே யெனக்குநல்கவேண்டுமே. ௧௦௦

இரந்துரைப்பதுண்டுவாழி ஏமநீர்நிறத்தமா
வரந்தருந்திருக்குறிப்பில் வைத்ததாகில்மன்னுசீர்
பரந்தசிந்தையொன்றிநின்று நின்னபாதபங்கயம்
நிரந்தரம்நினைப்பதாக நீநினைக்கவேண்டுமே. ௧௦௧

விள்விலாதகாதலால் விளங்குபாதபோதில்வைத்து
உள்ளுவேனதூனநோ யொழிக்குமாதெழிக்குநீர்
பள்ளிமாயபன்றியாய வென்றிவீரகுன்றினால்
துள்ளுநீர்வரம்புசெய்த தோன்றலொன்றுசொல்லிடே. ௧௦௨

திருக்கலந்துசேருமார்ப தேவதேவதேவனே
இருக்கலந்தவேதநீதி யாகிநின்றநின்மலா
கருக்கலந்தகாளமேக மேனியாயநின்பெயர்
உருக்கலந்தொழிவிலா துரைக்குமாறுரைசெயே. ௧௦௩

கடுங்கவந்தன்வக்கரன் கரன்முரன்சிரமவை
இடந்துகூறுசெய்தபல் படைத்தடக்கைமாயனே
கிடந்திருந்துநின்றியங்கு போதும்நின்னபொற்கழல்
தொடர்ந்துவிள்விலாததோர் தொடர்ச்சிநல்கவேண்டுமே. ௧௦௪

மண்ணையுண்டுமிழ்ந்துபின் னிரந்துகொண்டளந்துமண்
கண்ணுளல்லதில்லையென்று வென்றகாலமாயினாய்
பண்ணைவென்றவின்சொல்மங்கை கொங்கைதங்குபங்கயக்
கண்ணநின்னவண்ணமல்ல தில்லையெண்ணும்வண்ணமே. ௧௦௫

கறுத்தெதிர்ந்தகாலநேமி காலனோடுகூடவன்
றறுத்தவாழிசங்குதண்டு வில்லும்வாளுமேந்தினாய்
தொறுக்கலந்தவூனமஃ தொழிக்கவன்றுகுன்றமுன்
பொறுத்தநின்புகழ்க்கலாலோர் நேசமில்லைநெஞ்சமே. ௧௦௬

காய்சினத்தகாசிமன்னன் வக்கரன்பவுண்டிரன்
மாசினத்தமாலிமான் சுமாலிகேசிதேனுகன்
நாசமுற்றுவீழநாள் கவர்ந்தநின்கழற்கலால்
நேசபாசமெத்திறத்தும் வைத்திடேனெம்மீசனே. ௧௦௭

கேடில்சீர்வரத்தனைக் கெடும்வரத்தயனரன்
நாடினோடுநாட்டமாயி ரத்தன்னாடுகண்ணினும்
வீடதானபோகமெய்தி வீற்றிருந்தபோதிலும்
கூடுமாசையல்லதொன்று கொள்வனோகுறிப்பிலே. ௧௦௮

சுருக்குவாரையின்றியே சுருங்கினாய்சுருங்கியும்
பெருக்குவாரையின்றியே பெருக்கமெய்துபெற்றியோய்
செருக்குவார்கள்தீக்குணங்கள் தீர்த்ததேதவதேதவனென்று
இருக்குவாய்முனிக்கணங்க ளேத்தயானிமேத்தினேன். ௧௦௯

தூயனாயுமன்றியும் சுரும்புலாவுதண்டுழாய்
மாயநின்னைநாயினேன் வணங்கிவாழ்த்துமீதெலாம்
நீயுநின்குறிப்பினிற் பொறுத்துநல்குவேலைநீர்
பாயலோடுபத்தர்சித்தம் மேயவேலைவண்ணனே. ௧௧௰

வைதுநின்னைவல்லவா பழித்தவர்க்குமாறில்போர்
செய்துநின்னைசெற்றதீயில் வெந்தவர்க்கும்வந்துன்னை
எய்தலாகுமென்பராத லாலெம்மாயநாயினேன்
செய்தகுற்றம்நற்றமாக வேகொள்ஞாலநாதனே. ௧௧௧

வாள்களாகிநாள்கள்செல்ல நோய்மைகுன்றிமூப்பெய்தி
மாளுநாளதாதலால் வணங்கிவாழ்த்தெந்நெஞ்சமே
ஆளதாகுநன்மையென்று நன்குணர்ந்ததன்றியும்
மீள்விலாதபோகம்நல்க வேண்டும்மாலபாதமே. ௧௧௨

சலங்கலந்தசெஞ்சடைக் கறுத்தகண்டன்வெண்டலை
புலன்கலங்கவுண்டபாத கத்தன்வன்றுயர்கெட
அலங்கல்மார்வில்வாசநீர் கொடுத்தவனடுத்தசீர்
கலங்கொள்மாலைநண்ணும்வண்ண மெண்ணுவாழிநெஞ்சமே. ௧௧௩

ஈனமாயவெட்டுநீக்கி யேதமின்றிமீதுபோய்
வானமாளவல்லையேல் வணங்கிவாழ்த்தென்னெஞ்சமே
ஞானமாகிநாயிறாகி ஞாலமுற்றுமோரெயிற்று
ஏனமாயிடந்தமூர்த்தி யெந்தைபாதமெண்ணியே. ௧௧௪

அத்தனாகியன்னையாகி யாளுமெம்பிரானுமாய்
ஒத்தொவ்வாதபல்பிறப் பொழித்துநம்மையாட்கொள்வான்
முத்தனார்முகுந்தனார் புகுந்துநம்முள்மேவினார்
எத்தினாலிடர்க்கடல் கிடத்தியேழைநெஞ்சமே. ௧௧௫

மாறுசெய்தவாளரக்கன் நாலுவப்பஅன்றிலங்கை
நீறுசெய்துசென்றுகொன்று வென்றிகொண்டவீரனார்
வேறுசெய்துதம்முளென்னை வைத்திடாமையால்நமன்
கூறுசெய்துகொண்டிருந்த குற்றமென்னவல்லனே. ககசு

அச்சம்நோயொடல்லல்பல் பிறப்பவாயமூப்பிவை
வைத்தசிந்தைவைத்தவாக்கை மாற்றிவானிலேற்றுவான்
அச்சுதனநந்தகீர்த்தி யாகியந்தமில்லவன்
நச்சுநாகணைக்கிடந்த நாதன்வேதகீதனே. ககஎ

சொல்லினும்தொழிற்கணும் துடக்கறுவதன்பினும்
அல்லுநன்பகலினோடு மானமாலைகாலையும
வல்லிநாண்மலர்க்கிழத்திநாத பாதபோதினை
புல்லியுள்ளம்வீள்விலாது பூண்டுமீண்டதில்லையே. ககஅ

பொன்னிசூழரங்கமேய பூவைவண்ணமாயகேள்
என்னதாவியென்னும் வல்வினையினுள்கொழுந்தெழுந்து
உன்னபாவமென்னநின்ற வொண்சுடர்க்கொழுமலர்
மன்னவந்துபூண்டுவாட்ட மின்றியெங்கும்நின்றதே. ககசூ

இயக்கறுதபல்பிறப்பி லென்னைமாற்றியின்றுவந்து
உயக்கொள்மேகவண்ணநண்ணி யென்னிலாயதன்னுளே
மயக்கினான்றன்மன்னுசோதி யாதலாலென்னாவிதன்
இயக்கலாமறுத்தறுத விண்பவீடுபெற்றதே. கஉ0

அந்திகாலமுச்சிமூன்று மாடுகின்றதீர்த்தமும்
சந்திதர்ப்பணங்களுந் தபங்களுஞ்செபங்களும
சிந்தைமேவுஞானமுந் தினஞ்செபிக்குமந்திரம்
எந்தைராமராமராம ராமவென்னுநாமமே. கஉக

கதாவுபஞ்சபாதகங்க ளைத்துரந்தமந்திரம்
இதாமிதாமதல்லவென்று வைத்துழலுமேழைகள்
சதாவிடாமலோதுவார் தமக்குநல்லமந்திரம்
இதாமிதாமராமராம ராமவென்னும்நாமமே. கஉஉ

நானதேதுநீயதேது நடுவினின்றதேதடா
கோனதேதுகுருவதேது கூறிடுங்குலாமரே
ஆனதேதுவழிவதேது அப்புறத்திலப்புறம்
ஈனதேதுராமராம ராமவென்றநாமமே. கஉச

ஆனவஞ்செழுத்துளே யண்டமுமகண்டமும்
ஆனவஞ்செழுத்துளே யாதியானமூவரும்
ஆனவஞ்செழுத்துளே யனாதியோங்காரமும்
ஆனவஞ்செழுத்துளே யடங்கலாவதுற்றதே. கஉரு

ஓடியோடியோடியோடி யுட்கலந்தசோதியை
நாடிநாடிநாடிநாடி நாட்களுங்கழிந்துபோய்
வாடிவாடிவாடிவாடி மாண்டுபோனமாந்தர்கள்
கோடிகோடிகோடிகோடி யெண்ணிறந்தகோடியே. கஉசு

உருத்தரித்தநாடியி லொடுங்குகின்றவாயுவை
கருத்தினாலிருத்தியே கபாலமேற்றவல்லிரேல்
விருத்தரும் பாலராவர் மேனியுஞ்சிவந்திடும்
அருட்டரித்தநாதர்பாத மம்மையாதமுண்மையே. கஉஎ

வடிவுகண்டுகொண்டபெண்ணை மற்றொருவனத்தினால்
விடுவனோவனாருயிரை வெட்டவேணுமென்பனே
நடுவன்வந்தழைத்தபோது நாறுமிந்தநல்லுடல்
சுடலைமட்டுங்கொண்டுபோய்த் தோட்டிகைக்கொடுப்பரோ. கஉஅ

என்னிலேயிருந்தவொன்றை யானறிந்ததில்லையே
என்னிலேயிருந்தவொன்றை யானறிந்துகொண்டபின்
என்னிலேயிருந்தவொன்றை யாவர்காணவல்லிரோ
என்னிலேயிருந்திருந்து யானுணர்ந்துகொண்டனே. கஉகூ

நினைப்பதொன்றுகண்டிலே னீயலாதுவேறிலை
நினைப்புமாய்மறப்புமாய் நின்றமாய்கைமாய்கையை
அனைத்துமாயகண்டமா யனாதிமுன்னனாதியாய்
எனக்குள்நீயுனக்குள்நா னிருக்குமாறதெங்ஙனே. கஙo

மண்ணுநீ விண்ணுநீ மறிகடல்களேழுநீ
எண்ணுநீ எழுத்துநீ யிசைந்தபண்ணெழுத்துநீ
கண்ணுநீ மணியுநீ கண்ணுளாடும்பாவைநீ
நண்ணுநீர்மைநின்றபாதம் நண்ணுமாறருளிடாய். கஙக

அரியுமல்லவயனுமல்ல வப்புறத்திலப்புறம்
கருமைசெம்மைவெண்மையைக் கடந்துநின்றகாரணம்
பெரியதல்லசிறியதல்ல பற்றுமின்கள்பற்றுமின்கள்
துரியமுங் கடந்துநின்ற தூரதூரதூரமே. கஙஉ

சாத்திரங்களோதுகின்ற சத்தநாதபட்டரே
வேத்திரைப்புவந்தபோது வேதமவந்துதவுமோ
மாத்திரைப்போதும்முளே மறித்துநோக்கவல்லிரேல்
சாத்திரப்பற்நோய்களேது சத்திமுத்திசித்தியே. ௧௩௩

தூரந்தூரந்தூரமென்று சொல்லுவார்கள்சோம்பர்கள்
பாரும்விண்ணுமெங்குமாய் பரந்தமெய்ப்பராபரம்
ஊருநாடுகாடெலா முழன்றுதேடுமூமைகாள்
நேரதாகவும்முளே யறிந்துணர்ந்துகொள்ளுமே, ௧௩௪

நாலுவேதமோதுவீர் ஞானபாதமறிகிலீர்
பாலுநெய்கலந்தவாறு பாவிகாளறிகிலீர்
ஆலமுண்டகண்டனு ரகத்துளேயிருக்கவே
காலனென்றுசொல்லுவீர் கனவிலும்மதில்லையே. ௧௩௫

வித்திலாதசம்பிரதாய மேலுமில்லைகீழுமில்லை
தச்சிலாதமாளிகை சமைந்தவாறதெங்ஙனே
பெற்றதாயைவிற்றடிமை கொள்ளுகின்றபேதைகாள்
சித்திலாதபோதுசீவ னில்லையில்லையில்லையே. ௧௩௬

அஞ்சுமூணுமெட்டடா வநாதியானமந்திரம்
நெஞ்சிலேநினைந்துகொண்டு நூறுருசெபிப்பிரேல்
பஞ்சமானபாதகங்க ளூறுகோடிசெய்யினும்
பஞ்சுபோல்பறக்குமென்று நான்மறைகள்பன்னுமே. ௧௩௭

அண்டவாசலாயிரம்ப்ர சண்டவாசலாயிரம்
ஆறிரண்டுநூறுகோடி யானவாசலாயிரம்
இந்தவாசலேழைவாச லேகபோகமானவாசல்
எம்பிரானிருக்கும்வாச லியாவர்காணவல்லரே. ௧௩௮

சாமநாலுவேதமுஞ் சகலசாத் திரங்களும்
ஏமஜாமபோதிலும் பிரைவனையறிகிலீர்
காமநோயைவிட்டுநீர் கருத்துளேயுணர்ந்தபின்
ஊனமற்றகாயமா யிருப்பனெங்களீசனே. ௧௩௯

சங்கிரண்டுதாரையொன்று சன்னபின்னலாகையால்
மங்கிமாளுதேயுலகில் மானிடங்களெத்தனை
சங்கிரண்டையுந்தவிர்த்து தாரையூதவல்லிரேல்
கொங்கைமங்கைபங்கரோடு கூடிவாழலாகுமே. ௧௪0

கனகமொன்றுரூபம்வேறு தன்மையானவாறுபோல்
செங்கண்மாலுமீசனுஞ் சிறந்திறந்ததெம்முளே
விங்களங்கள்பேசுவார் விளங்குகின்றமாந்தரே
எங்குமாகிநின்றநாமம் நாமமிந்தநாமமே. ௧௪௧

அஞ்செழுத்திலேபிறந்து அஞ்செழுத்திலேவளர்ந்து
அஞ்செழுத்தையோதுகின்ற பஞ்சபூதபாவிகாள்
அஞ்செழுத்திலோரெழுத் தறிந்துகூறவல்லிரால்
அஞ்சலஞ்சலென்றுநாத னம்பலத்திலாடுமே. ௧௪௨

அஞ்சுமஞ்சுமஞ்சுமே யனாதியானதஞ்சுமே
பிஞ்சுபிஞ்சுதல்லவோ பித்தர்காள்பிதற்றுநீர்
நெஞ்சிலஞ்சுகொண்டுநீர் நின்றுநோக்கவல்லிரேல்
அஞ்சுமில்லையாறுமில் லனாதியானதோன்றுமே. ௧௪௩

நீளவீடுகட்டுநீ ரெடுங்கதவுசாத்துநீர்
வாழவேணுமென்றலோ மகிழ்ந்திருந்தமாந்தரே
காலனோலைவந்தபோது கைகலந்துநின்றிடும்
ஆலமுண்டகண்டர்பாத மம்மைபாதமுண்மையே. ௧௪௪

வீடெடுத்துவேள்விசெய்து மெய்யரோடுபொய்யுமாய்
மாடுமக்கள்பெண்டிர்சுற்ற மென்றிருக்குமாந்தர்காள்
நாடுபெற்றநடுவர்கையி லோலைவந்தழைத்திடில்
ஓடுபெற்றதவ்விலை பொருதுகாணுமுடலமே. ௧௪௫

ஓடமுள்ளபோதெலா மோடியேயுலாவலாம்
ஓடமுள்ளபோதெலா முறுதிபண்ணிகொள்ளலாம
ஓடமுடைந்தபோது வொப்பிலாதவெளியிலே
ஆடுமில்லைகோனுமில்லை யாருமில்லையானதே. ௧௪௬

அண்ணலேயனாதியே யனாதிமுன்னனாதியே
பெண்ணுமாணுமொன்றலோ பிறப்பதற்குமுன்னெலாம்
கண்ணிலாணிசுக்கிலங் கருதியோரங்குநாளிலே
மண்ணுளோருமவிண்ணுளோரும் வந்தவாறதெங்ஙனே. ௧௪௭

பண்டுநான்பறித்தெறிந்த பன்மலர்களெத்தனை
பாழிலேசெபித்துவிட்ட மந்திரங்களெத்தனை
சண்டையாற்படித்தெறிந்த சமயபுத்தகத்தனை
சாமிசாமியெனத்தொழுது தண்டனிட்டதெத்தனை ௧௪௮

பிண்டராய்த்திரிந்தபோ திறைத்தநீர்களெத்தனை
மீளவுஞ்சிவாலயங்கள் சூழவந்ததெத்தனை
அண்டர்கோனிருப்பிட மறிந்துணர்ந்தஞானிகள்
கண்டகோயில்தெய்வமென்று கையெடுப்பதில்லையே. ௧௪௯

நெருப்பைமூட்டிநெய்யைவிட்டு நித்தநித்தநீரிலே
விருப்பமோடுநீர்குளிக்கும வேதவாக்கியங்களும்
நெருப்புநீருமும்முளே நினைந்துகூறவல்லிரேல்
அருக்கமற்றசோதியைத் தொடர்ந்துகூடலாகுமே. ௧௫0

பாட்டிலாதபரமனைப் பரமலோகநாதனை
நாட்டிலாதநாதனை நாரிபங்கர்பாகனை
கூட்டிமெள்ளவாய்புதைத்து குணுகுணுத்தமந்திரம்
வேட்டகாரர்குசுகுசுப்பு கூப்பிடார்முகிஞ்சதே. ௧௫௧

செய்யதெங்கிலேயிளநீர் சேர்ந்தகாரணங்கள்போல்
ஐயன்வந்துஎன்னுளம் புகுந்துகோயில்கொண்டனன்
ஐயன்வந்துஎன்னுளம் புகுந்துகோயில்கொண்டபின்
வையகத்தில்மாந்தர்முன்னம் வாய்திறப்பதில்லையே ௧௫௨

மாறுபட்டுமணிதுலக்கி வண்டினெச்சில்கொண்டுபோய்
ஊறுபட்டகல்லின்மீதே யூற்றுகின்றமூடரே
மாறுபட்டதேவரு மறிந்துநோக்குமென்னையும்
கூறுபட்டுதீர்க்கவோ குருக்கள்பாதம்வைத்ததே. ௧௫௩

கோயிலாவதேதடா குளங்களாவதேதடா
கோயிலுங்குளங்களுங் கும்பிடுங்குலாமரே
கோயிலுமனத்துளே குளங்களுமனத்துளே
ஆவதுமழிவது மில்லையில்லை யில்லையே. ௧௫௪

செங்கலுங்கருங்கலுஞ் சிவந்தசாதிலிங்கமும்
செம்பிலேதிராவிலுஞ் சிவனிருப்பனென்கிறீர்
உன்பதமறிந்துநீ ரும்மைநீரறிந்தபின்
அம்பலம்நிறைந்தநாத ராடல்பாடலாகுமே. ௧௫௫

பூசைபூசையென்றுநீர் பூசைசெய்யும்பேதைகாள்
பூசையுன்னதன்னிலே பூசைகொண்டதெவ்விடம்
ஆதிபூசைகொண்டதோ வனாதிபூசைகொண்டதோ
ஏதுபூசைகொண்டதோ வின்னதென்றியம்புமே. ௧௫௬

இருக்குநாலுவேதமு மெழுத்தைவேயோதினும்
பெருக்கநீறுபூசினும் பிதற்றினும்பிரானிரான்
உருக்கிநெஞ்சையுட்கலந் துண்மைகூறவல்லிரேல்
சுருக்கமற்றசோதியைத் தொடர்ந்துகூடலாகுமே. ௧௦௭

கலத்தில்வார்த்துவைத்தநீர் கடுத்ததீமுழுக்கினல்
கலத்திலேகரந்ததோ கடுத்ததீகுடித்ததோ
நிலத்திலேகரந்ததோ நீள்விசும்புகொண்டதோ
மனத்தின்மாயைநீக்கிலே மனத்துளேகரந்ததே. ௧௦௮

பறைச்சியாவதேதடா பணத்தியாவதேதடா
இறைச்சிதோலெலும்பினு மிலக்கமிட்டிருக்குதோ
பறைச்சிபோகம்வேறதோ பணத்திபோகம்வேறதோ
பறைச்சியும்பணத்தியும் பகுத்துபாருமும்முளே. ௧௦௯

வாயிலேகுடித்தநீரை யெச்சிலென்றுசொல்லுறீர்
வாயிலேகுதப்புவேதம் மெனப்படக்கடவதோ
வாயிலெச்சில்போகவென்று நீர்தனைக்குடிப்பிர்காள்
வாயிலெச்சில்போனவண்ணம் வந்திருந்துசொல்லுமே. ௧௧௦

ஓதுகின்றவேதமெச்சி லுள்ளமந்திரங்களெச்சில்
போதகங்களானதெச்சில பூதலங்களேழுமெச்சில்
மாதிருந்தவிந்துவெச்சில் மதியுமெச்சிலொளியுமெச்சில்
ஏதிலெச்சிலில்லதில்லை யில்லையில்லையில்லையே. ௧௧௧

பிறப்பதற்குமுன்னெலா மிருக்குமாறதெங்ஙனே
பிறந்துமண்ணிறந்தபோ யிருக்குமாறதெங்ஙனே
குறித்துநீர்சொலாவிடிற் குறிப்பிலாதமாந்தரே
அறுப்பனேசெவியிரண்டு மஞ்செழுத்துவாளினல். ௧௧௨

அம்பலத்தையம்புகொண் டசங்கென்றாலசங்குமோ
கம்பமற்றபாறகடல் கலங்கென்றால்கலங்குமோ
இன்பமற்றயோகியை யிருளும்வந்தணுகுமோ
செம்பொனம்பலத்துளே தெளிந்ததேசிவாயமே. ௧௧௩

சித்தமேதுசிந்தையேது சிவனேதுசித்தரே
சத்தியேதுசம்புவேது சோதியேதுமற்றது
முத்தியேதுமூலமேது மூலமந்திரங்களேது
வித்திலாதவித்திலே யின்னதென்றியம்புமே. ௧௧௪

சித்தமற்றுசிந்தையற்று சீவனற்றுநின்றிடம்
சத்தியற்றுசம்புவற்று சாதியேதமற்றுநன்
முத்தியற்றுமூலமற்று மூலமந்திரங்களும்
வித்தைவித்தையின்றவித்தில் விளைந்ததேசிவாயமே. கசு

சாதியாவதேதடா சலந்திரண்டநீரெலாம்
பூதவாசலென்றலோ பூதமைந்துமொன்றலோ
காதில்வாளிகாரைகம்பி பாடகம்பொனென்றலோ
சாதிபேதமோதுகின்ற தன்மையென்னதன்மையே. கசு

கறந்தபால்முலைப்புகா கடைந்தவெண்ணைமோர்புகா
துடைந்துபோனசங்கினோசை யுயிர்களுமுடற்புகா
விரிந்தபூவுதிர்ந்தகாயு மீண்டுபோய்மரம்புகா
இறந்தவர்பிறப்பதில்லை யில்லையில்லையில்லையே. கசு

தரையினிற்கிடந்தபோ தன்றுதூமையென்றிலீர்
துறையறிந்துநீர்குளித்த தன்றுதூமையென்றிலீர்
பறையறைந்துநீர்பிறந்த தன்றுதூமையென்றிலீர்
புறையிலாதவீசரோடு பொருந்துமாறதெங்ஙனே. கசு

தூமைதூமையென்றுநீர் துவண்டலையுமேழைகாள்
தூமையானபெண்ணிருக்க தூமைபோனதெவ்விடம்
ஆமைபோலமுழுகிவுந் தனேகவேதமோதுவீர்
தூமையுந்திரண்டுருண்டு சொற்குருக்களானதே. கசுச

சொற்குருக்களானதுஞ் சோதிமேனியானதும்
மெய்க்குருக்களாயினும் வேணபூசைசெய்கினும்
சற்குருக்களாயினுஞ் சாத்திரங்கள்சொல்லினும்
மெய்க்குருக்களாயினுந் திரண்டுருண்டதூமையே. கஎ

கைவடங்கள்கொண்டுநீர் கண்சிமிட்டிநிற்கிறீர்
எவ்விடங்கள்கண்டுநீ ரெண்ணியெண்ணிபார்க்கிறீர்
பொய்யுணர்ந்தசிந்தையைப் பொருந்திநோக்கவல்லிரேல்
மெய்கடந்ததும்முளே விளைந்துகூறலாகுமே. கஎ

ஆடுகாட்டிவேங்கையை யகப்படுத்துமாறுபோல்
மாடுகாட்டியென்னைநீ மதிமயக்கலாகுமோ
கோடுகாட்டியானையைக் கொன்றுரித்தகொற்வா
வீடுகாட்டியென்னைநீ வெளிப்படுத்தவேணுமே. கஎஉ

இடதுகண்கள்சந்திரன் வல[illegible] [illegible]
இடக்கைசங்குசக்கரம் வலக்கை[illegible]
எடுத்தபாதம்நீண்முடி யெண்டிசைக்கும[illegible]ம்
உடல்கலந்துநின்றமாயம யாவர்காணவல்லரே. [illegible]

நாழியுப்புநாழியுப்பு நாழியானவாறுபோல்
ஆழிபோனுமீசனு மமர்ந்துவாழ்ந்திருந்திடம்
எருதிலேறுமீசனு மியங்குசக்ரதரனையும
வேறுகூறுபேசுவார் வீழ்வர்வீணரகிலே. [illegible]

தில்லைநாயகனவன் திருவரங்கனுமவன்
எல்லையானபுவனமு மேகமூர்த்தியானவன்
பல்லுநாவுமுள்ளபேர் பகுந்துகூறிமகிழுவார்
வல்லபங்கள்பேசுவார் வாய்புழுத்துமாய்வரே. [illegible]

எத்திசைக்குமெவ்வுயிர்க்கு மெங்களப்பனெம்பிரான்
முத்தியானவித்துளே முளைத்தெழுந்தவச்சுடர்
சித்தமுந்தெளிந்துவேத கோயிலுந்திறந்தபின்
அத்தனுடல்கண்டபின் னடங்கலாடல்காணுமே. [illegible]

உற்றநூல்களும்முளே யுணாந்துணர்ந்துபாடுவீர்
பற்றறுத்துநின்றுநீர் பராபரங்கருதிலீர்
செற்றபாவையுள்ளரைச் செருக்கறுத்திருத்திடில்
சுற்றமாகவும்முளே சோதியென்றும்வாழுமே. [illegible]

போதடாவெழுந்ததும் புனலதாகிவந்ததும்
நாதடாபுகுந்ததும் தானடாவிளைந்ததும்
ஓதடாவஞ்சுமூன்று,மொன்றதானவக்கரம
ஓதடாவிராமராம ராமமென்னுநாமமே. [illegible]

அகாரமென்றவககரத்து ளவ்வுவந்துதித்ததோ
உகாரமென்றவக்கரத்தி லுவ்வுவந்துதித்ததோ
அகாரமும்உகாரமுஞ் சிகாரமன்றிநின்றதோ
விகாரமற்றயோகிகாள் விரித்துரைக்கவேணுமே. [illegible]

அறத்திறஙகளுக்குநீ யகண்டமெண்டிசைக்கும்நீ
திறத்திறங்களுக்குநீ தேடுவார்கள்[illegible]
உறக்கம்நீயுணர்வுநீ யுட்கலந்தசோதிநீ
மறக்கொணாதநின்கழல் மறப்பினுங்குடி[illegible]ளே. [illegible]

அண்டம்நீயகண்டம்நீ யாதிமூல மானநீ
கண்டம்நீகருத்துநீ காவியங்களானநீ
புண்டரீகமற்றுளே புணருகின்ற புண்ணியர்
கண்டகோலமானநேர்மை கூர்மையென்னகூர்மையே. கஅ

மையடர்ந்தகண்ணினர் மயக்கிடும்மயக்கிலே
மையிறந்துகொண்டுநீங்க ளல்லலற்றிருப்பீர்காள்
மெய்யடர்ந்தசிந்தையால் விளங்குஞானமெய்தினல்
உய்யடர்ந்துகொண்டுநீங்க ளூழிகாலம்வாழ்விரே. கஅஉ

கருவிருந்தவாசலாற் கலங்குகின்றஊமைகாள்
குருவிருந்துசொன்னவார்த்தை குறித்துநோக்கவல்லிரேல்
உருவிலங்குமேனியாகி யம்பராகிநின்றநீர்
திருவிலங்குமேனியோடு சென்றுகூடலாகுமே. கஅங

தீர்த்தமாடவேணுமென்று தேடுகின்றதீனர்காள்
தீர்த்தமாடவெவ்விடந் தெளிந்துநீரியம்பிலீர்
தீர்த்தமாகவும்முளே தெளிந்துநீரிருந்தபின்
தீர்த்தமாகவுள்ளதுஞ் சிவாயமஞ்செழுத்துமே. கஅச

கழுத்தையும்நிமிர்த்திநல்ல கண்ணையும்விழித்துநீர்
பழுத்துவாய்விழுந்துபோன பாவமென்னபாவமே
அழுத்தமானவித்திலே யனாதியாயிருப்பதோர்
எழுத்திலோவெழுத்திலே யிருக்கலாமிருத்துமே கஅரு

கண்டுநின்றமாயையுங் கலந்துநின்றபூதமும்
உண்டுறங்குமாறுநீ குணர்ந்திருக்கவல்லிரேல்
பண்டையாறுமொன்றுமாய்ப் பயந்தவேதசுத்தனாய்
அண்டமுத்தியாகிநின்ற வாதிமூலமூலமே. கஅசு

ஈன்றவாசலுக்கிரங்கி யெண்ணிறந்துபோவிர்காள்
கான்றவாழைமொட்டலர்ந்த காரணமறிகிலீர்
நான்றவாசலைத்திறந்து நாடிநோக்கவல்லிரேல்
தோன்றுமாயைவிட்டொழிந்து சோதிவந்துதோன்றுமே. கஅ

உழலும்வாசலுக்கிரங்கி யூசலாடுமூமைகாள்
உழலும்வாசலைத்திறந்து வுண்மைசேரவெண்ணிலீர்
உழலும்வாசலைத்திறந்து வுண்மைநீருணர்ந்தபின்
உழலும்வாசலுள்ளிருந்த வுண்மைதானுமாவிரோ. கஅ

மூலநாடி தன்னிலே முளைத்தெழுந்த சோதியை
நாடிநாடியும்முளே நாழிகையிருந்தபின்
பாலனாகிவாழலாம் பகலிரவுகாணலாம
ஆலமுண்டகண்டரானை யம்மையானையுண்மையே. க[illegible]

இருக்கவேணுமென்றபோ திருக்கலாயிருக்குமோ
மரிக்கவேணுமென்றலோ மண்ணுளோ படைத்தனர்
சுருக்கமற்றதம்பிரான் சொன்னவஞ் செழுத்தையும்
மரிக்குமுன்வணங்கிடீர் மருந்தெனப்பதங்கெடீர். க௱

அன்பத்தோரிலக்கமு மடங்கலோரெழுத்திலோ
விண்பரந்தமந்திரம் வேதநான்குமொன்றலோ
விண்பரந்தமூலவஞ் செழுத்துளேமுளைத்ததே
அங்கலிங்கபீடமா யமர்ந்ததேசிவாயமே க௱க

சிவாயவென்றவக்ஷரஞ் சிவனிருக்கு மக்ஷரம்
உபாயமென்றுநம்புதற்கு உண்மையானவக்ஷரம்
கபாடமற்றவாசலைக் கடந்துபோகும்வாயுவை
உபாயமிட்டழைக்குமே சிவாயமஞ் செழுத்துமே. க௱உ

உருவுமல்லவெளியுமல்ல வொன்றைமேவிநின்றதல்
மருவுவாசல்சொந்தமல்ல மற்றதல்லவற்றதல்ல
பெறியதல்லசிறியதலல பேசலானதானுமல்ல
உரியதாகிநின்றநேர்மை யாவர்காணவல்லரே. க௱ங

ஆத்துமாவனாதியோ வனாத்துமாவனாதியோ
பூத்திருந்தஐம்பொறி புலன்களுமனாதியோ
தாக்கமிக்கநூல்களுஞ் சதாசிவமனாதியோ
வீக்கவந்தயோகிகாள் விரித்துரைக்கவேணுமே. க௱ச

அறிவிலேபிறந்திருந்து ஆகமங்களோதுநீர்
நெறியிலேமயங்குகின்ற நேர்மையொன்றறிகிலீர்
உறியிலேதயிரிருக்க வூர்புகுந்துவெண்ணெய்தேடும்
அறிவிலாதமாந்தரோ டணுகுமாறெதங்ஙனே. க௱ரு

இருவரங்கமும்பொருந்தி யென்புருகிநோக்கிலீர்
உருவரங்கமாகிநின்ற வுண்மையொன்றையோர்கிலீர்
கருவரங்கமாகிநின்ற கற்பனைகடந்துபின்
திருவரங்கமென்றுநீர் தெளிந்திருக்க வல்லிரே. க௱சா

கருக்குழியிலாசையாய்க் காதலுற்றுநிற்கிறீர்
குருக்கிடுக்குமேழைகாள் குலாவுகின்றபாவிகாள்
திருத்திருத்திமெய்யினுற் சிவந்தவஞ்செழுத்தையும்
உருக்கழிக்குமும்மையு முணர்ந்துணர்ந்துகொள்ளுமே. க௯௭

மண்ணிலேபிறக்கவும் வழக்கலாதுரைக்கவும்
எண்ணிலாதகோடிதேவ ரென்னதுன்னதென்னவும்
கண்ணிலேமணியிருக்கக் கண்மறைந்தவாறுபோல்
எண்ணில்கோடிதேவரு மிதன்கணால்விழிப்பதே. க௯௮

மண்கலங்கவர்ந்தபோது வைத்துவைத்தடுக்குவார்
வெங்கலங்கவர்ந்தபோது வேணுமென்றுபேணுவார்
நங்கலங்கவர்ந்தபோது நாறுமென்று போடுவார்
எண்கலந்துநின்றமாய மென்னமாயமீசனே க௯௯

மிக்கசெல்வநீபடைத்த விற்குமேவிப்பாவிகாள்
விறகுடன்கொளுத்திமேனிவந்துபோவ தறிகிலீர்
மக்கள்பெண்டிர்சுற்றமென்று மாயைகாணுமிவையெலாம்
மறலிவந்தழைத்தபோது வந்துகூடலாகுமோ. ௨௦௦

ஓககவந்துமாதுடன் செறிந்திடத்துலழகியே
ஒருவராகியிருவராகி யிளமைபெற்றவூரிலே
அக்கணிந்துகொன்றைசூடி மம்பலத்திலாடுவார்
அஞ்செழுத்தையோதிடி னனேகபாவமகலுமே ௨௦௧

மாடுகன்றுசெல்வமு மனைவிமைந்தர்மகிழவே
மாடமாளிகைபுறத்தில் வாழுகின்றநாளிலே
ஓடிவந்துகாலதூதர் சடுதியாகமோதவே
உடல்கிடந்துயிரகழன்ற வுண்மைகண்டுமுணர்கிலீர். ௨௦௨

பாடுகின்றதுப்பருக்கண் தங்களுக்களுக்கியே
பழுதிலாதகன்மகூட்ட மிட்டவெங்கள்பரமனே
நீதிசெம்பொனம்பலத்து ளாடுகொண்டவப்பனே
நீலகண்டகாளகண்டநித்யகல்வி யாணனே. ௨௦௩

கானமற்றகாட்டகத்தில் வெந்தெழுந்தநீறுபோல்
ஞானமுற்றநெஞ்சகத்தில் வல்லதேதுமில்லையே
ஊனமற்றசோதியோ டுணர்வுசேர்ந்தடக்கினல்
தேனகத்தினூறல்போல் தெளிந்ததேசிவாயமே. ௨௦௪

பருகியோடியும்முளே பறந்துவந்தவெளிதனை
நிரவியேநினைந்துபார்க்கில் நின்மலமதாகுமே
உருகியோடியெங்குமாய மாயசோதிதன்னுளே
கருடாதவுனக்குநல்ல காரணமதாகுமே. உ0௭

சோதிபாதியாகிநின்ற சுத்தமும் பலித்துவந்து
போதியாதபோதகத்தை யோதுகின்றபூரணா
வீதியாகவோடிவந்து விண்ணடியினூடுபோய்
ஆதிநாதனுதனென் றனந்தகாலமுள்ளதே. உ0அ

இறைவனெடுத்தமாடத் தில்லையம்பலத்திலே
அறிவினாலடுத்தகாய மஞ்சினாலமர்ந்ததே
கருவிநாதமுண்டுபோய் கழன்றவாசலொன்பதும்
ஒருவராயொருவர்கோடி யுள்ளுளேயமர்ந்ததே உ0௯

நெஞ்சிலேயிருந்திருந்து நெருக்கியோடும்வாயுவை
அன்பினாலிருந்துநீ ருருகிருத்தவல்லிரேல்
அன்பர்கோயில்காணலா மகன்றுமெண்டிசைக்குளே
தும்பியோடியோடியோடி சொல்லடாசுவாமியே. உ0௯

தில்லையைவணங்கிநின்று தெண்டனிட்டவாயுவை
எல்லையைக்கடந்துநின்று ஏகபோகமாய்கையோ
வெல்லையைக்கடந்துநின்று சொர்க்கலோகவெளியிலே
வெள்ளையுஞ்சிவப்புமாகி மெய்கலந்துநின்றதே. உ0௬

உடம்புயிரெடுத்ததோ வுயிருடம்பெடுத்ததோ
உடம்புயிரெடுத்தபோ துருவமேதுசெப்புவீர்
உடம்புயிரிறந்துபோ புயிரிறப்பதில்லையே
உடம்புமெய்மறந்துகண் டுணர்ந்துஞானமோதுமே. உ௧0

அவ்வெனுமெழுத்தினா லகண்டமேழுமாகினாய்
உவ்வெனுமெழுத்தினா லுருத்தரித்துநின்றனை
மவ்வெனுமெழுத்தினால் மயங்கினார்கள்வையகம்
அவ்வுமுவ்வும்மவ்வுமா யமர்ந்ததேசிவாயமே. உ௧௧

மந்திரங்களுண்டுநீர் மயங்குகின்றமானிடர்
மந்திரங்களாவது மரத்திலூறலன்றுகாண்
மந்திரங்களாவது மதத்தெழுந்தவாயுவை
மந்திரத்தையுண்டவர்க்கு மானமேதுமில்லையே. உ௧உ

என்னவென்றுசொல்லுவே னிலக்கணமிலாததைப்
பண்ணுகின்றசெந்தமிழ்ப் பதங்கடந்தபண்பென
மின்னகத்தில்மின்னொடுங்கி மின்னதானவாறுபோல்
என்னகத்துளீசனும் யானுமல்லதில்லையே. உகங

ஆலவித்திலாலொடுங்கி யாலமானவாறுபோல்
வேறுவித்துமின்றியே விளைந்துபோகமெய்திடீர்
ஆறுவித்தையோர்கிலீ ரறிவிலாதமாந்தரே
பாருவித்தையும்முளே பரப்பிரமமானதே. உகச

அவ்வுதித்தமந்திர மகாரமாய்உகாரமாய்
எவ்வெழுத்தறிந்தவர்க் கெழுபிறப்பு தீங்கிலை
சவ்வுதித்தமந்திரத்தைத் தற்பரத்திருத்தினால்
அவ்வுமுவ்வுமவ்வுமா யமர்ந்ததேசிவாயமே. உகரு

நவ்விரண்டுகாலதாய் நவின்றமவ்வயிறதாய்
சிவ்விரண்டுதோளதாய் சிறந்தவவ்வுவாயதாய்
யவ்விரண்டுகண்ணதா யெழுந்துநின்றநேர்மையிற்
செவ்வையொத்துநின்றதே சிவாயமஞ்செழுத்துமே. உகசு

இரண்டுமொன்றுமூலமா யியங்குசக்கரத்துளே
சுருண்டுமூன்றுவளையமாய் சுணங்குபோற்கிடந்ததீ
முரண்டெழுந்தசங்கினோசை மூலநாடியூடுபோய
அரங்கன்பட்டணத்திலே யமர்ந்ததேசிவாயமே உகஎ

கடலிலேதிரியுபாமை கரையிலேறிமுட்டையிட்டுக்
கடலிலே திரிந்தபோது ரூபமானவாறுபோல்
மடலுளேயிருக்குமெங்கள் மணியரங்கசோதியை
உடலுளேநினைக்கமிக்க உண்மையாகும்உண்மையே உகஅ

மூன்றுமண்டத்தினு முட்டிநின்றதூணிலும்
நான்றபாம்பின்வாயிலும் நவின்றெழுந்தவட்சரம்
ஈன்றதாயுமப்பனு மெடுத்துரைத்தமந்திரம்
தோன்றுமோரெழுத்துளே சொல்லவெங்குதில்லையே. உககூ

மூன்றுமூன்றுமூன்றுமே மூவர்தேவர்தேடிடும்
மூன்றுமஞ்செழுத்துமாய் முழங்குமவ்வெழுத்துளே
ஈன்றதாயுமப்பரு மியங்குகின்றநாதமும்
தோன்றுமண்டலத்திலே சொல்லவெங்குதில்லையே. உஉ

சோறுகின்றபூதம்போற் சுணங்குபோற்கிடந்தநீ
நாறுகின்றகும்பியி னவின்றெழுந்தமூடரே
சீறுகின்றவைவரைச் சிணுக்கறுக்கவல்லிராய்
ஆறுகோடிவேணியா ராறிலொன்றிலாவரே. உஉக

வட்டமென்றுவும்முளே மயங்கிவிட்டவிவ்வெளி
அட்டரக்கரத்துளே யடக்கமுமொடுக்கமும்
எட்டுமெட்டுமெட்டுமாயியங்குசக்கரத்துளே
எட்டலாமுதித்ததெம்பி ரானைநானறிந்தபின். உஉஉ

பேசுவானுமீசனே பிரமஞானமும்முளே
ஆசையானவைவரு மலைந்தலைகள்செய்கிறார்
ஆசையானவைவரை யடக்கியோரெழுத்திலே
பேசிடாதிருப்பிரேல் நாதம்வந்தொலிக்குமே. உஉஈ

நமசிவாயவஞ்செழுத்தும் நிற்குமேநிலைகளும்
நமசிவாயமஞ்சுமஞ்சும் புராணமானமாய்கையை
நமசிவாயமஞ்செழுத்தும் நம்முளேயிருக்கவே
நமசிவாயவுண்மையை நற்குரைசெய்நாதனே. உஉச

பரமுனக்கெனக்குவேறு பயமிலைபராபரா
கரமெடுத்துநிற்றலுங் குவித்திடக்கடப்படா
சிரமுருகியமுதளித்த சீருலாவுநாதனே
வரமெனக்குநீயளித்த ஓம்நமசிவாயமே. உஉரு

பச்சைமண்பதுப்பிலே பழுப்பதிந்தவேட்டுவன்
நித்தமும்நினைந்திட நினைந்தவண்ணமாயிடும்
பச்சைமண்ணிடிந்துபோய் பறந்ததும்பியாயிடும்
பித்தர்காளறிந்துகொள் பிரானிருந்தகோலமே. உஉசு

ஒளியதானகாசிமீது வந்துதங்குவோர்க்கெலாம்
வெளியதானசோதிமேனி விசுவநாதனானவன்
தெளியுமங்கையுடனிருந்து செப்புகின்றதாரகம்
வெளியசோரிராமராம நாமமிந்தநாமமே. உஉஎ

விழியினோடுபுனல்விளைந்த வில்லவல்லியோனியும்
வெளியிலேபிதற்றலாம் விளைவுநின்றதில்லையே
வெளிபரந்ததேசமும் வெளிக்குள்மூலவித்தையும்
தெளியும்வல்லஞானிகள் தெளிந்திருத்தலின்னமே. உஉஅ

ஓம்நமசிவாயமே யுணர்ந்துமெய்யுணர்ந்துபின்
ஓம்நமசிவாயமே யுணர்ந்துமெய்தெளிந்தபின்
ஓம்நமசிவாயமே யுணர்ந்துமெய்யுணர்ந்தபின
ஓம்நமசிவாயமே யுட்கலந்துநிற்குமே. உஉகூ

அல்லல்வாசலொன்பது மறுத்தடைந்தவாசலும்
சொல்லும்வாசலோரைந்து சொம்மிவிம்மிநின்றது
நல்லவாசலைத்திறந்து ஞானவாசலூடுபோய்
எல்லைவாசல்கண்டவ ரினிப்பிறப்பதில்லையே. உ௩0

ஆதியானதொன்றுமே யனேகனேகரூபமாய்
சாதிபேதமாயெழுந்து சர்வசீவனானபின்
ஆவியோடுஆடுகின்ற மீண்டுமிந்தசென்மமாம்
சோதியானஞானியர்க்குஞ் சுத்தமாயிருப்பரே. உ௩க

மலர்ந்ததாதுமூலமாய் வையகமலர்ந்ததும்
மலர்ந்தபூமயக்கம்வந் தடுத்ததும்விடுத்ததும்
புலன்களைந்தும்பொறிகலங்கி பூமிமேல்விழுந்ததும்
இனங்கலங்கிநின்றமாய மென்னமாயமீசனே. உ௩உ

பாரடங்கவுள்ளதும் பரந்தவானுள்ளதும்
ஓரிடமுமன்றியே யொன்றிநின்றவொண்சுடர்
ஆரிடமுமன்றியே யகத்துளும்புறத்துளும்
சீரிடங்கள்கண்டவர் சிவன்தெரிந்தஞானியே. உ௩௩

மண்கிடாரமேசுமந்து மலையுளேறிமறுகுறீர்
எண்படாதகாரியங்க ளியலுமென்றுகூறுநீர்
தம்பிரானைநாள்கடோறுந் தரையிலேதலைபடக்
கும்பிடாதமாந்தரோடு கூடிவாழ்வதெங்ஙனே. உ௩ச

நாவிநாலழிந்ததும் நலங்குல மழிந்ததும்
மேவுதேரழிந்ததும் விசாரமுங்குறைந்ததும்
பாவிகாளிதென்னமாயம் வாமநாடுபூசலாய்
ஆவியாரடங்கினு லெவருமடங்குவார். உ௩௫

வீடெடுத்துவேள்விசெய்து மெய்யரோடுபொய்யுமாய்
மாடுமக்கள்பெண்டிர்சுற்ற மென்றிருக்குமாந்தர்காள்
நாடுபெற்றநண்பர்கையி லோலைவந்தழைத்தபோது
ஆடுபெற்றதவிலை பெறாதுகாணுமிவ்வுடல். உ௩௬

இல்லை இல்லையென்றுநீ ரியம்புகின்றவேழைகாள்
இல்லையென்றுநின்றதொன்றை யில்லையென்னலாகுமோ
இல்லையல்லவொன்றுமல்ல விரண்டுமொன்றிநின்றதை
எல்லைகண்டுகொண்டபே ரினிப்பிறப்பதில்லையே. ௨௩௭

காரகாரகாரகார காவலூழிகாவலன்
போரபோரபோரபோர போரில்நின்றபுண்ணியன்
மாரமாரமாரமார மரங்களேழுமெய்தசீ
ராமராமராமராம ராமமென்னுநாமமே. ௨௩௮

நீடுபாரிலேபிறந்து நேயமானகாயந்தான்
வீடுவேறிதென்றபோது வேண்டியின்பம்வேண்டுமோ
பாடிநாலுவேதமும் பாரிலே படர்ந்ததோ
ரோடுராமராமராம ராமமென்னுநாமமே. ௨௩௯

உயிருநன்மையாலுட லெடுத்துவந்திருந்திடும்
உயிருடம்பொழிந்தபோது ரூபரூபமாயிடும்
உயிர்சிவத்தின்மாய்கையாகி யொன்றையொன்றுகொன்றிடும்
உயிருசத்திமாய்கையாகி யொன்றையொன்றுதின்னுமே. ௨௪௰

எட்டெழுத்துவட்டமோ நிறைந்தபல்லியோனியும்
எட்டெழுத்தில்வட்டம்மூன்று நின்றதொன்றுகண்டிலேன்
சுட்டெழுத்திலத்ததென்று கொம்புகால்குறித்திடி
னெட்டெழுத்தில்வட்டமொன்றில் நேர்படானம்மீசனே. ௨௪௧

விண்ணிலுள்ளதேவர்க ளறியொணாதமெய்ப்பொருள்
கண்ணிலாணியாகவே கலந்துநின்றதெம்பிரான்
மண்ணிலாம்பிறப்பறுத்து மலரடிகள்வைத்தபின்
அண்ணலாருமெம்முளே யமர்ந்துவாழ்வதுண்மையே. ௨௪௨

விண்கடந்துநின்றசோதி மேலைவாசலைத்திறந்து
கண்களித்தவுள்ளுளே கலந்துபுக்கிருந்தபின்
மண்பிறந்தமாயமும் மயக்கமுமறந்துபோ
எண்கலந்தவீசனோ டிசைந்திருப்பதுண்மையே. ௨௪௩

மூலமானமூச்சதில் மூச்சறிந்துவிட்டபின்
நாலுநாளுமுன்னிலோரு நாட்டமாகிநாட்டிடில்
பாலனாகிநீடலாம் பரப்பிரமமாகலாம்
ஆலமுண்டகண்டரானை யம்மையாணையுண்மையே. ௨௪௪

மின்னெழுந்துமின்பரந்து மின்னொடுங்கும்வாறுபோல்
என்னுள்நின்றவென்னுளீச னென்னுளேயடங்குமே
கண்ணுணின்றகண்ணில்நேர்மை கண்ணறிவிலாமையால்
எண்ணுணின்றவென்னைநா னியானறிந்ததில்லையே. ௨௪௫

இருக்கலாமிருக்கலா மவனிலேயிருக்கலாம்
அரிக்குமால்பிரமனு மகண்டமேழகற்றலாம்
கருக்கொளாதகுழியிலே காலிடாதகண்ணிலே
நெருப்பறைதிறந்தபின்பு நீயும்நானுமீசனே. ௨௪௬

ஏகபோகமாகிய விருவருமொருவராய்
போகமும்புணர்ச்சியும் பொருந்துமாறதெங்ஙனே
ஆகிலுமழகிலு மதங்கனையதானபின்
சாகிலும்பிறக்கிலு மில்லையில்லையில்லையே. ௨௪௭

வேதனாலுபூதமாய் விரவுமங்கிரதாய்
பாதமேயிலிங்கமாய்ப் பரிந்துபூசைபண்ணினால்
காதில்நின்றுகடைதிறந்து கட்டறுத்தஞானிகள்
ஆதியந்தமுங்கடந் தரியவீடதாகுமே. ௨௪௮

பருத்திநூல்முரிக்கியிட்டு பஞ்சியோதுமாந்தரோ
துருத்திநூல்முரிக்கியிட்டு துன்பநீங்கவல்லிரேல்
கருத்திநூல்கலைப்படுங் காலநூல்கழிந்திடும்
திருத்திநூல்காவருஞ் சிவாயவஞ்செழுத்துமே. ௨௪௯

சாவதானதத்துவச் சடங்குசெய்யுமூமைகாள்
தேவர்கல்லுமாவரோ சிரிப்பதன்றியென்செய்வேன்
மூவராலுமறியொணாத முக்கணன்முதற்கொழுந்து
காவலாகவும்முளே கலந்திருப்பன்காணுமே. ௨௫0

காலைமாலைநீரிலே முழுகுமந்தமூடர்காள்
காலைமாலைநீரிலே கிடந்ததேரையென்பெறும்
காலமேயெழுந்திருந்து கண்கள்மூன்றிலொன்றையும்
மூலமேநினைந்திராகில் முத்திசித்தியாகுமே. ௨௫௧

எங்கள்தேவருங்கள்தேவ ரென்றிரண்டுதேவரோ
இங்குமங்குமாயிரண்டு தேவருமிருப்பரோ
அங்குமிங்குமாகிநின்ற வாதிமூர்த்தியொன்றலோ
[illegible]வாரஞ்சொன்னபேர்கள் வாய்புழுத்துமாள்வரே. ௨௫௨

இறைபறையிடைக்கிட வன்று தூமையென்கிறீர்
முறையறிந்துபிறந்தபோது மன்று தூமையென்கிறீர்
துறையறிந்துநீர்குளித்தா லன்று தூமையென்கிறீர்
பொறையிலாதநீசரோடும் பொருந்துமாறதெங்ஙனே. ௨௫௩

சத்தம்வந்தவெளியிலே சலமிருந்துவந்ததும்
மத்தமாகிநீரிலேது வண்டுமுழுமூடரே
சுத்தமேதுகட்டதேது தூய்மைகண்டுநின்றதேது
பித்தர்காயமுற்றதேது பேதமேதுவோதமே. ௨௫௪

மாதமாதந்தூமைதான் மறந்துபோனதூமைதான்
மாதமற்றுநின்றலோ வளர்ந்துரூபமானது
நாதமேதுவேதமேது நற்குலங்களேதடா
வேதமோதும்வேதியா விளைந்தவாறும்பேசடா. ௨௫௫

தூமையற்றுநின்றலோ சுதீபமற்றுநின்றது
ஆண்மையற்றுநின்றலோ வழக்கமற்றுநின்றது
தாண்மையற்றுஆண்மையற்று சஞ்சலங்களற்றுநின்ற
தூமைதூமையற்றகாலஞ் சொல்லுமற்றுநின்றதே. ௨௫௬

ஊறிநின்றதூமையை யுறைந்துநின்றசீவனை
வேறுபேசிமூடரே விளைந்தவாறதேதடா
நாறுகின்றதூமையல்லோ நற்குலங்களாவன.
சீறுகின்றமூடரேயத் தூமைநின்றகோலமே. ௨௫௭

தூமைகண்டுநின்றபெண்ணின் தூமைதானுமூறியே
சீமையெங்குமானும்பெண்ணும் சேர்ந்துலகங்கண்டதே
தூமைதானும்ஆசையாய் துறந்திருந்தசீவனை
தூமையற்றுகொண்டிருந்த தேசமேதுதேசமே. ௨௫௮

வேணும்வேணுமென்றுநீர் வீணுழன்றுதேடுவீர்
வேணுமென்றுதேடினாலு முள்ளதல்லதில்லையே
வேணுமென்றுதேடுகின்ற வேட்கையைத்திறந்தபின்
வேணுமென்றவப்பொருள் விரைந்துகாணலாகுமே. ௨௫௯

சிட்டரோதுவேதமுஞ் சிறந்தவாகமங்களும்
நட்டகாரணங்களும் நவின்றமெய்ம்மைநூல்களும்
கட்டிவைத்தபோதகங் கலைதக்குகத்தபித்தெலாம்
பொட்டதாய்முடிந்ததே பிராணனையானறிந்தபின் ௨௬௰

நூறுகோடியாகமங்கள் நூறுகோடிமந்திரம்
நூறுகோடிநாளிருந்து மோதினாலதென்பயன்
ஆறுமாறுமாறுமா யகத்திலோரெழுத்துமாய்
ஏறுசீரெழுத்தையோத வீசன்வந்துபேசுமே. ௨௪

காலைமாலைதம்மிலே கலந்துநின்றகாலனார்
மாலைகாலையாய்ச்சிவந்த மாயமேதுசெப்பிடீர்
காலைமாலையற்றுநீர் கருத்திலேயொடுங்கினால்
காலைமாலையாகிநின்ற காலனில்லையில்லையே. ௨௬௧

எட்டுமண்டலத்துளே யிரண்டுமண்டலம்வளைத்து
இட்டமண்டலத்துளே யெண்ணியாறுமண்டலம்
தொட்டமண்டலத்திலே தோன்றிமூன்றுமண்டலம்
நட்டமண்டபத்துளே நாதனாடிநின்றதே. ௨௬௩

நாலிரண்டுமண்டலத்துள் நாதனின்றதெவ்விடம்
காலிரண்டுமூலநாடி கண்டதங்குருத்திரன்
சேரிரண்டுகண்கலந்து திசைகளெட்டுமூடியே
மேலிரண்டுதான்கலந்து வீசியாடிநின்றதே. ௨௬௪

அம்மையப்பனப்புநீ யறிந்ததேயறிகிலீர்
அம்மையப்பனப்புநீ யரியயனரனுமாய்
அம்மையம்பனப்புநீ ராதியாதியானபின்
அம்மையப்பனின்னையன்றி யாருமில்லையானதே. ௨௬௫

உருத்தரிப்பதற்குமுன் னுடல்கலந்ததெங்ஙனே
கருத்தரிப்பதற்குமுன் காரணங்களெங்ஙனே
பொருத்திவைத்தபோதமும் பொருந்துமாறதெங்ஙனே
குருத்திருத்திவைத்தசொல் குறித்துணர்ந்துகொள்ளுரே. ௨௬௬

ஆதியுண்டுவந்தமில்லை யன்றுநாலுவேதமில்
சோதியுண்டுசொல்லுமில்லை சொல்லிறந்ததேதுமில்லை
ஆதியானமூவரி லமர்ந்திருந்தவாயுவும்
ஆதியன்றுதன்னையு மாரறிவரண்ணலே. ௨௬௭

புலால்புலால்புலாலதென்று பேதமைகள்பேசுமீர்
புலாலைவிட்டுமெம்பிரான பிரிந்திருந்ததெங்ஙனே
புலாலுமாய்ப்பிதற்றுமாய் பேருலாவுந்தானுமாய்
புலாலிலேமுளைத்தெழுந்த பித்தர்சானுமத்தனே. ௨௬௮

உதிரமானபால்குடித் தொக்கநீர்வளர்ந்ததும்
இரதமாயிருந்ததொன்றி ரண்டுபட்டதென்கலாம்
மதிரமாகவிட்டதேது மாங்கிசம்புலாலதென்று
சதிரமாய்வளர்ந்ததேது சைவரானமூடரே. உசுகூ

உண்டகல்லையெச்சிலென் றுள்ளெறிந்துபோடுநீர்
பண்டுமெச்சில்கைபல்லே பரமனுக்குமேறுமோ
கண்டவெச்சில்கேளடா கலந்தபாணியப்பிலே
கொண்டசுத்தமேதடா குறிப்பிலாதமூடரே. உஎ0

ஓதிவைத்தநூல்களு முணர்ந்துகற்றகல்வியும்
மாதுமக்கள்சுற்றமு மறக்கவந்தநித்திரை
ஏதுபுகவொளித்ததோ வெங்குமாகிநின்றதோ
சோதிபுக்கொளித்தமாயஞ் சொல்லடாசுவாமியே. உஎக

ஈணெருமையின்கழுத்தி லிட்டபொட்டணங்கள்போல்
மூணுநாலுசீலையில் முடிந்தவிழ்க்குமூடர்காள்
மூணுநாலுலோகமு முடிவிலாதமூர்த்தியை
ஊணியூணிநீர்முடிந்த வுண்மையென்னஉண்மையே. உஎஉ

சாவல்நாலுகுஞ்சதஞ்சு தாயதானவாறுபோல்
காயமானகூட்டிலே கலந்துசண்டைகொள்ளுதே
கூவமானகிழநரிக் கூட்டிலேபுகுந்தபின்
சாவலநாலுகுஞ்சதஞ்சுந் தானிறந்துபோனதே உஎங

மூலமாங்குளத்திலே முளைத்தெழுந்தகோரையை
காலமேயெழுந்திருந்து நாலுகட்டறுப்பிரேல்
பாலனாகிவாழலாம் பரப்பிரமமாகலாம்
ஆலமுண்டகண்டர்பாத மம்மையாதமுண்மையே. உஎச

செம்பினிற்களிம்புவந்த சீதரங்கள்போலவே
சீவனுக்கழிவுவந்த சேதியேதுசெப்பிடீர்
அம்பினிலெழுதொணாத வணியரங்கசோதியை
வெம்பிவெம்பிவெம்பியே மெலிந்துமேல்கலந்திட
செம்பினிற்களிம்புவிட்ட சேதியேதுகாணுமே. உஎரு

நாடிநாடியும்முளே நயந்துகாணவல்லிரேல
ஓடியோடிமீளுவா ரும்முளேயடங்கிடும்
தேடிவந்தகாலனும திகைத்திருந்துபோய்விடும்
கோடிகாலமும்முகந் திருந்தவாறதெங்ஙனே. உஎசு

பிணங்குகின்றதேதடா பிறந்திறந்துகெட்டமூடரே
பிணங்கிலாதபேரொளிப் பிராணனையறிகிலீர்
பிணங்குமோரிருவினைப் பிணக்கறுக்கவல்லிரேல்
பிணங்கிலாதபெரியவின்பம் பெற்றிருக்கலாகுமே. ௨௭௪

மீனிறைச்சிதின்றதில்லை யன்றுமின்றும்வேதியர்
மீனிருக்குநீரல்லோ மூழ்வதுங்குடிப்பதும்
ஆட்டிறைச்சிதின்றதில்லை யன்றுமின்றும்வேதியர்
ஆட்டிறைச்சியல்லவோ யாகநீங்களாற்றலே. ௨௭௫

மாட்டிறைச்சிதின்றதில்லை யன்றுமின்றும்வேதியர்
மாட்டிறைச்சியல்லவோ மரக்கறிக்கிடுவது
மானிறைச்சிதின்றதில்லை யன்றுமின்றும்வேதியர்
மானுரித்ததோலல்லோ மார்பினூலணிவதும். ௨௭௬

அக்கிடாரனைத்துயிர்க்கு மாதியாகிநிற்பது
முக்கிடாருமைப்பிடித்து குத்தரித்துவிட்டது
மைக்கிடாபிறந்திறந்து மாண்டுமாண்டுபோவது
மொக்கிடாலுமக்குநா லுணர்த்துவித்ததுண்மையே. ௨௮

ஐயன்வந்துமெய்யகம் புகுந்தவாறதெங்ஙனே
செய்யதிங்களங்குருட்டை நீர்புகுந்தவண்ணமே
ஐயன்வந்துமெய்யகம் புகுந்துகோவில்கொண்டபின்
வையகத்தில்மாந்தரோடு வாய்திறப்பதில்லையே. ௨௮

நவ்வுமவ்வையுங்கடந்து நாடொணாததசியின்மேல்
வவ்வுயவ்வுளுஞ்சிறந்த வண்மைஞானபோதகம்
ஒவ்வுசுத்தியுண்ணிறைந் துச்சியூடுருவியே
இவ்வகையறிந்தபேர்க ளீசனாணையீசனே. ௨௮௨

அக்கரமனாதியோ வாத்துமமனாதியோ
புக்கிருந்தபூதமும் புலன்களுமனாதியோ
தக்கமிக்கநூல்களுஞ் சாத்திரமனாதியோ
தற்பரத்தையூடறுத்த சற்குருவனாதியோ. ௨௮௩

பார்த்ததேதுபார்த்திடில் பார்வையூடழிந்திடும்
கூத்ததாயிருப்பிரேல் குறிப்பிலச்சிவமதாம்
பார்த்தபார்த்தபோதெலாம் பார்வையுமிகந்துநீர்
பூத்தபூவுங்காயுமாய் பொருந்துவீர்பிறப்பிலே. ௨௮௪

நெற்றிபத்தியுழலுகின்ற நீலமாவழக்கினைப்
பத்தியொத்திநின்றுநின்று பற்றறுத்ததென்பலன்
உற்றிருநதுபாரடா வுள்ளொளிக்குமேலொளி
அத்தனுயமாந்திட மறிந்தவன்னனாதியே. உஅரு

நீரையள்ளிநீரில்விட்டு நீநினைந்தகாரியம்
ஆரையுன்னிநீரெலா மவத்திலேயிறைக்கிறீர்
வேரையுன்னிவித்தையுன்னி வித்திலேமுளைத்தெழுந்த
சீரையுன்னவல்லிரேல் சிவபதங்கள்சேரலாம். உஅசு

நெற்றியிற்றயங்குகின்ற நீலமாம்விளக்கினை
யுய்த்துணாந்துபாரடா வுள்ளிருந்தசோதியைப்
பத்தியிற்றொடர்ந்தவர் பரமயமதானவர்
அத்தலத்திருந்தபேர்க ளவுமெனக்குநாதரே. உஅஎ

கருத்தரிக்குமுன்னெலாங் காயமநின்றதெவ்விடம்
உருத்தரிக்குமுன்னெலா முயிர்ப்புநின்றதெவ்விடம்
அருட்டரிககுமுன்னெலா மாசைநின்றதெவ்விடம்
திருக்கறுத்துக்கொண்டலோ சிவாயமென்றுகூறுவீர். உஅஅ

கருத்தரிக்குமுன்னெலாங் காயம்நின்றதேயுவில்
உருத்தரிக்குமுனனெலா முயிர்ப்புநின்றதப்புவில்
அருட்டரிககுமுன்னெலா மாசைநின்றவாயுவில்
திருக்கறுத்துக்கொண்டதே சிவாயமென்றுகூறுமே. உஅகூ

தாதராமதாதருந தலத்திலுள்ளசைவரும்
கூத்தரைப்பறைச்சிமக்கள் கூடிசெய்தகாரியம்
வீதிபோகுஞானியை விரைந்துகல்லெறிந்ததும்
பாதகங்களாகவே பலித்ததேசிவாயமே. உகூ0

ஓடியோடிபாவிழைத் துள்ளங்கால்வெளுத்ததும்
பாவியானபூனைவந்து பாலிலேகுதித்ததும்
பணிக்கன்வந்துபார்த்ததும் பாரமில்லையென்றதும்
இழையறுந்துபோனதும் என்னமாயமீசனே. உகூக

சதுரமநாலுமறையுமிட்டு தானதன்கிழான்றுமே
எதிரதானவாயுவாறு எண்ணுமம்வட்டமேவியே
உதிரந்தான்வரைகளெட்டு மெண்ணுமென்சிரசின்மேல்
கதிரதானகாயகத்தில் கலந்தெழுந்தநாதமே. உகூஉ

நாலொடாறுபத்துமேல் நாலுமூன்றுமிட்டபின்
மேலுபத்துமாறுடன் மேதிரண்டதொன்றுமே
கோலியஞ்செழுத்துளே குருவிருந்துகூறிடில்
தோலுமேனிநாதமாய்த் தோற்றிநின்றகோசமே. ௨௬௩

கோசமாயெழுந்ததுங் கூடுருவிநின்றதும்
தேசமாற்பிறந்ததுஞ் சிவாயமஞ்செழுத்துமே
ஈசனாரிருந்திட மனேகனேகமந்திரம்
ஆகமம்நிறைந்துநின்ற வைம்பத்தோரெழுத்துமே. ௨௬௪

அங்கலிங்கபீடமா யையிரண்டெழுத்திலும்
பொங்குதாமரையினும் பொருந்துவார்மரத்தினும்
பங்குகொண்டசோதியும் பரந்தவஞ்செழுத்துமே
சிங்கநாதவோசையுஞ் சிவாயமல்லதில்லையே. ௨௬௫

உவமையில்லாப்பேரொளிக் குருவமானதெவ்விடம்
உவமையாகியண்டத்தி லுருவிநின்றதெவ்விடம்
தவமதானபரமனார் தரித்துநின்றதெவ்விடம்
தற்பரத்தில்சலம்பிறந்து தாங்கிநின்றதெவ்விடம். ௨௬௬

சுகமதாகவெருதுமூன்று கன்றையீன்றதெவ்விடம்
சொல்லுமீழுலோகமேழும் நின்றவாறதெவ்விடம்
அளவதானமேருவும் அம்மைதானதெவ்விடம்
அவனுமவளுமாடலா லரியசிவன்பிறந்ததே. ௨௬௭

உதிக்குகின்றதெவ்விட மொடுங்குகின்றதெவ்விடம்
கதிக்குகின்றதெவ்விடங் கண்ணுறக்கமெவ்விடம்
மதிக்கநின்றதெவ்விட மதிமயக்கமெவ்விடம்
விதிக்கவல்லஞானிகாள் விரித்துரைக்கவேணுமே. ௨௬௮

திரும்பியாடுவாசலெட்டு திறமுரைத்தவாசலெட்டு
மருங்கிலாதகோலமெட்டு வன்னியாடுவாசலெட்டு
துரும்பிலாதகோலமெட்டு சுத்திவந்தமருளரே
அரும்பிலாதபூவுமுண் டையனாணையுண்மையே. ௨௬௯

தானிருந்துமூலவங்கி தணலெழுப்புவாயுவால்
தேனிருந்துவரைதிறந்து தித்தியொன்றுவொத்தவே
வானிருந்தமதியமூன்று மண்டலம்புகுந்தபின
ஊனிருந்தளவுகொண்ட யோகிநல்லயோகியே. ௨௭௦

முத்தனாய்நினைந்தபோது முடிந்தவண்டத்துச்சிமேல்
பத்தனாருமம்மையும பரிந்துணாடவாடினார்
சித்தரானஞானிகாள் தில்லையாடலென்பிர்காள்
அத்தனாடலுற்றபோ தடங்கலாடலுற்றதே. ௩௦௧

ஒன்றுமொன்றுமொன்றுமே யுலகனைத்துமொன்றுமே
அன்றுமின்றுமொன்றுமே யனாதியானதொன்றுமே
கன்றல்நின்றசெம்பொனைக் களிம்பறுத்துநாட்டினால்
அன்றுதெய்வமும்முளே யறிந்ததேசிவாயமே. ௩௦௨

நட்டதாபரங்களும் நவின்றசாத்திரங்களும்
இட்டமானவோமகுண்ட மிசைந்தநாலுவேதமும்
கட்டிவைத்தபுத்தகம் கடும்பிதற்றிதறகெலாம்
பொட்டதாய்முடிந்ததே பிரானையானறியவே. ௩௦௩

வட்டமானகூட்டிலே வளர்ந்தெழுந்தவம்புலி
சட்டமீபடைத்திலே சங்குசக்கரங்களாய்
விட்டதஞ்சுவாசலில் கதவுனாலடைத்தபின்
முட்டையிலெழுந்தசீவன் விட்டவாறதெங்ஙனே. ௩௦௪

கோயில்பள்ளியேதடா குறித்துநின்றதேதடா
வாயினால்தொழுதுநின்ற மந்திரங்களேதடா
ஞானமானபள்ளியில் நன்மையாய்வணங்கினால்
காயமானபள்ளியிற் காணலாமிறையையே. ௩௦௫

நல்லவெள்ளியாறதாய் நயந்தசெம்புநாலதாய்
கொல்லுநாகமூன்றதாக் குலாவுசெம்பொனிரண்டதாங்
வில்லினோசையொன்றுடன் விளங்கவூதவல்லிரேல்
எல்லையொத்தசோதியானை யெட்டுமாற்றதாகுமே. ௩௦௬

மனத்தகத்தழுக்கறாத மவுனஞானயோகிகள்
வனத்தகத்திருக்கினு மனத்தகத்தழுக்கறார்
மனத்தகத்தழுக்கறுத்த மவுனஞானயோகிகள்
முலைத்தடத்திருக்கினும் பிறப்பறுத்திருப்பரே. ௩௦௭

உருவுமல்லவொளியுமல்ல வொன்றதாகிநின்றதே
மருவுமல்லகந்தமல்ல மந்தநாடியுற்றதல்ல
பெரியதல்லசிறியதல்ல பேசுமாவிதானுமன்
றறியதாகிநின்றநேர்மை யாவர்காணவல்லிரோ. ௩௦௮

ஓரெழுத்துலகெலா முதித்தவட்சரத்துளே
ஈரெழுத்தியம்புகின்ற வின்பமேதறிகிலீர்
மூவெழுத்துமூவராய் மூன்றெழுந்தமூர்த்தியை
நாலெழுத்துநாவிலே நவின்றதேசிவாயமே. ௱௦௯

ஆதியந்தமூலவிந்து நாதமைந்துபூதமாம்
ஆதியந்தமூலவிந்து நாதமைந்தெழுத்துமாய்
ஆதியந்தமூலவிந்து நாதமேவிநின்றதும்
ஆதியந்தமூலவிந்து நாதமேசிவாயமே. ௱௧௦

அன்னமிட்டபேரெலா மனேககோடிவாழவே
சொன்னமிட்டபேரெலாந் துரைத்தனங்கள்பண்ணலாம்
வின்னமிட்டபேரெலாம் வீழ்வரெங்நரகிலே
கன்னமிட்டபேரெலாங கடந்துநின்றதின்னமே. ௱௧௧

ஓதொணாமல்நின்றநீ ருறக்கமூணுமற்றநீர்
சாதிபேதமற்றநீர் சங்கையன்றிநின்றநீர்
கோதிலாதவறிவிலே குறிப்புணர்ந்துநின்றநீ
ரேதுமன்றிநின்றநீ ரியங்குமாறதெங்ஙனே. ௱௧௨

பிறந்தபோதுகோவண மிலங்குநூல்குடுமியும்
பிறந்துடன்பிறந்ததோபிறங்குநாற்சடங்கெலாம்
மறந்தநாலுவேதமும் மனத்துளேயுதித்ததோ
நிலம்பிளந்துவானிடிந்து நின்றதென்னவல்லிரே. ௱௧௩

துருத்தியுண்டுகொல்லனுண்டு சொர்ணமானசோதியுண்டு
திருத்தமாய்மனத்திலுன்னித் திகழவூதவல்லிரேல்
பெருத்ததூணிலங்கியே தியங்கதாய்விரிந்திடும்
நிருத்தமானசோதியு நீயுமல்லதில்லையே. ௱௧௪

வேடமிட்டுமினிதுலக்கி மிக்கதூபதீபமாய்
ஆடறுத்துகூறுபோட்ட வவர்கள்போலும்பண்ணுறீர்
தேடிவைத்தசெம்பெலாந் திரள்படப்பரப்பியே
போடுகின்றபுட்பபூசை பூசையென்னபூசையே. ௱௧௫

முட்டுகண்டதூமையின் முளைத்தெழுந்தசீவனை
கட்டிகொண்டுநின்றிடங் கடந்துநோக்கவல்லிரேல்
முட்டுமற்றுகட்டுமற்று முடிவில்லனின்றநாதனை
எட்டுதிக்குங்கையினா லிருந்தவீடதாகுமே. ௱௧௬

அருக்கனோடுசோமனு மதுக்குமப்புறத்திலே
நெருக்கியேறுதாரகை நெருங்கிநின்றசோதியை
உருக்கியோரெழுத்துளே யொப்பிலாதவெளியிலே
யிருக்கவல்லபேரலோ யினிப்பிறப்பதில்லையே. ௧௧௭

மூலவட்டமீதிலே முளைத்தவஞ்செழுத்தின்மேல்
கோலவட்டமூன்றுமாய் குலைந்தலைந்துநின்றநீர்
ஞானவட்டமன்றுளே நவின்றஞானமாகிலோ
ஏலவட்டமாகியே யிருந்ததேசிவாயமே. ௧௧௮

சுக்கிலத்திசையுளே சுரோணிதத்தின்வாசலுள்
முச்சதிரமெட்டுளே மூலாதாரவறையிலே
அச்சமற்றசவ்வுளே யரியரனயனுமாய்
உச்சரிக்குமந்திர முண்மையேசிவாயமே. ௧௧௯

பூவுநீருமென்மனம் பொருந்துகோயிலென்னுளம்
ஆவியோடிலிங்கமா யகண்டமெங்குமாகினும்
மேவுகின்றஐவரும விளங்குதீபதீபமாய்
ஆடுகின்றகூத்தனுக்கோ ரந்திசந்தியில்லையே. ௧௨௦

உருக்கலந்தபின்னலலோ வுன்னைநானறிந்தது
இருக்கிலென்மறக்கிலென னினைந்திருந்தபோதெலாம்
உருக்கலந்துநின்றபோது நீயுநானுமொன்றலோ
திருக்கலந்தபோதலோ தெளிந்ததேசிவாயமே. ௧௨௧

சிவாயமஞ்செழுத்திலே தெளிந்துதேவராகலாம்
சிவாயமஞ்செழுத்திலே தெளிந்துவானமாளலாம்
சிவாயமஞ்செழுத்துளே தெளிந்துகொண்டவான்பொருள்
சிவாயமஞ்செழுத்துளே தெளிந்துகொள்ளுமுண்மையே. ௧௨௨

பொய்க்குடத்திலைந்தொதுங்கி போகம்வீசுமாறுபோல்
இச்சடமுமிந்தியமும் நீருமேலலைந்ததே
உடற்குடஞ்சவத்தையொண் டமர்ந்திருந்தவாறுபோல்
இச்சடஞ்சிவத்தைமொண் டுகந்தமர்ந்திருப்பதே. ௧௨௩

பட்டமுங்கயறுபோல பறக்கநின்றசீவனை
பார்வையாலேபார்த்துநீ படமுடிக்கப்போட்டடா
திட்டவும்படாதடா சீவனைவிடாதடா
கட்டடாநீசிக்கெனக் களவறிந்தகள்ளனை. ௧௨௪

அல்லிருந்துபகலிறந் தகம்பிரமமிறந்துபோய்
அண்டரண்டமுங்கடந் தனேகனேகரூபமாய்
சொல்லிறந்துமனமிறந்த சுகசொரூபவுண்மையைச்
சொல்லியாறவென்னில்வேறு துணைவரில்லையானதே. ௩௨௫

ஐயிரண்டுதிங்களா யடங்கிநின்றதூமைதான்
கையிரண்டுகாலிரண்டு கண்ணிரண்டுமாகியே
மெய்திரண்டுசத்தமாய் விளங்கிரசகந்தமும்
துய்யகாயமானதுஞ் சொல்லுகின்றதூமையே. ௩௨௬

அங்கலிங்கபீடமு மசைவுமூன்றெழுத்திலுஞ்
சங்குசக்கரத்திலுஞ் சகலவானகத்திலும்
பங்குகொண்டயோகிகள் பரமவாசலஞ்சிலும்
சிங்கநாதவோசையுஞ் சிவாயமல்லதில்லையே. ௩௨௭

அஞ்செழுத்துமூன்றெழுத்து மென்றுரைக்கும்மன்பர்காள்
அஞ்செழுத்துமூன்றெழுத்து மல்லகாணுமப்பொருள்
அஞ்செழுத்துநெஞ்சழுத்தி அவ்வெழுத்தறிந்தபின்
அஞ்செழுத்துமவ்வின்வண்ண மானதேசிவாயமே. ௩௨௮

ஆதரித்தமந்திர மமைந்தவாகமங்களும்
மாதர்மக்கள்சுற்றமு மயக்கவந்த நித்திரை
ஏதுபுக்கொளித்ததோ வெங்குமாகிநின்றதோ
சோதிபுக்கொளுத்திடஞ் சொல்லடாசுவாமியே. ௩௨௯

அக்கரமனாதியோ வாத்துமாவனாதியோ
புக்கிருந்தபூதமும் புலன்களுமனாதியோ
தக்கமிக்கநூல்களுஞ் சதாசிவமனாதியோ
மிக்கவந்தயோகிகாள் விரைந்துரைக்கவேணுமே. ௩௩0

ஒன்பதானவாசலு மொழியுநாளிருக்கையில்
ஒன்பதாமராமராம நாமமென்றுநாமமே
வன்பமானபேர்கள்வாக்கில் வந்துநோயடைப்பராம்
அன்பரானபேர்கள்வாக்கி லாய்ந்தமைந்திருப்பதே. ௩௩௧

அள்ளிநீரைவிட்டதேது அங்கையிற்குழைத்ததேது
மெள்ளவேமிணமிணென்று விளம்புகிற்குமூடர்காள்
கள்ளவேடமிட்டதேது கண்ணைமூடிவிட்டதேது
மெள்ளவேகுருக்களே விளம்பிடீர்விளம்பிடீர். ௩௩௨

T.13485

அன்னைகர்ப்பத்தூமையி மெய்யுரித்தசுக்கிலம்
முன்னையேதரித்ததும் பளிங்கொளிபோலாகுமே
உன்னிதொக்குளழலுந்தூமை யுள்மறுப்பிறந்ததும்
பின்னையேபிறப்பதுந் தூமையாகுமென்பரே ௯௰௩

அழுக்கறத்தினங்குறித் தழுக்கறுத்தமாந்தரே
அழுக்கிருந்ததெவ்விட மழுக்கிலாததெவ்விடம்
அழுக்கிருந்ததவ்விடத் தழுக்கறுக்கவல்லிரேல்
அழுக்கிலாதசோதியோ டணுகிவாழலாகுமே. ௯௰௪

அணுத்திரண்டகண்டமா யனைத்துபல்லியோனியாய்
மனுப்பிறந்துவோதிவைத்த நூலிலேமயங்குறீர்
சனிப்பதேதுசாவதேது தாபரத்தினூடுபோய்
நினைப்பதேதுநிற்பதேது நீர்நினைந்துபாருமே. ௯௰௫

ஆதியாகியண்டரண்ட மப்புறத்துமப்புறம்
சோதியாகிநின்றிலங்கு சுருதிநாதசோமனை
பேதியாமல்தடமுளே பெறறுணர்ந்தஞானிகள்
சாதிபேதமென்பதொன்று சற்றுமில்லையில்லையே. ௯௰௬

ஆகமமூப்பதில்லையே யாதிகாரணத்திலே
நாகமூக்கையுள்மடித்து நாதநாடியூடுபோய்
ஏககறுத்திரெட்டையு மிறுக்கமுத்தவல்லிரேல்
பாகமாகப்பார்க்கதிகளெலாம பரப்பிரமமாகுமே. ௯௰௭

அஞ்சுமஞ்சுமஞ்சுமஞ்சு மல்லலசெய்துநிற்பதும
அஞ்சுமஞ்சுமஞ்சுமே யமர்ந்துளேயிருப்பதும்
அஞ்சுமஞ்சுமஞ்சுமே யாதரிக்கவல்லிரேல்
அஞ்சுமஞ்சுமுமமுளே யமர்ந்ததேசிவாயமே. ௯௰௮

அஞ்செழுத்திலேயியா யமர்ந்துநின்றதேதடா
நெஞ்செழுத்திநின்றுகொண்டு நீசெபிப்பதேதடா
அஞ்செழுத்தின்வாளதா லறுப்பதாவதேதடா
பிஞ்செழுத்திநேர்மைதான் பிரித்துரைக்கவேண்டுமே. ௯௰௯

உயிரிருந்ததெவ்விட முடமெடுப்பதின்முனம்
உயிரதாவதேதடா வுடம்பதாவதேதடா
உயிரையுமுடம்பையு மொன்றுவிப்பதேதடா
உயிரினூடுடம்பெடுத்த வுண்மைஞானிசொல்லடா ௱

சுழித்தவோரெழுத்தையுஞ் சொன்முகத்திருத்தியே
துன்பவின்பமுங்கடந்து சொல்லுமூலநாடிகள்
அழுத்தமானவக்ஷர மங்கியுள்ளெழுப்பியே
ஆறுமங்கையுட்கலந்த தப்புறத்தலத்துளே. ௱௪௧

உருத்தரிப்பதற்குமுன் னுயிர்புகுந்துநாதமும்
கருத்தரித்ததற்குமுன் காயமென்னசோணிதம்
அருட்டரிப்பதற்குமுன் னறிவுமூலாதாரமாம்
குறித்தறிந்துகொள்ளுவீர் குணங்கெடுங்குருக்களே. ௱௪௨

எங்குமுள்ளவீசனா ரெம்முடல்புகுந்தபின்
பங்குகூறுபேசுவார் பாடுசென்றணுகிலார்
எங்கள்தெய்வமுங்கள்தெய்வ மெனறிரண்டுபேதமோ
உங்கள்பேதமன்றியே யுண்மைரண்டுமில்லையே. ௱௪௩

அரியுமாகியயனுமாகி யண்டமெங்குமொன்றதாய்
பெரியதாகியுலகுதன்னில் நின்றபாதமொன்றலோ
விரிவிதென்றுவேறுசெய்து வேடமிட்டமூடரே
அறிவினோடுபாருமிங்கு மங்குமெங்குமொன்றதே. ௱௪௪

வெந்தநீறுமெய்க்கணிந்து வேடமுந்தரிக்கிறீர்
சிந்தையுள்நினைந்துமே தினஞ்செபிக்குமந்திரம
முந்தமந்திரத்திலோ மூலமந்திரத்திலோ
எந்தமந்திரத்திலோ வீசன்வந்தியங்குமே. ௱௪௫

அகாரகாரணத்திலே யனேகனேகரூபமாய்
உகாரகாரணத்திலே யுருத்தரித்துநின்றனன்
மகாரகாரணத்திலெ மயங்குகின்றவையகம்
சிகாரகாரணத்திலே தெளிந்ததே சிவாயமே. ௱௪௬

அவ்வெழுத்திலுவ்வுவந்த காரமுஞ்சனித்ததோ
உவ்வெழுத்துமவ்வெழுத்து மொன்றையொன்றுநின்றதோ
செவ்வையொத்துநின்றலோ சிவபதங்கள்சேரினும்
இவ்வையொத்தஞானிகள் விரித்துரைக்கவேணுமே. ௱௪௭

ஆதியானவஞ்சிலு மனாதியானநாலிலும்
சோதியானமூன்றிலுஞ் சொரூபமற்றிரண்டிலும்
நீதியானதொன்றிலே நிறைந்துநின்றவஸ்துவை
ஆதியானதொன்றிலே யுற்றதஞ்செழுத்துமே. ௱௪௮

வானிலாதவொன் றுமில்லை வானுமில்லைவானிடில்
ஊனிலாதவொன் றுமில்லை யூனுமில்லையூனிடில்
நானிலாதவொன் றுமில்லை நானுமில்லைநண்ணிடில்
தானிலாதவொன் றுமே தயங்கியாடுகின்றதே. ௧௨௯

சுழித்ததோரெழுத்தையுன்னி சொல்முகத்திருத்தியே
துன்பவின்பமுங்கடந்து சொல்லுநாடிவூடுபோய்
அழுத்தமானவக்கரத்தி னங்கியையெழுப்பியே
ஆறுபங்கயங்கடந் தப்புறத்துவெளியிலே ௧௩௦

விழித்தகண்குவித்தபோ தடைந்ததோரெழுத்தெலாம்
விளைந்துவிட்டவிந்திரசால வீடதானவெளியிலே
அழுந்தினாலுமதிமயங்கி யனுபவிக்கும்வேளையில்
அவனுமுண்டுநானுமில்லை யாருமில்லையானதே. ௧௩௧

நல்லமஞ்சனங்கள்தேடி நாடிநாடியோடுறீர்
நல்லமஞ்சனங்களுண்டு நாதனுண்டுநம்முளே
எல்லமஞ்சனங்கள்தேடி யேகபூசைபண்ணினால்
தில்லைமேவுசீவனுஞ் சிவபதத்துளாடுமே. ௧௩௨

உயிரகத்திலின்றிடு முடம்பெடுத்ததற்குமுன்
உயிரகாரமாயிடு முடலுகாரமாயிடும்
உயிரையுமுடம்பையு மொன்றுவிப்பதச்சிவம்
உயிரினாலுடம்புதா னெடுத்தவாறுரைக்கினே. ௧௩௩

அண்டமேழுமுழலவே யனந்தயோனியுழலவே
பண்டுமாலயனுடன் பரந்துநின்றுழலவே
எண்டிசைகடந்துநின் றிருண்டசத்தியுழலவே
அண்டரண்டமொன்றதா யாதிநட்டமாடுமே. ௧௩௪

உருவநீறுறப்புகொண் டுருத்தரித்துவைத்திடும்
பெரியபாதைபேசுமோ பிசாசையொத்தமூடரே
கரியமாலுமயனுமாய்க காணொணாதகடவுளை
உரிமையாகவும்முளே யுணர்ந்துணர்ந்துகொள்ளுமே. ௧௩௫

பண்ணிவைத்தகல்லையும் பழம்பொருளதென்றுநீர்
எண்ணமுற்றுமென்னபே ருரைக்கிறீர்களேழைகாள்
பண்ணவும்படைக்கவும் படைத்துவைத்தளிக்கவும்
ஒண்ணுமாகியுலகளித்த வொன்றைநெஞ்சிலுன்னுமே ௧௩௬

நாலதானயோனியுள் ளவின்றவின்றுமொன்றதாய்
ஆலதானவித்துளே யமர்ந்தொடுங்குமாறுபோல்
சூலதானவுற்பனத்து சொல்லுதானமந்திரம்
மேலதானஞானிகாள் விரித்துரைக்கவேணுமே. ௧௫௭

அருவமாயிருந்தபோ தன்னையங்கறிந்திலை
உருவமாயிருந்தபோ துன்னைநானறிந்தனன்
குருவினால்தெளிந்துகொண்டு கோதிலாதஞானமாம்
பருவமானபோதலோ பரப்பிரமமானதே. ௧௫௮

பிறப்பதும்இறப்பதும் பிறந்திடாதிருப்பதும்
மறப்பதுநினைப்பது மறந்ததைத்தெளிந்ததுந்
துறப்பதுந்தொடுப்பதுஞ் சுகித்துவாரியுண்பதும்
பிறப்பதுமிறப்பதும் பிறந்தவீட்டடங்குமே. ௧௫௯

கண்ணிலேயிருப்பனே கருங்கடல்கடைந்தமால்
விண்ணிலேயிருப்பனே மேவியங்குநிற்பனே
தன்னுளேயிருப்பனே தராதலம்படைத்தவன்
என்னுளேயிருப்பனே யெங்குமாகிநிற்பனே. ௧௬௦

ஆடுநாடுதேடினும் யானைசேனைதேடினும்
கோடிவாசிதேடினுங் குறுக்கேவாதுநிற்குமோ
ஓடியிட்டபிச்சையு முகந்துசெய்ததாமமும்
சாடிவிட்டகுதிரைபோல தர்மம்வந்துநிற்குமே. ௧௬௧

எள்ளிரும்புகம்பிளி யிடும்பருத்திவெண்கலம்
அள்ளியுண்டநாதனுக்கோ ராடைமாடைவஸ்திரம்
உள்ளுருக்குமவேதியர்க் குற்றதானமீதிரால்
மெள்ளவந்துநோயணைத்து மீண்டிடுஞ்சிவாயமே. ௧௬௨

ஊரிலுள்ளமனிதர்கா ளொருமனதாய்க்கூடியே
தேரிலேவடத்தையிட்டு செம்மையாய்வைத்திழுக்கிறீர்
ஆரினாலுமறியொணாத ளாதிசித்தநாதனை
பேதையானமனிதர்பண்ணும் பிதற்றலாகும்பாருமே. ௧௬௩

மருள்புகுந்தசிந்தையால் மயங்குகின்றமாந்தரே
குருக்கொடுத்தமந்திரங் கொண்டுநீந்தவல்லிரோ
குருக்கொடுத்துவிட்டதுண்டு குலைந்துடைந்தபிள்ளையும்
பருத்திபட்டபன்னிரண்டு பாடுதான்படுவரோ. ௧௬௪

அன்னைகர்ப்பவறையதற்கு ளங்கியின்பிரகாசமாய்
அந்தறைக்குள்வந்திருந் தரியவிந்துரூபமாய்
தன்னையொத்துநின்றபோது தடையறுத்துவெளியதாய்
தங்கநற்பெருமைதந்து தலைவனாய்வளர்ந்ததே. ௯௬௫

உன்னையற்பநேரமு மறந்திருக்கலாகுமோ
உள்ளமீதுறைந்தெனை மறப்பிலாதசோதியை
பொன்னைவென்றபேரொளிப் பொருவிலாதவீசனே
பொனனடிப்பிறப்பிலாமை யென்றுநல்கவேணுமே. ௯௬௬

பிடித்ததெண்டுமும்பதோ பிரமமானபித்தர்காள்
கடித்தகோலமத்தைவிட்டு சாதிபேதங்கொண்மிரோ
வடித்திருந்ததோர்சிவத்தை வாய்மைகூறவல்லிரேல்
திடுக்கமுற்றவீசனைச் சென்றுகூடலாகுமே. ௯௬௭

சத்திநீதயவுநீ தயங்குசங்கினோசைநீ
சித்திநீசிவனுநீ சிவாயமாமெழுத்துநீ
முத்திநீமுதலுநீ மூவரானதேவர்நீ
பத்தியூரமும்முளே பறிந்துணர்ந்துகொள்ளுமே. ௯௬௮

கட்டையிட்டுமணிதுலங்குஞ் சாத்திரச்சழக்கரோ
பொஸ்தகத்தைமெத்தவைத்து போதமோதும்பொய்யரோ
நிட்டையேதுஞானமேது நீரிருந்தவக்ஷணம
பட்டையேதுசொல்லீரே பாதகக்கபடரே ௯௬௯

உண்மையானசுக்கில முபாயமாயிருந்ததும
வெண்மையாகிநீரிலே விரைந்துநீரதானதும்
தண்மையானகாயமே தரித்துருவமானதும்
தெண்மையானஞானிகாள் தெளிந்துரைக்கவேணுமே. ௯௭0

வஞ்சகப்பிறவியை மனத்துளேவிரும்பியே
அஞ்செழுத்தினுண்மையை யறிவிலாதமாந்தர்காள்
வஞ்சகப்பிறவியை வதைத்திடவும்வல்லிரேல்
அஞ்செழுத்தினுண்மையை யறிந்துகொள்ளலாகுமே. ௯௭௧

காயிலாதசோலையிற் கனியுகந்தவண்டுகள்
ஈயிலாததேனையுண் டிராப்பகலுறங்குதீர்
பாயிலாதகப்பலேறி யக்கரைப்படுமுனே
வாயினாலுரைப்பதாகு மோமவுனஞானமே. ௯௭௨

பேய்கள்பேய்களென்கிறீர் பிதற்றுகின்றபேயர்காள்
பேய்கள்பூசைகொள்ளுமோ பிடாரிபூசைகொள்ளுமோ
ஆதிபூசைகொள்ளுமோ வனாதிபூசைகொள்ளுமோ
காயமானபேயலோ கணக்கறிந்துகொண்டதே. ௧௭௩

மூலமண்டலத்திலே முச்சதுரமாதியாய்
நாலுவாசலெம்பிரான் நடுவுதித்தமந்திரம்
கோலியெட்டிதழுமாய் குளிர்ந்தலர்ந்ததிட்டமாய்
மேலும்வேறுகாண்கிலேன் விளைந்ததேசிவாயமே. ௧௭௪

ஆதிகூடுநாடியோடு காலைமாலைநீரிலே
சோதிமூலமானநாடி சொல்லிறந்ததூவெளி
யாதிகூடுநெற்பறித்த காரமாதியாகமம்
பேதபேதமாகியே பிறந்துடலிறந்ததே. ௧௭௫

பாங்கினோடிருந்துகொண்டு பரமனஞ்செழுத்துளே
யோங்கிநாடிமேலிருந்து உச்சரித்தமந்திரம்
மூங்கில்வெட்டிநாருரித்து முச்சதுரவிட்டிறாள்
ளாய்ந்தநூலிற்றோன்றலை யறிந்துணர்ந்துகொள்ளுமே. ௧௭௬

புண்டரீகமத்தியி லுதித்தெழுந்தசோதியை
மண்டலங்கள்மூன்றினோடு மன்னுகின்றமாயனை
அண்டரண்டமூடறுத் தறிந்துணரவல்லிரேல்
கண்டகோயில்தெய்வமென்று கையெடுப்பதில்லையே. ௧௭௭

அம்பலங்கள்சந்தியி லாடுகின்றவம்பனே
அன்பனுக்குளன்பனாய் நிற்பனாதிவீரனே
அன்பருக்குளன்பராய் நின்றவாதிநாயனே
உன்பருக்குவுண்மையாய் நின்றவுண்மையுண்மையே. ௧௭௮

அண்ணலாவதேதடா வறிந்துரைத்தமந்திர
மண்ணனாகவந்தவன் சகலமுமுணர்ந்தவன்
கண்ணனாகவந்தவன் காரணத்துதித்தவன்
ஒண்ணதாவதேதடா வுண்மையானமந்திரம் ௧௭௯

எள்ளதோர்புறம்பதோ ருயிரொடுங்குகின்றிடம்
மெள்ளவந்துகிட்டிநீர் வினவவேணுமென்கிறீர்
உள்ளதும்புறம்பது மொத்தபோதுநாதமாம்
கள்ளவாசலைத்திறந்து காணவேணுமப்பனே. ௧௮௰

ஆரலைந்துபூதமா யளவிடாத யோனியும்
பாரமானதேவரும் பழுதிலாதயாசமும்
ஓரொணாதவண்டமு மூவுலோகலோகலோகமும்
சேரவெந்துபோயிருந்த தேகமேதுசெப்புமே. ௩௮௧

என்னகத்துளென்னைநா னெங்குநாடியோடினேன்
என்னகத்துளென்னைநா னறிந்திலாததாகையால்
என்னகத்துளென்னைநா னறிந்துமெய்தெரிந்தபின்
என்னகத்துளென்னையன்றி யாதுமொன்றுமில்லையே. ௩௮௨

விண்ணிலின்றுமின்னெழுந்து மின்னொடுங்கும்வாறுபோல்
என்னுள்நின்றுமென்னுளீச னென்னகத்திருக்கையால்
கண்ணிலின்றுகண்ணில்தோன்றும் கண்ணறிவிலாமையால்
என்னுணின்றவென்னையு மியானறிந்ததில்லையே. ௩௮௩

அடக்கினுமடக்கொணாத வம்பலத்தினூடுபோய்
அடக்கினுமடக்கொணாம லன்புருக்குமென்றுமோ
கிடக்கினுமிருக்கினுங் கிலேசம்வந்திருக்கினும்
நடக்கினுமிடைவிடாத நாதசங்கொலிக்குமே. ௩௮௪

மட்டுலாவுதண்டுழா யலங்கலாய்புனற்கழல்
விட்டுவீழில்தாகபோக விண்ணில்நண்ணில்வெளியினும்
எட்டினோடிரண்டினு மிதத்தினால்மனந்தனைக்
கட்டிவீடிலாதுவைத்த காதலின்பமாகுமே. ௩௮௫

ஏகமூர்த்திமூன்றுமூர்த்தி நாலுமூர்த்திநன்மைசேர்
போகமூர்த்திபுண்ணியத்தில் மூர்த்தியன்றிமூர்த்தியாய்
நாகமுற்றசயனமாய் நலங்கடல்கடந்தநீ
யாகமூர்த்தியாகினின்ற தென்கொலாதிதேவனே. ௩௮௬

மூன்றுமுப்பத்தாறினோடு மூன்றுமூன்றுமாயமாய்
மூன்றுமூர்த்தியாகிமூன்று மூன்றுமூன்றுமூன்றுமாய்
தோன்றுசாதிமூன்றதாய் துலக்கமில்விளக்கதாய்
என்றனாவினுள்புகுந்த தென்கொலோநம்மீசனே. ௩௮௭

ஐந்துமைந்துமைந்துமா யல்லவற்றுளாயுமாய்
ஐந்துமூன்றுமொன்றுமாகி நின்றவாதிதேவனே
ஐந்துமைந்துமைந்துமாய் மைந்தனைத்துநின்றநீ
ஐந்துமைந்துமாயநின்னை யாவர்காணவல்லரே. ௩௮௮

ஆறுமாறுமாறுமாயொ ரைந்துமைந்துமைந்துமாய்
ஏறுசீரிரண்டுமூன்று மேழுமாறுமெட்டுமாய்
வேறுவேறுஞானமாகி மெய்யினோடுமொய்யுமாய்
ஊறுமோசையாயமர்ந்த மாயமாயமாயனே. ௩௮௯

எட்டுமெட்டுமெட்டுமாயொ ரேழுமேழுமேழுமாய்
எட்டுமூன்றுமொன்றுமாகி நின்றவாதிதேவனே
எட்டுமாயபாதமோ டிறைஞ்சிநின்றவண்ணமே
எட்டெழுத்துமோதுவார்க ளல்லனீங்கிநிற்பரே. ௩௯௦

பத்தினோடுபத்துமாயொ ரேழினோடுமொன்பதாய்
பத்துநாற்றிசைக்குநின்ற நாடுபெற்றநன்மையா
யத்துமாயகொத்தமோடு மத்தவமிக்காதிமால்
பத்தர்கட்கலாதுமுத்தி முத்திமுத்தியாகுமே. ௩௯௧

வாசியாகிநேசமொன்றி வந்தெதிர்ந்ததென்னுக
நேசமாகநாளுலாவ நன்மைசேரபவங்களில்
வீசிமேல்நிமிர்ந்ததோளி யில்லையாக்கினுய்கழல்
ஆசையால்மறக்கலா தமரராகலாகுமே. ௩௯௨

எளியதானகாயமீதி லெம்பிரானிருப்பிடம்
அளிவுறுதுநின்றதே அகாரமும்உகாரமும்
கொளுகையானசோதியுங் குலாவிநின்றதவ்விடம்
வெளியதாகுமொன்றிலே விளைந்ததேசிவாயமே. ௩௯௩

அஞ்செழுத்துமூன்றெழுத்து மென்றுரைக்குமன்பர்காள்
அஞ்செழுத்துமூன்றெழுத்து மல்லகாணுமப்பொருள்
அஞ்செழுத்தைநெஞ்செழுத்தி யவ்வெழுத்தறிந்தபின்
அஞ்செழுத்துமூன்றெழுத்து மவ்வுமாஞ்சிவாயமே. ௩௯௪

பொய்யுரைக்கபோதமென்று பொய்யருக்கிருக்கையால்
மெய்யுரைக்கவேண்டுஇல்லை மெய்யர்மெய்ச்சிலாமையால்
வையகத்திலுண்மைதன்னை வாய்திறக்கவஞ்சினேன்
நையவைத்ததென்கொலோ நமசிவாயநாதனே. ௩௯௫

ஒன்றையொன்றுகொன்றுட னுணவுசெய்திருக்கினும்
மன்றினூடுபொய்களவு மாறுவேறுசெய்யினும்
பன்றிதேடுமீசனைப் பரிந்துகூடவல்லிரேல்
அன்றுதேவரும்முளே யறிந்துணர்ந்துகொள்ளுமே. ௩௯௬

T. 13485



மச்சகத்துளேயமர்ந்து மாயைபேசும்வாயுவை
அச்சகத்துளேயிருந் தறிவுணர்த்திக்கொள்விரேல்
அச்சகத்துளேயிருந் தறிவுணர்த்திகொண்டபின்
இச்சையற்றவெம்பிரா னெங்குமாகிநிற்பனே. ௧௯௭

வயலிலேமுளைத்தசெந்நெல் களையதானவாறுபோல்
உலகிலேருரும்வணமைகூறி லுய்யுமாறதங்ஙனே
விரகிலேமுளைத்தெழுந்த மெய்யலாதுபொய்பதாய்
நரகிலேபிறந்திருந்து நாடுபட்டபாடதே. ௧௯௮

ஆடுகின்றவெம்பிரானை யங்குமிங்குமென்றுநீர்
தேடுகின்றபாவிகாள் தெளிந்ததொன்றையோர்கிலீர்
காடுநாடுவீடுவீண் கலந்துநின்றகள்வனை
நாடியோடியும்முளே நயந்துணர்ந்துபாருமே. ௧௯௯

ஆடுகின்றவண்டர்கூடு மப்புறமதிப்புறம்
தேடுநாலுவேதமுந் தேவரானமூவரும்
நீடுவாழிபூதமும் நின்றதோர்நிலைகளும்
ஆடுவாழிறெழியலா தனைத்துமில்லையில்லையே. ௨௦௦

ஆவதுமபரத்துளே யழிவதும்பரத்துளே
போவதும்பரத்துளே புகுவதும்பரத்துளே
தேவரும்பரத்துளே திசைகளும்பரத்துளே
யாவரும்பரத்துளே யானுமப்பரத்துளே. ௨௦௧

ஏழுபாரேழுகட லிபங்களெட்டுவெற்புடன்
சூழுவான்கிரிகடந்து சொல்லுமேழுலகமும்
ஆழிமால்விசும்புகொள் பிரமாண்டரண்டவண்டமும்
ஊழியானொளிக்குளே யதித்துடனொடுங்குமே. ௨௦௨

கயத்துநீரிறைக்கிறீர் கைகள்சோர்ந்துநிற்பதேன்
மனத்துளீரமொன்றிலாத மதியிலாதமாந்தர்காள்
அகத்துளீரங்கொண்டுநீ ரமுக்கறுக்கவல்லிரேல்
நினைத்திருந்தசோதியும் நீயுநானுமொன்றரோ. ௨௦௩

நீரிலேபிறந்திருந்து நீர்சடங்குசெய்கிறீர்
ஆரையுன்னிநீரெலா மவத்திலேயிறைக்கிறீர்
வேரையுன்னிவித்தையுன்னி வித்திலேமுளைத்தெழுஞ்
சீரையுன்னவல்லிரேற் சிவபதமடைவிரே. ௨௦௪

பத்தொடத்தவாசலிற் பரந்துமூலவக்கர
முத்திசித்திதொந்தமென் றியங்குகின்றமூலமே
மத்தசித்தவைம்புலன் மகாரமானகூத்தையே
அத்தியூரர்தம்முளே யமைந்ததேசிவாயமே. ௨௦௫

அறிவினோடுமண்டமா யளவிடாதசோதியை
குணமதாகியும்முளே குறித்திருக்கில்முத்தியா
முணைமுணென்றுடம்முளே விரலையொன்றிமீளவும்
தினந்தினமயக்குவீர் செம்புபூசைபண்ணியே. ௨௦௬

மூலமானவக்கர முகப்பதற்குமுன்னெலாம்
மூடமாகமூடுகின்ற மூடமேதுமூடரே
காலனைவஞ்சுபூத மஞ்சிலேயொடுங்கினால்
ஆதியோடுகூடுமோ வனாதியோடுகூடுமோ. ௨௦௭

முச்சதுரமூலமாகி முடிவுமாகியேகமாய்
அச்சதுரமாகியே யடங்கியோரெழுத்துமாய்
மெய்ச்சதுரமெய்யுளே விளங்குஞானதீபமாய்
உச்சரிக்குமந்திரத்தி னுண்மையேசிவாயமே. ௨௦௮

வண்டுகங்கள்போலுநீர் மனத்துமாசறுக்கிலீர்
குண்டலங்கள்போலநீர் குளத்திலேமுழுகுறீர்
பண்டுமுங்கள்நான்முகன் பறந்துதேடிகாண்கிலான்
கண்டிருக்குமும்முளே கலந்திருப்பர்காணுமே. ௨௦௯

நின்றதன்றிருந்ததன்று நேரிதன்றுகூரிதன்று
பந்தமன்றுவீடுமன்று பரவகங்களற்றது
கெந்தமன்றுகேள்வியன்று கேடிலாதவானிலே
அந்தமன்றிநின்றதொன்ற தெங்ஙனேயுரைப்பதே. ௨௧௦

பொருந்துநீருமும்முளே புகுந்துநின்றகாரணம்
எருதிரண்டுகன்றையீன்ற வேசமொன்றையோர்கிலீர்
அருகிருந்துசாவுகின்ற யாவையுமறிந்திலீர்
குருவிருந்துலாவுகின்ற கோலமென்னகோலமே. ௨௧௧

அம்பரத்துளாடுகின்ற வஞ்செழுத்துநீயலோ
சிம்புளாய்பறந்துநின்ற சிற்பரமுநீயலோ
எம்பிரானுமெவ்வுயிர்க்கு மேகபோகமாதலால்
எம்பிரானுநானுமா யிருந்ததேசிவாயமே. ௨௧௨

ஈரொளிய திங்களே யியங்குகின்ற தப்புறம்
பேரொளிய திங்களே யாவருமறிகிலீர்
காரொளிப்படலமுங் கடந்துபோன தற்பரம்
பேரொளிப்பெரும்பத மேகநாதயா தமே. ௪௧௩

கொள்ளொணாதுமெல்லொணாது கோதறக்குதட்டொணா
தள்ளொணாதணுகொணா தாழலான்மனத்துளே
தெள்ளொணாதுதெளியொணாது சிற்பரத்திலுட்பயன்
விள்ளொணாதுபொருளைநான் விளம்புமாறதெங்ஙனே. ௪௧௪

வாக்கினால்மனத்தினால் மதித்தகாரணத்தினால்
நோக்கொணாதநோக்கையுன்னி நோக்கையாவர்நோக்குவார்
நோக்கொணாதநோக்குவந்து நோக்கநோக்கநோக்கிடில்
நோக்கொணாதநோக்குவந்து நோக்கையெங்கணோக்குமே. ௪௧௫

உள்ளிலும்புறம்பிலு முலகமெங்கணும்பரந்
தெள்ளிலெண்ணெய்போலநின் றியங்குகின்றவெம்பிரான்
மெள்ளவந்தெனுட்புகுந்து மெய்த்தவம்புந்தபின்
வள்ளலென்னவள்ளலுக்கு வண்ணமென்னவண்ணமே ௪௧௬

வேதமோராறுகண்டிலேன் வெம்பிறப்பிலாமையால்
போதநின்றவடிவதாய்ப் புவனமெங்குமாயினாய்
சோதியுள்ளொளியுமாய்த் துரியமோடதீதமாய்
ஆதிமூலமாதியா யமைந்ததேசிவாயமே. ௪௧௭

சாணிருமடங்கினாற் சரிந்தகொண்டைதன்னுளே
பேணியப்பதிக்குளே பிறந்திறந்துழலுவீர்
தோணியானவைவரைத் துறந்தறுக்கவல்லிரேல்
காணிகண்டுகோடியாகக் கலந்ததேசிவாயமே. ௪௧௮

அஞ்சுகோடிமந்திர மஞ்சுளேயடங்கினால்
நெஞ்சுகூறவும்முளே நினைப்பதோரெழுத்துளே
அஞ்சுநாலுமூன்றதாகி யும்முளேயடங்கினால்
அஞ்சுமோரெழுத்ததா யமைந்ததேசிவாயமே. ௪௧௯

அக்கரந்தவக்கரத்தி லுட்கரந்தவக்கரம்
சக்கரத்துசிவ்வையுண்டு கம்புளத்திருந்ததும்
எட்கரந்தவெண்ணெய்போ லெவ்வெழுத்துமெம்பிரான்
உட்கரந்துநின்றநேர்மை யாவர்காணவல்லரே. ௪௨௰

ஆகமத்தினுட்பொரு ளகண்டமூலமாதலால்
தாகபோகமன்றியே தரித்ததற்பரமுநீ
ஏகபாதம்வைத்தனை யுணர்த்துமஞ்செழுத்துளே
ஏகபோகமாகியே யிருந்ததேசிவாயமே. ௪௨௧

மூலவாசல்மீதுளே முச்சதுரமாகியே
நாலுவாசலெண்விரல் நடுவுதித்தமந்திரம்
கோலமொன்றுமஞ்சுமாகு மிங்கலந்துநின்றநீ
வேறுவேறுகண்டிலேன் விளங்கதேசிவாயமே. ௪௨௨

சுக்கிலத்திடியுளே சுழித்ததோரெழுத்துளே
அக்கரத்திடியுளே யமர்ந்தவாதிசோதிநீ
உக்கரத்தடியுளே யுணாந்தவஞ்செழுத்துளே
அக்கரமதாகியே யமர்ந்ததேசிவாயமே. ௪௨௩

குண்டலத்துளே குறித்தகத்துநாயகன்
கண்டவந்தமண்டலங் கருத்தழித்தகூத்தனை
விண்டலர்ந்தசந்திரன் விளங்குகின்றமெய்ப்பொருள்
கண்டுகொண்டமண்டலஞ் சிவாயமல்லதில்லையே. ௪௨௪

சுற்றுமைந்துகூடமென்று சொல்லிறந்ததோர்வெளி
சத்தியுஞ்சிவனுமாக நின்றதன்மையோர்கிலீர்
சத்தியாவதும்முடல் தயங்குசீவனுட்சிவம்
பித்தர்காளறிந்திலீர் பிரானிருந்தகோலமே. ௪௨௫

மூலமென்றமந்திர முளைத்தவஞ்செழுத்துளே
நாலுவேதநாவுளே நவின்றஞானமெய்யுளே
ஆலமுண்டகண்டனு மரியயனுமாதலால்
ஓலமென்றமந்திரஞ் சிவாயமல்லதில்லையே. ௪௨௬

தத்துவங்களென்றுநீர் தமைக்கடிந்துபோவிர்காள்
தத்துவஞ்சிவமதாகில் தற்பரமுநீரல்லோ
முத்திசீவனாதமே மூலபாதம்வைத்தபின்
அத்தனாருமும்முளே யறிந்துணர்ந்துகொள்ளுமே ௪௨௭

மூன்றுபத்துமூன்றையு மூன்றுசொன்னமூலனே
தோன்றுசேரஞானிகாள் துய்யபாதமென்றலை
ஏன்றுவைத்தவைத்தபின் னியமபுமஞ்செழுத்தையும்
தோன்றவோதவல்லிரேல் துய்யசோதிகாணுமே. ௪௨௮

உம்பர்வானகத்தினு மூலகபாரமேழினும்
ஈம்பர்நாடுதன்னிலு நாவலென்றதீவினும்
செம்பொன்மாடமல்குதில்லை யம்பலத்துளாடுவோன்
எம்பிரானலாதுதெய்வ மில்லைலல்லையே. ௬௨௯

பூவிலாயவைந்துமாய் புனலில்நின்றநான்குமாய்
தீயிலாயமூன்றுமாய் சிறந்தகாலிரண்டுமாய்
வேயிலாயதொன்றுமாய் வேறுவேறுதன்மையாய்
நீயலாமல்நின்றநேர்மை யாவர்காணவல்லரோ. ௬௩0

அந்தரத்திலொன்றுமா யசைவுகாலிரண்டுமாய்
செந்தழலில்மூன்றுமாய்ச் சிறந்தவப்புநான்குமாய்
ஐந்துபாரிலைந்துமா யமர்ந்திருந்தநாதனை
சிந்தையிற்றெளிந்தமாயை யாவர்காணவல்லரே. ௬௩௧

மனவிகாரமற்றுநீர் மதித்திருக்கவல்லிரேல்
நினைவிலாதமணிவிளக்கு நித்தமாகிநின்றிடும்
அனைவரோதுமவ்வெழுத்து மகம்பிதற்றவேணுமேற்
கனவுகண்டதுணமையைநீர் தெளிந்ததேசிவாயமே. ௬௩௨

இட்டகுண்ட மேதடா விருக்குவேதமேதடா
சுட்டமட்கலத்திலே சுற்றுநூல்களேதடா
முட்டிநின்றதூணிலே முளைத்தெழுந்தசோதியை
பற்றிநின்றதேதடா பட்டநாதபட்டரே. ௬௩௩

நீரிலேமுளைத்தெழுந்த தாமரையினோரிலை
நீரினோடுகூடிநின்று நீரிலாதவாறுபோல்
பாரிலேமுளைத்தெழுந்த பண்டிதப்பராபரம்
பாரினோடுகூடிநின்ற பண்புகண்டிருப்பிரே. ௬௩௪

உறங்கிலென்விழிக்கிலெ னுணர்வதற்றொடுங்கிலென்
சிறந்தவைம்புலன்களுந் திசைத்திசைகளொன்றிலென்
புறம்புமுள்ளுமெங்கணும் பொருந்திருந்ததேகமாய்
நிறைந்திருந்தஞானிகாள் நினைப்பதேதுமில்லையே. ௬௩௫

ஓதுவார்களோதுகின்ற வோரெழுத்துமொன்றதே
வேதமென்றதேகமாய் விளம்புகின்றதன்றிது
நாதமொன்றுநான்முகன் மாலுநானுமொன்றதே
ஏது மன்றிநின்றதொன்றை யானுணர்ந்தநேர்மையே. ௬௩௬

பொங்கியேதரித்தவச்சு புண்டரிகவெளியிலே
தங்கியேதரித்தபோது தானுமாதுளையதாம்
அங்கியுட்சரித்தபோது வடிவுகளொளியுமாய்க்
கொம்புமேல்வடிவுகொண்டு குருவிருந்தகோலமே. ௪௩௭

மண்ணுளோரும்விண்ணுளோரும் வந்தாரதெங்கெனில்
கண்ணினோடுசோதிபோற் கலந்தநாதவிந்துவும்
அண்ணலோடுசத்தியு மஞ்சுபஞ்சபூதமும்
பண்ணினோடுகொடுகப்ப பாரொடேழுமின்றுமே. ௪௩௮

ஒடுக்குகின்றசோதியு முந்திநின்றவொருவனும்
நடுத்தலத்திலொருவனும் நடந்துகாலிலேறியே
விடுத்துநின்றவிருவரோடு மெய்யினோடுபொய்யுமாய்
அடுத்துநின்றரிமினோ வனாதிநின்றவாதியே. ௪௩௯

உதித்தமந்திரத்தினோ மொடுங்குமக்கரத்தினும்
மதித்தமண்டலத்தினு மறைந்துநின்றசோதிநீ
மதித்தமண்டலத்துளே மரித்துநீரிருந்தபின்
சிருத்தமண்டலத்துளே சிறந்ததேசிவாயமே. ௪௪௦

திருத்திவைத்தசற்குருவைச் சீர்பெறவணங்கிலீர்
குருக்கொடுக்கும்பித்தரே கொண்டுநீந்தவல்லிரோ
குருக்கொடுக்கும்பித்தருங் குருக்கொள்வந்தசீடனும்
பருத்திபட்டபாடுதான் பன்னிரண்டும்பட்டதே. ௪௪௧

விழித்தகண்துதிக்கவும் விந்துநாதவோசையும்
மேருவுங்கடந்தவண்ட கோளமுங்கடந்துபோய்
எழுத்தெலாமறிந்துவிட்ட விந்திரஞாலவெளியிலே
யானுநீயுமேகலந்த தென்னதொன்மையீசனே. ௪௪௨

ஓம்நமாவென்றுளே பாவையொன்றறிந்தபின்
பானுடறகருத்துளே பாவையென்றறிந்தபின்
நானுநீயுமுண்டடா நலங்குலமதுண்டடா
ஊனுமூனுமொன்றுமே யுணர்ந்திடாயெனக்குளே. ௪௪௩

ஐம்புலனைவென்றவர்க் கன்னதானமீவதால்
நல்புலன்களாகின்ற நாதருக்கேதேறுமோ
ஐம்புலனைவென்றிடா தவத்தமேயுயன்றிடும்
வம்புருக்குமீவதுன் னவெப்பதுமவத்தமே. ௪௪௪

ஆதியானவைம்புலன்க ளவையுமக்குளொக்குமோ
யோனியிற்பிறந்திருந்த துன்பமிக்குமொக்குமோ
வீணர்காள்பிறந்திறந்துவீர் மெய்ம்மையேயுணர்திரேல்
ஊணுறக்கபோகமு முமக்கெனக்குமொக்குமே. சசரு

ஓடுகின்றவைம்புல னொடுங்கவஞ்செழுத்துளே
நாடுகின்றநான்மறை நவிலுகின்றஞானிகாள்
கூடுகின்றகண்டித குணங்கள்மூன்றெழுத்துளே
ஆடுகின்றபாவையா யமைந்ததேகிவாயமே. சசசு

புவனாசக்கரத்துளோ டுகாரதவெளியிலே
தொந்தமுங்களங்கமற்ற சோதிநேருமொருமையுந்
தவனசோமரிருவருந் தாமியங்குமாசமில்
துன்பமாற்றியோதிநின்ற சரசமானவெளியிலே. சசஎ

பவனமஞ்செழுத்திலே வாசியேற்றமென்னவே
வானளாவிநின்றசோதி மண்டலம்புகுந்தபின்
அவனுமானுமேயமாக நுழையவிந்தவெளியிலே
அவனுமுன்கனாவிலே யாருமில்லையானதே. சசஅ

வாருதைபல்வகை வாயுரையில்வாய்வடக்கம்
ஆறுதைபல்லுடமை அறுமையென்னவிந்தகுவாண
நாலுதையில்நாடளக்கம் தன்மையானதன்மையும்
நாலுதையில்நாளடக்கம் நாலும்நாங்கண்டதே. சசகூ

வழுத்திடானழுந்திடான் மாயரூபமாகிடான்
பழுத்திடான்வெகுண்டிடான் காலகாலகாலமும்
தாமெடுத்திடானசைந்திடான் தூயரூபமாகிடான்
தாம்படைத்தொளைத்திடான் குக்ஷகுக்ஷகுக்ஷமே. ச௫0

ஆதிபடைவெம்பேயுனாக்கு வக்ஷரத்திருனான்தம்
போதமேயாகியெம்பர்கோடி யுறதறிந்துகண்டிடார்
புமானமமனக்கருத்ரு பொங்குமங்குமிங்குமாய்
ஏகமேகமாகவே யுருப்பர்கோடிகோடியே. ச௫க

கோடிகோடிகோடிகோடி குவலயத்தோராதியை
நாடிநாடிநாடிநாடி நாளுகன்றுவீணதாய்
தேடிதேடிதேடிதேடி தேகமுங்கசங்கியே
கூடிகூடிகூடிகூடி நிற்பர்கோடிகோடியே. ச௫உ

கருத்திலான்வெளுத்திலான் பாலிருந்தகாரணம்
இருத்திலாதொளித்திலா தென்றிரண்டுமாகிலான்
ஒருத்திலான்பரித்திலா தொழிந்திடானழிந்திடான்
கருத்திற்கியுங்கூவுமுற்றோன் கண்டறிந்தவாதியே. ௪௯௩

வாதிவாதிவாதிவாதி வண்டலையறிந்திடான்
ஊதியூதியூதியூதி யொளிமழுங்கியுளறுவான்
வீதிவீதிவீதிவீதி விடைபொருட்பரக்குவோன்
சாதிசாதிசாதிசாதி சாகரத்தைக்கண்டிடான். ௪௯௪

ஆண்மையாண்மையாண்மையாண்மை ஆண்மைகூறுபசடரே
காண்மையானவாதிருபங் காலகாலகாலமும்
பாண்மையாகியபோனமான பாசமாகிநின்றதும்
நாண்மையானநல்லையர்ல் நங்குலிங்குபங்குமே. ௪௯௫

பிங்கலென்றவா சாத்திரம் பிட்டுவாகிகூவுமே
ஆங்காரகர் சோமவேந்தி சோபமன்பமாறிநின்றிட
அங்காரமேனச்சுழியிலாகுமேகவாகையாய்
கங்குலற்றுங்கியாவமுற்று காருவாய்கடந்தனன். ௪௯௬

கடலெழும்புஞ்சூட்சமுஞ் சுழிமுனையின்சூட்சமும்
ஆடலெழுவியோகமான வாய்ந்துநின்றசூட்சமும்
திடாதானசூட்சமுந் திரியின்வாலைசூட்சமுங்
கடலெழும்புசூட்சர்தன்னைக் கண்டறிந்தோன்ஞானியே. ௪௯௭

ஞானிஞானியென்றுரைத்த நாய்கள்கோடிகோடியே
வானிலாதபைறானென்ற வாதிகோடிகோடியே
தானிலானசாகரத்தின் தன்மைகாணுமூடர்கள்
மூனிலாமயற்கோடிகோடி முன்னறிந்துநிற்பரோ. ௪௯௮

சூக்ஷமானகொம்பிலே சுழிமுனைச்சுடரிலே
விச்சமானவீயிலே விடுலேதங்கும்வாயிலே
கூச்சமானகொம்பிலே குடியிருந்தகோவிலே
தீக்ஷயானதீயிலே சிறந்ததேசிவாயமே. ௪௯௯

பொங்கிநின்றமோனமும் பொதிந்துநின்றமோனமுந்
தங்கிநின்றமோனமுந் தயங்கிநின்றமோனமுங்
கங்கையானமோனமுங் கதித்துநின்றமோனமுங்
இங்ஙனானமோனமுஞ் சிவனிருந்தமோனமே. ௫௦௦

மோனமானவீதியில் முனைச்சுழியின்வாலையில்
பானமானவீதியில் பசிந்தசெஞ்சுடரிலே
ஞானமானமூலையில் நாலைதங்குமவாயலில்
ஓனமானசெஞ்சுட ருதித்ததேசிவாயமே. ௪௬௧

உதித்தெழுந்தவாலையு முயங்குகின்றவாலையுங்
கதித்தெழுந்தவாலையுங் காலையானவாலையும்
மதித்தெழுந்தவாலையு மறைந்துநின்றஞானமுங்
கொதித்தெழுந்து சுப்பலாகி ஞானவுங் கியுமானதே. ௪௬௨

கூவுங்குயிலுமோனமாகி கொள்கையானகொள்கையை
மூவுலையுதித்தெழுந்த முச்சுடர்விரிவிலே
பூவிலேநறைகள்போற பொருந்திநின்றபூரணம்
ஆவியாவியாவியாவி யன்பருள்ள முற்றதே. ௪௬௩

ஆண்மைகூறுமானதோ அருக்கதேறுமவீதியைக்
காண்மையாககாண்பிரா கசடறக்கவல்லரோ
தூண்மையானவாதிருட்சஞ் சோபமாருமாருமோ
நாண்மையானவாயலில் நடந்துநின்றநாதமே. ௪௬௪

நாதமானவாயலில் நடந்துநின்றவாயலில்
வேதமானவீதியல் விரிந்தெழுச்சுடரிலே
நேயமானதூய்யிலே நிறைந்துநின்ற சுடரிலே
பூதமானவாயலே புகலுமொருதியே. ௪௬௫

ஆவியாவியாவியாவி ஓன்றுகொம்பருவியே
மேவிமேவிமேவிமேவி மேதினியின்மானிடர்
பாவிபாவிபாவிபாவி வல்லபர்கள்வறிந்திடார்
பாவிபாவிபாவிபாவி பழியிலுற்றமாந்தரே. ௪௬௬

விந்திலேமுனைந்தசோதி யிவ்வனையின்மந்தியல்
உந்திலேயொளிவதாகி மோனமானதீபமே
ஈதிலோதிரட்டிபோன்ற நாதனையறிந்திடார்
பந்திலேகிடந்துழன்ற வாலைபானசூடசமே. ௪௬௭

வாலையோடுகாலையும் வழிந்துபொங்குமோனமே
மாலையோடுகாலையான வாறறிந்தமாந்தரே
மூலையானகோணமீன் முளைத்தெழுந்தசெஞ்சுடர்
தாலைபோடுமானதன்று தங்கிநின்றமோனமே. ௪௬௮

மோனமானவீதியில் முடிகின்றநாதமே
ஈனமின்றிவேகமான வேகமென்னவேகமே
கானமானமூலையிற் கனிந்திருந்தவாலையில்
ஞானமானசெஞ்சுடர் நடந்ததேசிவாயமே. ௪௬௯

உச்சிமத்திவீதியி லொழிந்திருந்தசாதியிற்
பச்சியுற்றசோமனும் பரந்துநின்றுலாவவே
செச்சியானதீபமே தியானமானமோனமே
கச்சியானமோனமே கடந்ததேசிவாயமே. ௪௭0

அஞ்சுகொம்பினின்றநாத மாலைபோலெழும்பியே
பிஞ்சிலேறுபூமலர்ந்து பெற்றியுற்றசுததமே
செஞ்சுடருதித்தபோது தேசிகன்சுழன்றுடன்
பஞ்சபூதமானதே பறந்துநின்றமோனமே. ௪௭௧

சடுதியானகொம்பிலே தத்துவத்தின்வழியிலே
அடுதியானஆவிலே பரனிருந்தவுறவிலே
இடுதியென்றசோலையி லிருந்தமுச்சுடரிலே
நடுதியென்றநாதமோடி நன்குறவமைந்ததே. ௪௭௨

அமையுமாலமோனமு மானிருந்தமோனமும்
சமையும்பூதமோனமுந் தரித்திருந்தமோனமும்
இமையுங்கொண்டவேகமு மிலங்குமுச்சிமோனமுந்
தமையறிந்தமாந்தரே சடத்தையுற்றுநோக்கிலா. ௪௭௩

பாச்சலூர்வழியிலே பரனிருந்தசுழியிலே
காய்ச்சகொம்பினுனியிலே கனியிருந்தமலையிலே
வீச்சமானதேதடா விரிவுதங்குமிங்குமே
மூச்சிலேறுமூச்சைவாங்கு முட்டிநின்றசோதியே. ௪௭௪

சோதிசோதியென்றுநாடித் தோற்பவர்சிலவரே
ஆதிஆதியென்றுநாடு மாடவர்சிலவரே
வாதிவாதியென்றுசொல்லும் வம்பருஞ்சிலவரே
நீதிநீதிநீதி நின்றிடுமுமுச்சுடர். ௪௭௫

சுடரதாயெழும்பியங்கு தூபமானகாலமே
இடரதாய்ப்புவியும்விண்ணு மேகமாயமைக்குமுன்
படரதாகநின்றவாதி பஞ்சபூதமாகியே
[illegible]தாகஅண்டமெங்கு மாணமையாகநின்றதே. ௪௭௬

நின்றிருந்தசோதியை நிலத்திலுற்றமானிடர்
கண்டறிந்துகண்குளிர்ந்து காதலுற்றுலாவுவோர்.
கண்டமுற்றமேன்முனையின் காட்சிதன்னைக்காணுவார்
நன்றியற்றுநரலைபொங்கி நாதமுமகிழ்ந்திடும். ௪௭௭

வயங்குமோனசெஞ்சுடர் வடிந்தசோதிநாதமுங்
கயங்கள்போலக்கதறியே கருவூரற்றவெளியிலே
பயங்கொடின்றியின்றியே படர்ந்துநின்றபான்மையே
நயங்கள்கோவென்றேநடுங்கி நங்கையானதீபமே. ௪௭௮

தீபவுச்சமுனையிலே திவாகரத்தின்சுழியிலே
கோபமாறுகூவிலே கொதித்துநின்றதீயிலே
தாபமானமூலையிற் சமைந்துநின்றசூக்ஷமுஞ்
சாபமானமோனசமுந் துடிந்துநின்றிலங்குமே ௪௭௯

நேரிகன்சுழன்றதே திரிமுனையின்வாலையில
வேசமோடுவாலையில் வியனிருந்தமூலையில்
நேசசாதிரோதைநட நிறைந்திருந்தவாரமில்
வீசிவீசிநின்றதே விரிந்துநின்றமோனமே. ௪௮௦

உட்கமலமோனமி லுயங்கிநின்றநந்தியை
மிக்கவொடுங்குமாய் விலவனைவிசுமத்தியில்
முட்பொதிந்ததென்னவே முடிகிநின்றசெஞ்சுடர்
கட்குவைகள்போலவுங் கடிந்துநின்றகாட்சியே. ௪௮௧

உந்தியந்தசுழிவழியி லுச்சியுற்றமத்தியிற்
சந்திரனொளிகிரணந் தாணடிநின்றசெஞ்சுடர்
பந்தமாகவில்வளைவிற் பருசபூதவிந்தைசயாங்
இந்துபோறமயிலநின்றுகீச்சுழுசசுவென்றதே. ௪௮௨

செசசைபென்றவுச்சிறேறடு சிகாரமுமவகாரமும்
பசசைசயாகிநின்றதே பரவெளியின்பான்மையே
இசசையானஹாவிலே யிருந்தெழுந்தஹூயிலே
உச்சியானகோணத்தி லுதித்ததேசிவாயமே. ௪௮௩

ஆறுமூலைக்கோணத்தி லமைந்தவொன்பதாத்திலே
நாறுமென்றுநங்கையான நாவியுந்தெரிந்திட
கூறுமென்றஐவரங்கு கொண்டுநின்றமோனமே
பாறுகொண்டுநின்றது பறந்ததேசிவாயமே. ௪௮௪

பறந்ததேகறந்தபோது பாச்சலூர்வழியிலே
பிறந்ததேபிராணனன்றிப் பெண்ணுமாணுமல்லவே
துறந்ததோசிறந்ததோ தூயதுக்கமானதோ
இறந்தபோதிலன்றிஈ இலங்கிடுஞ்சிவாயமே. ௪௮௫

அருளிருந்தவெளியிலே அருக்கனின்றவிருளிலே
பொருளிருந்தசூழியிலே புரணடெழுந்தவழியிலே
தெருளிருந்தகலையிலே தியங்கிநின்றவலையிலே
குருவிருந்தவழியினின்று ஞானவுங்ஹரியுமானதே. ௪௮௬

ஆணதோரெழுத்திலே யமைந்துநின்றவாதியே
கானமோடுதாலமீதிற் கண்டறிவதில்லையே
தானுந்தானுமானதே சமைந்தவாலைகாலையில்
வேணலோடும்வாறுபோல் விரிந்ததேசிவாயமே. ௪௮௭

ஆறுகொண்டவாரியு மமைந்துநின்றதெய்வமும்
தாறுகொண்டமாரியுந் துலங்கிநின்றதூபமும
வீறுகொண்டமோனமும் விளங்குமுட்கமலமும்
மாறுகொண்டஊனிலே மடிந்ததேசிவாயமே ௪௮௮

மாயல்கண்டகோணமில் வயங்குமைவர்வைகியே
சாயல்கண்டுசார்ந்ததுந் தலைமன்றுநிறைந்ததுங்
காயவண்டுகண்டதுங் கருவூரகுசென்றதும்
பாயுமென்றுசென்றதும் பறந்ததேசிவாயமே. ௪௮௯

பறந்ததேதுறந்தபோது பாச்சலூர்வழியிலே
மறந்ததேதகவ்வுமுற்ற வாணர்கையின்மேவியே
பிறந்ததேபிறந்தபோதிற் பிடாமற்கையிலே
சிறந்துநின்றமோனமே தெளிந்ததேசிவாயமே. ௪௯0

வடிவுற்பவாசனத் திருத்திமூலவனலையே
மாருதத்தினுலெழுப்பி வாசலைந்துநாலையு
முடிவுமுத்திரைப்படுத்தி மூலவீணதண்டினுலை
மூளரியாலயங்கடந்து மூலநாடியூடுபோய். ௪௯௧

அடிதுவக்கிமுடியளவு மாறுமாநிலங்கட
லப்புறத்தில்வெளிகடந்த வாதியெங்கள்சோதியை
யுடுபதிக்கணமுதருந்தி யுண்மைஞானவுவகையுள்
[illegible]பட்டிறங்குகின்ற யோகிநல்லயோகியே. ௪௯௨

மந்திரங்களுண்டுநீர் மயங்குகின்றமானிடர்
மந்திரங்களாவது மறத்திலூறலன்றுகாண்
மந்திரங்களாவது மதித்தெழுந்தவாயுவை
மந்திரத்தையுண்டவர்க்கு மரணமேதுமில்லையே. ௩௱௯௰௩

மந்திரங்கள்கற்றுநீர் மயங்குகின்றமாந்தரே
மந்திரங்கள்கற்றநீர் மரித்தபோதுசொல்விரோ
மந்திரங்களும்முளே மதித்தநீருமும்முளே
மந்திரங்களாவது மனத்தினைந்தெழுத்துமே. ௩௱௯௰௪

உள்ளதோபிறப்பதோ வுயிரொடுங்கிநின்றிடம்
மெள்ளவந்துகிட்டிநீர் வினைவேண்டுமென்கிறீர்
உள்ளதும்பிறப்பது மொத்தபோதுநாதமாங்
கள்ளவாசலைத்திறந்து காணவேண்டுமாந்தரே, ௩௱௯௰௫

ஓரெழுத்திலிங்கமா யோதுமட்சரத்துளே
ஓரெழுத்தியங்குகின்ற வுண்மையையறிகிலீர்
மூவெழுத்துமூவராய் முளைத்தெழுந்தசோதியை
நாவெழுத்துநாவுளே நவின்றதேசிவாயமே. ௩௱௯௰௬

முத்திசித்திதொந்தமா யியங்குகின்றமூர்த்தியை
மற்றுதித்தவைப்புனல்க ளாகுமத்திமப்புலன்
அந்தரித்தர்காளகண்ட ரன்பினாலனுதினம்
உச்சரித்துளத்திலே யறிந்துணர்ந்துகொண்மினே. ௩௱௯௰௭

மூன்றிரண்டுமைந்துமாய் முயன்றெழுந்ததேவராம்
மூன்றிரண்டுமைந்ததாய் முயன்றதேயுலகெலாம
ஈன்றதாயுமப்பனு மியங்குகின்றநாதமாய்
தோன்றுமோரெழுத்தினோடு சொல்லவொன்றுமில்லையே ௩௱௯௰௮

வெளியுருக்கியஞ்செழுத்து விந்துநாதசத்தமுந்
தளியுருக்கிநெய்கலந்து சகலசத்தியானதும்
வெளியிலுமவ்விளையிலு மிருவரையறிந்தபின்
வெளிகலந்ததன்மையால் தெளிந்ததேசிவாயமே ௩௱௯௰௯

முப்புறத்திலப்புறம் முக்கணன்விளையிலே
சிற்பரத்துளற்பனஞ் சிவாயமஞ்செழுத்துமாங்
தற்பரமுதித்துநின்று நானுமெங்குமானபின்
னிப்புறமொடுங்குமோடி யெங்குமலிங்கமானதே. ௪௦௦

ஆடிநின்றசீவனே ரஞ்சுபஞ்சபூதமோ
கூடிநின்றசோதியோ குலாவிநின்றமூலமோ
நாடுகண்டுநின்றதோ நாவுகற்றகல்வியோ
வீடுகண்டுவிண்டிடின் வெட்டவெளியுமானதே. ருoக

உருத்தரித்தபோதுசீவ னேக்கநின்றவுண்மையுந்
திருத்தமுள்ளதொன்றிலுஞ் சிவாயமஞ்செழுத்துமா
மிருத்துநின்றுறுத்தடங்கி யேகபோகமானபின்
கருத்தினின்றுதித்ததே கபாலமேந்துநாதனே. ருoஉ

கருத்தரித்துதித்தபோது கமலபீடமானதுங்
கருத்தரித்துதித்தபோது காரணங்களானதுங்
கருத்தரித்துதித்தபோது கரணமிரண்டுகண்களாய்
கருத்தினின்றுதித்ததே கபாலமேந்துநாதனே. ருoங

ஆனவன்னிமூன்றுகோண மாறிரண்டுஎட்டிலே
யானசிவனஞ்செழுத் தகாரமிட்டலர்ந்தது
மானசோதியுண்மையு மனாதியானவுண்மையு
மானதானதானதா யவலமாயமறைந்திடுமே. ருoச

ஈன்றெழுந்தவெம்பிரான் றிருவரங்கவெளியிலே
நான்றபாம்பின்வாயினல் லாலுதிக்குமாயினன்
மூன்றுமூன்றுவளையமாய முப்புரங்கடந்தபின்
னீன்றெழுந்தஅவ்விரேகைசை யெங்குமாகிநின்றதே. ருoரு

எங்குமெங்குமொன்றலோ வீரேழ்லோகமொன்றலோ
அங்குமிங்குமொன்றலோ வனாதியானதொன்றலோ
தங்குதாபரங்களுந் தரித்தவாரதொன்றலோ
உங்களெங்களங்கினி லுதித்ததேசிவாயமே. ருoசு

அம்பரத்திலாடுஞ்சோதி யானவன்னிமூலமா
மம்பரமுநதம்மரமு மகோரமிட்டலர்ந்தது
மம்பரக்குழியிலே யங்கமிட்டிருக்கிட
வம்பரத்திலாதியோ டமர்ந்ததேசிவாயமே. ருoஎ

வாடிலாதபூமலர்ந்து வண்டிரிசைகாவிலே
யோடிநின்றுருவெடுத் துகாரமாயலர்ந்தது
மாடியாடியங்குமகப்படக் கடந்தபின்
கூடிநின்றுலாவுமே குருவிருந்தகோலமே. ருoஅ

விட்டடிவிரைத்ததோ வேருருக்கிநின்றதோ
எட்டிநின்றசீவனு மீரேழ்லோகங்கண்டதோ
தட்டுருவமாகிநின்ற சதாசிவத்தொளியதோ
வட்டவீடறிந்தபேர்கள் வானதேவராவரோ. ௫௦௯

வானவர்நிறைந்தசோதி மானிடக்கருவிலே
வானதேவரத்தனைக்குள் வந்தடைவர்வானவர்
வானகமுமண்ணகமும் வட்டவீடறிந்தபின்
வானெலாநிறைந்துமன்னு மாணிக்கங்களானதே. ௫௧௦

பன்னிரண்டுகால்நிறுத்திப் பஞ்சவர்ணமுற்றிடில்
மின்னியேவெளிக்குணின்று வேறிடத்தமர்ந்ததுஞ்
சென்னியாந்தலத்திலே சிவனின்றியங்கிடும்
பன்னியுன்னியாய்ந்தவர் பரப்பிரமமானதே. ௫௧௧

உச்சிகண்டுகண்கள்கட்டி யுண்மைகண்டதெவ்விடம்
மச்சுமாளிகைக்குளே மானிடங்கலப்பிரேல்
எச்சிலானவாசல்களு மேகபோகமாய்விடும்
பச்சைமாலுமீசனும் பரந்ததேசிவாயமே. ௫௧௨

வாயிலிட்டுநல்லுரிசை யட்சரத்தொளியிலே
கோயிலிட்டுவாவியுமங் கொம்பிலேயுலர்ந்தது
மாயிலிட்டகாயமு மனுதியிட்டசீவனும்
வாயுவிட்டவன்னியும் வளர்ந்ததேசிவாயமே. ௫௧௩

அட்சரத்தையுச்சரித் தனுதியங்கிமூலமா
யட்சரத்தையுந்திறந்தகோரமிட்டலர்ந்தது
மட்சரத்திலுட்கர மகும்படக்கடந்தபின்
அட்சரத்திலாதியோ டமர்ந்ததேசிவாயமே. ௫௧௪

கோயிலுங்குளங்களுங் குளியினிற்குருக்களாய்
மாயிலுமடியிலு மனத்திலேமயங்குறீர்
ஆயனையரனையு மறிந்துணர்ந்துகொள்விரேல்
தாயினுந்தகப்பனோடு தானமர்ந்திருக்குமே. ௫௧௫

கோயிலெங்குமொன்றலோ குளங்கணீர்களொன்றலோ
தேயுவாயுவொன்றலோ சிவனுமங்கேயொன்றலோ
ஆயசீவனெங்குமா யமர்ந்துவாரதொன்றலோ
காயமீதறிந்தபேர்கள் காட்சியாவர்காணுமே. ௫௧௬

காதுகண்கள்மூக்குவாய் கலந்தவாரதொன்றலோ
சோதியிட்டெடுத்ததுஞ் சுகங்களுஞ்சுமொன்றலோ
ஓதிவைத்தசாத்திர முதித்துவாசதொன்றலோ
நா[illegible]டறிந்தபேர்க ளூதராவர்காணுமே. ௫௧௭

அவ்வுதித்தவட்சரத்தி னுட்கலந்தவட்சரம்
சவ்வுதித்தமந்திரஞ் சம்புளத்திருந்ததால்
மவ்வுதித்தமாய்கையால் மயங்குகின்றமாந்தர்காள்
உவ்வுதித்ததவ்வுமா யுருத்தரித்தவுண்மையே. ௫௧௮

அகாரமென்னுமக்கரத்தி லக்கரமெழுந்ததோ
அகாரமென்னுமக்கரத்தி லவ்வுவந்துதித்ததோ
உகாரமுமகாரமு மொன்றிநின்றுநின்றதோ
விகாரமற்றஞானிகாள் விரித்துரைக்கவேணுமே. ௫௧௯

சத்தியாவதுன்னுடல் தயங்குசீவனுட்சிவம்
பித்தர்காளிதற்குமேல் பிதற்றுகின்றதில்லையே
சுத்தியைந்துகூடமொன்று சொல்லிறந்ததோர்வெளி
சத்திசிவமுமாகிநின்று தண்மையாவதுண்மையே. ௫௨0

சுக்கிலத்துளையிலே சுரோணிதக்கருவுளே
முச்சதுரவாசலில் முளைத்தெழுந்தமோட்டினில்
மெய்ச்சதுரமெய்யுளே விளங்குஞானதீபமா
யுச்சரிக்குமந்திரம் ஓம்நமசிவாயமே. ௫௨௧

அக்கரமனாதியல்ல வாத்துமமனாதியல்ல
புக்கிருந்தபூதமும் புலன்களுமனாதியல்ல
தக்கமிக்கநூல்களுஞ் சாஸ்திரமனாதியல்ல
வொக்கநின்றுடன்கலந்த வுண்மைகாணனாதியே. ௫௨௨

மெண்மையாகிநின்றதேது விட்டுநின்றுதொட்டதேது
வுண்மையாகநீயுரைக்க வேணுமெங்களுத்தமா
பெண்மையாகிநின்றதொன்று விட்டுநின்றுதொட்டதை
யுண்மையாயுரைக்கமுத்தி யுட்சலத்திருந்ததே. ௫௨௩

அடக்கினுலடங்குமோ வண்டமஞ்செழுத்துளே
யுடக்கினுலெடுத்தகாய முண்மையென்றுணர்ந்துநீ
சடக்கிலாறுவேதமுந் தரிக்கவோதிலாமையால்
விட்[illegible]காயுமாயசோதி வேறுவேறுபேசுமோ. ௫௨௪

உண்மையானசக்கர முபாயமாயிருந்ததுந்
தண்மையானகாயமுந் தரித்தரூபமானதும்
வெண்மையாகிநீறியே விளங்குநின்றதானது
முண்மையானஞானிகள் விரித்துரைக்கவேண்டுமே. ௫௨௫

எள்ளகத்திலெண்ணெய்போல வெங்குமாகியெம்பிரா
னுள்ளகத்திலேயிருக்க வூசலாடுமூடர்காள்
கொள்ளைபட்டவாவினைக குணக்கெடுக்கவல்லிரேல்
வள்ளலாகிநின்றசோதி காணலாகுமெய்ம்மையே. ௫௨௬

வேணுமென்றஞானமும் விரும்புகின்றநூலிலே
தாணுவுண்டங்கென்கிறீர் தரிககிலீர்மறக்கிலீர்
தாணுவொன்றுமூலநாடி தன்னுள்நாடியும்முளே
காணுமன்றிவேறியாவுங் கண்மயக்கமோகருமே. ௫௨௭

வழக்கிலேயுரைக்கிறீர் மனத்துளேதவிக்கிறீர்
உழக்கிலாதுநாழியான வாறுபோலுமூமைகாள்
உழக்குநாலுநாழியான வாறுபோலுமும்முளே
வழக்கிலேயுரைக்கிறீர் மனத்துளீசன்மன்னுமே. ௫௨௮

அறத்திறங்களுககுநீ யண்டமெண்டிசைக்குநீ
திறத்தியங்களுக்குநீ தேடுவார்கள்சிந்தைநீ
புறகருமநீயுணாவுநீ யுட்கலந்தசோதிநீ
மறக்கொணாதநின்கழல் மறப்பினுங்குடிகொளே. ௫௨௯

ஆடுகின்றவெம்பிரானை யங்குமிங்குநின்றுநீர்
தேடுகின்றவீணர்காள் தெளிவதொன்றையோர்கிலீர்
நாடிநாடியும்முளே நவின்றுநோக்கவல்லிரேல்
கூடொணாததற்பரங் குவிந்துகூடலாகுமே. ௫௩௦

சுத்தியைந்துகூடமொன்று சொல்லிறந்ததோர்வெளி
சத்தியுஞ்சிவமுமாகி நின்றதன்மையோர்கிலீர்
சத்தியாவதும்முடல் தயங்குசீவனுட்சிவம்
பித்தர்காளறிந்துகொள் பிரானிருந்தகோலமே. ௫௩௧

அகாரமானதம்பலம் மனுதியானதம்பலம்
முகாரமானதம்பல முண்மையானதம்பல
மகாரமானதம்பலம் வடிவமானதம்பலஞ்
சிகாரமானதம்பலம் தெளிந்ததேசிவாயமே. ௫௩௨

[illegible]ரம்பறந்ததோடி சக்கரமேல்பலகையாய்
செக்[illegible]லெண்ணெய்போல சிக்குவாயுதேயுவு
முக்[illegible]யாளிகலந்து யுகங்களுங்கலக்கமாய்
புக்[illegible]புகுந்தபோது போனவாறதெங்ஙனே. ௫௩௩

வளர்[illegible]கொங்கைதன்னை மாயமென்றெண்ணிநீ
ரருள்கொ[illegible]வராருடம் புடைமையாகத்தோர்வீர்கள்
விளங்குஞானமேவியே மிக்கோர்சொல்லைக்கேட்பிரேல்
களங்கமற்றுநெஞ்சுளே கருத்துவந்துபுக்குமே. ௫௩௪

நாலுவேதமோதுகின்ற ஞானமொன்றறிவிரோ
நாலுசாமமாகியே நவின்றஞானபோதமா
யாலமுண்டகண்டனு மயனுமந்தமாலுமாய்ச்
சாலவுன்னிநெஞ்சுளே தரித்ததேசிவாயமே. ௫௩௫

சுற்றமென்றுசொல்வதுஞ் சுருதிமுடிவில்வைத்திட
ரத்தர்நித்தமாடியே யமர்ந்திருந்ததெவ்விடம்
பத்திமுற்றியன்பர்கள் பரத்திலொன்றுபாழது
பித்தரேயிதைக்கருகி பேசலாவதெங்ஙனே. ௫௩௬

எங்ஙனேவிளக்கதுக் கேற்றவாறுளின்றுதா
னெங்ஙனேயெழுந்தருளி யீசனேசரென்பரே
அங்ஙனேமறைபடாத தாழ்ந்துநோக்கவல்லரேல்
சிங்கமண்மியானைபோலத் திரிமலங்களற்றதே. ௫௩௭

அற்றவுள்ளகத்தையு மலக்கிடுமொழுகிடு
மெத்ததீபமிட்டதிற்பிற வாதபூசையேத்தியே
நற்றவம்புரிந்துஏக நாதர்பாதம்நாடியே
கற்றிருப்பதேசரிதை கண்டுகொள்ளுமும்முளே. ௫௩௮

பார்த்தநின்றதம்பலம் பரமனாடுமம்பலங்
கூத்துநின்றதம்பலங் கோரமானதம்பலம்
வார்த்தையானதம்பலம் வன்னியானதம்பலஞ்
சிற்பரமானதம்பலந் தெளிந்ததேசிவாயமே. ௫௩௯

சென்றுசென்றிடந்தொறும் சிறந்தசெம்பொனம்பலம்
அன்றுமின்றுநின்றதோ ரனாதியானதம்பலம்
பண்டியன்னங்காணுத பரமனானதம்பலம்
[illegible]றியொன்றிநின்றது மொழிந்ததேசிவாயமே. ௫௪௦

தந்தைதாய்தமரும்நீ சசலதேவதையும்நீ
சிந்தைநீதெளிவுநீ சித்திமுத்திதானும்நீ
விந்துநீவிளைவுநீ மேலதாயவேதம்நீ
யெந்தைநீயிறைவனீ யென்னையாண்டவீசனே. ௫௪௧

எப்பிறப்பிலும்பிறந் திறந்தழிந்தவேழைகா
ளிப்பிறப்பிலும்பிறந்து என்னநீறுபூசுறீ
ரப்புடன்மலமறுத்து ஆசைநீக்கவல்லிரேல்
செப்புராதவோசையிற் றெளிந்துகாணலாகுமே. ௫௪௨

மந்திரங்கள்கற்றுநீர் மயங்குகின்றமாந்தரே
மந்திரங்கள்கற்றநீர் மரித்தபோதுசொல்விரோ
மந்திரங்களும்முளே மதிக்கநீருமும்முளே
மந்திரங்களாவது மனத்திலைந்தெழுத்துமே. ௫௪௩

எட்டியோகமானது மியங்குகின்றநாதமும்
மெட்டுவக்கரத்துளே உகாரமுமகாரமும்
விட்டலர்ந்தமந்திரம் வீணைதண்டினூடுபோ
வட்டவக்ஷரத்துளே யமர்ந்ததேசிளாயமே. ௫௪௪

பிரான்பிரானென்றுநீர் பினத்துகின்றமூடரே
பிரானைவிட்டுமெம்பிரான் பிறிந்தவாறதெங்ஙனே
பிரானுமாய்பிரானுமாய் பேருலகுதானுமாய்
பிரானிலேமுளைத்தெழுந்த பித்தர்காணுமும்முடல். ௫௪௫

ஆதியில்லையந்தமில்லை யானநாலுவேதமில்லை
சோதியில்லைசொல்லுமில்லை சொல்லிறந்ததூவெளி
நீதியில்லைநேசமில்லை நிச்சயப்படாததும்
ஆதிகண்டுகொண்டபின் னஞ்செழுத்துமில்லையே. ௫௪௬

அம்மையப்பனப்பநீ ரமர்ந்தபோதறிகிலீ
ரமையப்பனானநீ ராதியானபாசமே
யம்மையப்பனின்னையன்றி யாருமில்லையானபின்
னம்மையப்பனின்னையன்றி யாருமில்லையில்லையே ௫௪௭

நூறுகோடிமந்திரம் நூறுகோடியாகமம்
நூறுகோடிநாளிருந் தூடாடிநாலுமென்பயன்
ஆறுமாறுமாறுமாறுமா யகத்திலோரெழுத்ததாய்
சிறையேத்தவல்லிரேல் சிவபதங்கள்சேரலாம். ௫௪௮

முந்தவோரெழுத்துளே முளைத்தெழுந்தசெஞ்சுட
ரந்தவோரெழுத்துளே பிறந்துகாயமானது
மந்தவோரெழுத்துளே யேகமாகிநின்றது
மந்தவோரெழுத்தையு மறிந்துணர்ந்துகொள்ளுமே. ௫௪௯

கூட்டமிட்டுநீங்களுங் கூடிவேதமோதுமீர்
எட்டகத்துளீசனு மிருப்பதென்னெழுத்துளே
நாட்டமிட்டுநாடிடு நாலுமூன்றுதன்னுளே
யாட்டகத்துளாடிடு மம்மையாணையுண்மையே. ௫௫௦

காக்கைமூக்கையாமையா ரெடுத்துரைத்தகாரணம்
நாக்கையூன்றியுள்வளைத்து ஞானநாடியூடுபோ
யேக்கைநோக்கவட்சர மிரண்டெழுத்துயேத்திடிற்
பார்த்தபார்த்ததிக்கெலாம் பரப்பிரமமானமே. ௫௫௧

கொள்ளொணாதுகுவிக்கொணாது கோதறக்குலைக்கொணாது
அள்ளொணாதுவணுகொணாது வாதிமூலமானதைத்
தெள்ளொணாதுதெளியொணாது சிற்பரத்தினுட்பயன்
விள்ளொணாதபொருளையான் விளம்புமாறதெங்ஙனே. ௫௫௨

ஓசையுள்ளகல்லைநீ ருடைத்திரண்டாய்செய்துமே
வாசலிற்பதித்தகல்லை மழுங்கவேமிதிக்கிறீர்
பூசனைக்குவைத்தகல்லில் பூவும்நீருஞ்சாத்துறீர்
ஈசனுக்குகர்தகல்லு யெந்தக்கல்லுசொல்லுமே. ௫௫௩

ஓட்டுவைத்துகட்டிநீ ருபாயமானமந்திரங்
கட்டுபட்டபோதிலுங் கர்த்தனங்குவாழுமோ
எட்டுமெட்டுமெட்டுளே யியங்குகின்றவாயுவை
வட்டமிட்டயவ்விலே வைத்துணர்ந்துபாருமே. ௫௫௪

இந்தவூரிலில்லையென்று எங்குநாடியோடுநீ
ரந்தவூரிலீசனு தமர்ந்துவாழ்வதெங்ஙனே
யந்தமானபொந்திலாரில் மேவிநின்றநாதனை
யுக்தமானசியிலவ்வி லறிந்துணர்ந்துகொள்ளுமே. ௫௫௫

புக்கிருந்ததுட்டமூலே பூரியிட்டதோத்திரம்
தொக்குசட்சகிங்குலை யாக்கிராணன்சூழ்ந்திடி
லக்குமணிகொன்றைசூடி யம்பலத்துளாடுவார்
[illegible]ாதியம்புடன் விளம்பிடாதுபின்னையே. ௫௫௬

பின்னெழுந்தமாங்கிஷத்தை பேதையர்கண்பற்றியே
பின்புமாங்கிஷத்தினல் போகமாய்கைபண்ணினல்
துன்புறும்வினைகள்தான் சூழ்ந்திடும்பினென்றலோ
அன்பராயிருந்தபேர்க ளாறுநீந்தல்போல்விடே. ௫௫௭

விட்டிருந்தும்முளே விதனமற்றிருக்கிறீர்
கட்டிவைத்தவாசல்மூன்று காட்சியானவாசலொன்று
கட்டிவைத்தவாசலுங் கதவுதாள்திறந்துபோய்த்
திட்டமானவீசனைத் தெளியுமாங்கிஷத்துளே. ௫௫௮

ஆகுமாகுமாகுமே யனாதியானவப்பொருள்
ஏகர்பாதம்நாடிநாடி யேத்திநிற்கவல்லிரேல்
பாகுசேர்மொழியுமைக்குப் பாலனாகியவாழலாம்
வாகுடனேவன்னியை மருவியேவருந்திடீர். ௫௫௯

உண்மையானதொன்றதொன்றை யுற்றுநோககியும்முளே
வண்மையானவாசியுணடு வாழ்த்தியேத்தவல்லிரேல்
தண்மைபெறறிருக்கலாம் தவமும்வந்துநேரிடும்
கன்மதன்மமாகுமீசர் காட்சிதானுங்காணுமே. ௫௬௦

பாலனாகவேணுமென்று பத்திமுற்றுமென்பரே
நாலுபாதமுண்டதில் நனைந்திரண்டடுத்ததால்
மூலநாடிதன்னில்வன்னி மூட்டியந்தநீருண
ஏலவார்குழலியோ யீசர்பாதமெய்துமே. ௫௬௧

எய்துநின்னையன்பின லிறைஞ்சியேத்தவல்லிரே
லெய்துமுண்மைதன்னிலே யிறப்பிறப்பகற்றிடும்
மையிலங்குகண்ணிபங்கன் வாசிவானிலேறிமுன
செய்தவல்வினைகளுஞ் சிதறுமதுதிண்ணமே. ௫௬௨

திண்ணமென்றுசேதிசொன்ன செவ்வியோர்கள்கேண்மினோ
யண்ணலன்புளன்புருகி யறிந்துநோக்கலாயிடும்
மண்ணதிரவிண்ணதிர வாசியைநடத்திடில்
நண்ணியெங்களீசனும் நமதுடலிருப்பனே. ௫௬௩

இருப்பனெட்டெட்டெண்ணிலே யிருந்துவேறதாகுவன்
நெருப்புவாயுநீருமண்ணும் நீள்விசும்புமாகுவன்
கருப்புகுந்துகாலமே கலந்தசோதிநாதனைக்
குருப்புனலில்மூழ்கினா குறித்துணர்ந்துகொள்வரே. ௫௬௪

கொள்ளுவார்கள்சிந்தையிற் குறிப்புணர்ந்தஞானிகள்
விள்ளுவார்கள்பக்குவத்தில் வேண்டிவேண்டியேத்தினால்
உள்ளுமாய்ப்புறம்புமா யுணர்வதற்குணருமாய்க்
தெள்ளிதாகநின்றசோதி செம்மையைத்தெளிந்திடே. ௫௬௫

தெளிந்தநற்சரியைதன்னில் சென்றுசாலோகம்பெறும்
தெளிந்தநற்கிரியைபூசை சேரலாஞ்சமீபமே
தெனிந்தநல்யோகந்தன்னில் சேரலாகுஞ்சாரூபந்
தெளிந்தஞானம்நான்கிலும் சேரலாஞ்சாயுச்சியமே. ௫௬௬

சேருவார்கள்ஞானமென்று செப்புவார்தெளிவுளோர்
சேருவார்கள்நாலுபாதச் செம்மையென்றதில்லையே
சேருவார்சிவகதி திருவருளைப்பெற்றபேர்
சேருமாறுகண்டுநாளுஞ் செய்தொழில்திடப்படே. ௫௬௭

திறமலிக்குநாலுபாதஞ் செம்மையுந்திறப்படார்
அறிவிலிகள்தேசநாடி யவத்திலேயலைவதே
குறியதனைக்காட்டியுட் குறித்துநோக்கவல்லிரேல
வெறிகமழ்சடையுளோன் மெய்ப்பதமடைவரே. ௫௬௮

அடைவுளோர்கள்முத்தியை யறிந்திடாதமூடரே
படையுடையதத்துவமும் பாதகங்களல்லவோ
மடைதிறக்கவாரியின் மடையிலேறுமாறுபோல்
உடலில்மூலநாடியை யுயரவேத்தியூன்றிடே. ௫௬௯

ஊன்றியேத்திமண்டல மூறுவிமூன்றுதாள்திரந்
தான்றுநந்தியேறிடி லமுர்தம்வந்திறங்கிடும்
நான்றிதென்றுதொண்டருக்கு நாதனும்வெளிப்படு
மூன்றியுமுயிர்பரம் பொருந்திவாழ்வதாகவே. ௫௭0

ஆகமூலநாடியி லனலெழுப்பியன்புடன்
மோகமானமாயையில் முயல்வதுமொழித்திடில்
தாகமேருநாடியேக னேகமானவாறுபோ
லேகர்பாதமன்புட னிறைஞ்சினோரறிவரே. ௫௭௧

அறிந்துநோக்கியும்முளே யயன்தியானமும்முளே
யிருந்திராமலேகர்பாதம் யெற்றிருப்பதுண்மையே
யறிந்துமீளவைத்திடா வனைவுமரணமேத்தினார்
வெறிந்துமேலைவாசலைத் திறந்துபாருமும்முளே. ௫௭௨

சோதியாகவும்முளே தெளிந்துநோக்கவல்லிரேல்
சோதிவந்துதித்திடுந் துரியாதீதமூற்றிடு
மாதிசக்கரத்தினி லமர்ந்துதீர்த்தமாடுவன்
பேதியாதுகண்டுகொள் பிராணனைத்திருத்தியே. ௫௭௩

திருவுமாய்சிவனுமாய் தெளிந்துளோர்கள்சிந்தையில்
மருவிலேயெழுந்துவீசும் வாசனையதாகுவன்
கருவிலேவிழுந்தெழுந்த கன்மவாதனையெலாம்
பருதிமுன்னிருளதாய்ப் பறியுமங்கிபாருமே. ௫௭௪

பாருமெந்தையீசர்வைத்த பண்பிலேயிருந்துநீர்
சேருமோடுவறிந்து செம்மையானவப்பொருள்
வேரையும்முடியையும் விரைந்துதேடிமாலயன்
பாரிடந்துவிண்ணிலே பறந்துங்கண்டதில்லையே. ௫௭௫

கண்டிலாதயன்மாலென்று காட்சியாகச்சொல்லுறீர்
மண்டினூலரானுடன் மேவலாயிருக்குமோ
தொண்டுபட்டுமன்புடன் தொழுதுநோக்கவல்லிரேல்
பண்டுமுப்புரமெரித்த பத்திவந்துமுத்துமே. ௫௭௬

முற்றுமேயவனொழிந்து முன்பினொன்றுங்காண்கிலேன்
பற்றிலாததொன்றுதன்னை பற்றிநிற்கவல்லது
கற்றதாலேயீசர்பாதங் காணலாயிருக்குமோ
பெற்றபேரையன்புடன் பிரியமாகக்கேளுமே. ௫௭௭

கேட்டுநின்றவுன்னிலே கிடைத்தகாலத்துளே
வாட்டமுள்ளதந்துவ மயக்கமுமகற்றிடும்
வீட்டிலேவெளியதாகும் விளங்கவந்துநேரிடுங்
கூட்டிவன்னிமாருதங் குயத்தைவிட்டெழுப்புமே. ௫௭௮

எழுப்பிமூலநாடியை யிதப்படுத்தலாகுமே
மழுப்பிலாதசபையை வலித்துவாங்கவல்லிரேல்
சுழுத்தியுங்கடந்துபோய் சொப்பனத்திலப்புற
மழுத்தியோரெழுத்துளே யமைப்பதுண்மையையனே. ௫௭௯

அல்லதில்லையென்றதா னுவியும்பொருளுடல்
நல்லவீசர்தாளிணைக்கு நாதனுக்குமீந்திலே
என்றுயென்னுள்நேசமும் வாசியைவுருந்தினால்
தொல்லையாம்வினைவிடென்று தூரதூரமானதே. ௫௮௦

ஆனதேபதியது யற்றதேபசுபாசம்
போனதேமலங்களும் புலன்களும்வினைகளும்
கானகத்திலிட்டதீயிற் காற்றுவந்தடுத்தலோ
ஆனகத்தில்வாயுவன்னி யொன்றியேயுலாவுமே. ௫௮௧

உலாவுமுவ்வுமவ்வுமா யுதித்தடர்ந்துநின்றது
மூலாவியைம்புலன்களு மொருதலத்திருந்திடும்
நிலாவுமங்குநேசமாகி நின்றமுர்தமுண்டுதாங்
குலாவுமெங்களீசனைக் குறித்துணர்ந்துகும்பிடே. ௫௮௨

கும்பிடுங்கருத்துளே குகனையைங்கரனையும்
நம்பியேயிடம்வலம் நமஸ்கரித்துநாடட
வெம்பிரானுமம்மையு மிருத்தியோடுவணைத்
தும்பிபோலவாசகந் தொடர்ந்துசோம்பிநீங்குமே. ௫௮௩

நீங்குமைம்புலன்களும் நிறைந்தவல்வினைகளும்
ஆங்காரமாமாசையு மருந்தடர்ந்தபாவமும்
ஓங்காரத்தினுள்ளிருந்தவொன்பதொழிந்தொன்றிலத்
தூங்கவீசர்சொற்படி துணிந்திருக்ககத்தமே. ௫௮௪

நினைப்பதொன்றுகண்டிலே னீயலாதுவேறிலை
நினைப்புமாய்மறப்புமாய் நின்றமாய்கைமாய்கையே
யனைத்துமாயகண்டமா யனாதிமுன்னனாதியாய்
நினக்குள்நானெனக்குள்நீ நினைக்குமாறதெங்ஙனே. ௫௮௫

கருக்கலந்தகாலமே கண்டுநின்றகாரணம்
உருக்கலந்தபோதலோ வுன்னைநானுணர்ந்தது
விரிக்கிலென்மறைக்கிலென் வினைக்கிசைந்தபோதலா
முருக்கலந்துநின்றபோது நீயும்நானுமொன்றலோ. ௫௮௬

ஞானநூல்கள்தேடியே நவின்றஞானயோகிகாள்
ஞானமானசோதியை நாடியுள்ளறிகிலீர்
ஞானமாகிநின்றதோர் நாதனையறிந்தபின்
ஞானமல்லதில்லைவேறு நாமுரைத்ததுண்மையே. ௫௮௭

கருத்தரிப்பதற்குமுன் காயம்நின்றதெவ்விடம்
உருத்தரிப்பதற்குமுன் னுயிர்ப்புநின்றதெவ்விடம்
மருட்பொதிந்தசிந்தையில் மயக்கம்நின்றதெவ்விடம்
விருப்புணர்ந்தஞானிகாள் விரித்துரைக்கவேணுமே. ௫௮௮

கருவினிற்கருவதா யெடுத்தவேழுதோற்றமு
மிருவினைப்பயத்தினால் பிறந்திறந்துழன்றிடும்
மறுவினைப்பிறவிமூன்று காலமும்வகுத்தபின்
உறுவினைப்பயனிதென் றுணர்ந்தஞானிசொல்லுமே. ௫௫௯

வாயிலெச்சில்போகவே நீர்குடித்துத்துப்புவீர்
வாயிருக்களச்சில்போன வாறதென்னதெவ்விடம்
வாயிலெச்சிலல்லவோ நீருரைத்தமந்திரம்
நாதனையறிந்தபோது நாடுமெச்சிலேதுசொல். ௫௬௦

தொடக்கதென்றுநீர்விழத் தொடங்குகின்றவூமர்காள்
தொடக்கிருந்ததெவ்விடஞ் சித்தியானதெவ்விடம்
தொடகிருந்தவாறறிந்து சுத்திபண்ணவல்லிரேல்
தொடக்கிலாதசோதியைத் தொடர்ந்துகாணலாகுமே. ௫௬௧

மேதியோடுமாவுமே விரும்பியேபுணர்ந்திடில்
சாதிபேதமாயுருத் தரிக்கும்வாறுபோலவே
வேதமோதுவானுடன் புலைச்சிசென்றுமேவிடில்
பேதமாய்ப்பிறக்கிலாத வாறதென்னபேசுமே. ௫௬௨

வகைக்குலங்கள்பேசியே வழக்குரைக்குமாந்தர்காள்
தொகைக்குலங்களானநேர்மை நாடியேயுணர்ந்தபின்
மிகைத்தசுகலமன்றியே வேறுமொன்றுகண்டிலீர்
நகைத்தநாதன்மன்றுள்நின்ற நந்தனியாறுபேசுமே. ௫௬௩

ஓதும்நாலுவேதமு முரைத்தசாஸ்திரங்களும்
பூததத்துவங்களும் பொருந்துமாகமங்களும்
சாதிபேதவண்மையுந் தயங்குகின்றநூல்களும்
பேதபேதமாகியே பிறந்துழன்றிருந்ததே. ௫௬௪

உறங்கிலேன்விழிக்கிலேனுணர்வுசென்றொடுங்கிலேன்
திறம்பிலேன்றிகைக்கிலேன் சிலதிசைகளெட்டிலேன்
புறம்புமுள்ளுமெங்கணும் பொதிந்திருந்ததேகமாய்
நிறைந்திருந்தஞானிகள் நினைப்பதேதுமில்லையே. ௫௬௫

அங்கலிங்கம்பூண்டுநீ ரகண்டபூசைசெய்கிறீர்
அங்கலிங்கம்பூண்டுநீ யமர்ந்திருந்தமார்பனே
யெங்குமோடியெங்குமெங்கு மீடழிக்குமாய்கிறீர்
செங்கல்செம்புகல்லெலாஞ் சிறந்துபார்க்குமூடரே. ௫௬௬

தீட்டந்தீட்டமென்றுநீர் தினமுழுகுமூடரே
தீட்டமாகியல்லவோ திரண்டுகாயமானதும்
பூட்டகாயமும்முளே புகழுகின்றபேயரே
தீட்டலந்துகொண்டலோ தெளிந்ததேசிவாயமே. ௫௯௭

*மூலநாடிதம்முளே முளைத்தெழுந்தவாயுவை
நாளுநாளுமும்முளே நடுவிருத்தவல்லிரேல்
பாலனாகுமும்முடல் பறந்துபோகலாய்விடும்
ஆலமுண்டகண்டர்பாத மம்மைபாதமுண்மையே. ௫௯௮

உந்திமேலேநாலுமூன்று ஓம்நமசிவாயமாஞ்
சந்திசந்தியென்றுநீர் சாறறுகின்றபேயரே
முந்தவந்துநம்முளே மூலநாடியூடுபோய்
அந்திசந்தியற்றிட மறிந்துணர்ந்துபாருமே. ௫௯௯

வன்னிமூன்றுதீயினில் வாழுமெங்கள்நாதனுங்
கன்னியானதுள்ளிருக்கக் காதல்கொண்டதெவ்விடஞ்
சென்னிநாலுகையிரண்டு சிந்தையிலிரண்டிலொன்று
உன்னியுன்னியும்முளே யுய்த்துணர்ந்துபாருமே. ௬௦௦

தொண்டுசெய்துநீங்களுஞ் சூழவோடிமாள்கிறீர்
உண்டுமூன்றாம்முளே யுற்றுணர்ந்துபார்க்கிலீர்
வண்டுலாவுசோலைசூழ வாழுமெங்களநாதனும்
பண்டுபோலநம்முளே பகுத்திருப்பனீசனே. ௬௦௧

அரியதோர்நமச்சிவாய மாதியந்தமானதும
ஆறிரண்டுநாறுகோடி யளவிடாதமந்திரம
தெரியநாலுவேதமாறு சாத்திரபுராணமுந்
தேடுமாலுமயனுஞ்சர்வ தேவதேவதேவனே. ௬௦௨

பரமுனக்கெனக்குவேறு பயமுமில்லைபாரையா
கரமுனக்குநித்தமுங் குவித்திடக்கடமையாஞ்
சிரமுருக்கியமுதளித்த சிறுலாவுநாதனே
யுரமெனக்குநீயளித்த வுண்மையுண்மையுண்மையே. ௬௦௩

மூலவட்டமீதிலே முளைத்தவைந்தெழுத்திலே
கோலவட்டமூன்றுமாய்க் குளிர்ந்தலர்ந்துநின்றநீ
ஞாலவட்டமன்றுளே நவின்றஞானமேலதா
[illegible]ட்டமாகியே யிருந்ததேசிவாயமே. ௬௦௪

என்னகத்திலென்னைநா னெங்குமோடிநாடினே
னென்னகத்திலென்னையன்றி யேதுமொன்றுகண்டிலேன்
மின்னெழும்பிவிண்ணகத்தின் மின்னொடுங்கும்வாறுபோ
லென்னகத்துளீசனோடி யானுமல்லதில்லையே. ௩௦௫

நாலுவேதமோதுகின்ற ஞானமொன்றறிவிரோ
நாலுசாமமாகிய நவின்றஞானபோதமாய்
ஆலமுண்டகண்டனு மயனுமந்தமாலுமாய்ச்
சாலவுன்னிநெஞ்சிலே தரித்ததேசிவாயமே. ௩௦௬

முச்சதுரமூலமாகி மூன்றதானபேதமா
யச்சதுரமும்முளே யடங்கவாசியோகமா
மெய்ச்சதுரமெய்யுளே விளங்குஞானதீபமா
யுச்சரித்தமந்திர மோம்நமசிவாயமே. ௩௦௭

மூன்றுமண்டலத்துளே முச்சதுரமாயமாய்
நாலுவாசலெண்விரலி னடுவுதித்தமந்திரங்
கோலியென்றுமைந்துமாய்க் குளிர்ந்தலர்ந்துநின்றநீ
மேலுமேலுநாடினேன் விளைந்ததேசிவாயமே. ௩௦௮

இடங்கள்பண்ணிசுத்திசெய்தே யிட்டபீடமீதிலே
யடங்கநீறும்பூசல்செய் தருந்தவங்கள்பண்ணுவீர்
ஒடுங்கிநின்றநாதனை ருதிக்குஞானமேவிட
மடங்குகின்றதெவ்விட மறிந்துபூசைசெய்யுமே. ௩௦௯

புத்தகங்களைச்சுமந்து பொய்களைப்பிதற்றுவீர்
செத்திடப்பிறந்திடம தேதுவென்றறிகிலீர்
அந்தனையசித்தனை யறிந்துநோககவல்லிரோ
லுத்தமத்துளாயசோதி யுணருபோகமாகுமே. ௩௧௦

அருளிலேபிறந்துதித்து மாயையுருபமாகிய
விருளிலேதயங்குகின்ற வேழைமாந்தர்கேண்மினோ
பொருளிலேதவம்புனைந்து பொருந்திநோக்கவல்லிரேல்
மருளதேதுவன்னியின் மறைந்ததேசிவாயமே. ௩௧௧

கருக்கலந்தகாலமே கண்டிருந்தகாரணா
வுருக்கலந்தபோதலோ வுன்னையானறிந்தனன்
தருக்கலந்தசோதியைத் தெளிந்துயானறிந்தபின்
னிருக்கிலேனிறக்கிலே னிரண்டுமின்றிருந்ததே. ௩௧௨

தன்மசிந்தையாமளவுந் தவமறியாத்தன்மையாய்க்
கன்மசிந்தைவெயிலுழன்று கருத்துமிழ்ந்தகசடரே
சென்மசென்மந்தேடியுந் தெளியொணாதசெல்வனை
நன்மையாகவும்முளே நயந்துகாணவேண்டுமே. ௬௧௩

கள்ளவுள்ளமேயிருக்க கடந்தஞானமோதுவீர்
கள்ளமுள்ளறுத்தபோது கதியிதன்றிக்காண்கிலீ
ருள்ளமேவிளக்கிநித்த மொளியணுகவல்லிரேற்
றெள்ளுஞானமும்முளே சிறந்ததேசிவாயமே. ௬௧௪

காணவேண்டுமெனறுநீர் கடன்மலைகளேறுவீர்
ஆணவமதல்லவோ வறிவில்லாதமாந்தரே
வேணுமென்றவ் வீசர்பாதமெய்யுளே தரிப்பரேற்
றூணுவாகநின்றசீவன் றான்சிவமதாகுமே. ௬௧௫

அணுவினோடகண்டமா யளவிடாதசோதியைக
குணமதாகவும்முளே குறித்துநோக்கின்முத்தியாம
மிணமிணென்றுவிரலையெண்ணி மீளொணாமயக்கமாய்த்
துணிவிலாதபடியினாற் றொடர்ந்துபூசைசெய்குவீர். ௬௧௬

எச்சிலெச்சிலென்றுநீ ரிடைந்திருக்குமேழைகா
டுச்சிலெச்சிலல்லவோ தூயகாயமானதும்
வைத்தவெச்சிறேனலோ வண்டினெச்சில்பூவலோ
கைச்சதாவில்வைத்துடன் கறந்தபாலுமெச்சிலே. ௬௧௭

தீர்த்தலிங்கமூர்த்தியென்று தேடியோடுந்தீதரே
தீர்த்தலிங்கமுள்ளினின்ற சீவனைத்தெளியுமே
தீர்த்தலிங்கமும்முளே தெளிந்துகாணவல்லிரேற்
றீர்த்தலிங்கந்தானதாய்ச் சிறந்ததேசிவாயமே. ௬௧௮

ஆடுகொண்டுகூடுசெய் தமர்ந்திருக்கும்வாதுபோற்
றேடுகின்றசெம்பினைத் திடப்படப்பரப்பியே
நாடுகின்றதம்பிரானு நம்முளேயிருக்கவே
போடுதற்பபூசையென்ன பூசையென்னபூசையே. ௬௧௯

என்னையற்பநேரமு மறக்கிலாதநாதனே
ஏகனேயிறைவனே யிராசராசராசனே
யுன்னையற்பநேரமு மொழிந்திருக்கலாகுமோ
வுனதுகாட்டமெனதுநாவி லுதவிசெய்யிரீசனே. ௬௨௦

எல்லையற்றுநின்றசோதி யேகமாயெரிக்கவே
யெந்தைபூரணப்பிரகாச ரேகபோகமாகிய
நல்லவின்பமோனசாக ரத்திலேயழுத்தியே
நாடொறுந்தவமிர்தமுண்டு நானழிந்துநின்றநாள். ௩௨௧

ஆனவாறதாயிடு மகண்டமானசோதியை
யூனைகாட்டியும்முளே யுகந்துகாணவல்லிரே
லூனகாயமாளலா முலகபாரமாளலாம்
வானநாடுமாளலாம் வண்ணநாடராணையே. ௩௨௨

நித்தலுமணிதுலக்கி நீடுமூலைபுக்கிருந்து
கத்தியேகதறியே கண்கண்மூடியென்பயன்
எத்தனைபேரெண்ணினு மெட்டிரண்டுபத்தலோ
வத்தனுக்கிதேற்குமோ வறிவிலாதமாந்தரே. ௩௨௩

எட்டிரண்டுங்கூடியே யிலிங்கமானதேவனை
மட்டதாகவும்முளே மதித்துநோக்கவல்லிரேற்
கட்டமானபிறவியென் கருங்கடல்கடக்கலா
மிட்டமானவெளியிலே யிசைந்திருப்பீர்காண்மினே. ௩௨௪

உண்மையானமந்திர மொளியிலேயிருந்திடுந்
தண்மையானமந்திரஞ் சமைந்தரூபமாகிய
வெண்மையானமந்திரம் விளந்துநீறதானதே
யுண்மையானமந்திரம் தொன்றுமேசிவாயமே. ௩௨௫

பன்னிரண்டுநாளிருத்திப் பஞ்சவன்னமொத்திட
மின்னியவ்வெளிக்குணின்று வேரெடுத்தமர்ந்தது
சென்னியானதலத்திலே சீவனின்றியங்கிடும்
பன்னியுன்னியாய்ந்தவர் பரப்பிரமமாவரே. ௩௨௬

தச்சிவாயிலுச்சிமே லாயிரந்தலங்களாய்
முச்சுடருமூவிரண்டு மூண்டெழுந்ததீசுடர்
வச்சிரமதாகியே வளர்ந்துநின்றதெவ்விடம்
இச்சுடருமிந்தியமு மேகமானதெங்ஙனே. ௩௨௭

முத்திசித்திதொந்தமாய் முயங்குகின்றமூர்த்தியை
மற்றுதித்தவைம்புலன்க ளாகுமத்திமப்புலன்
அத்தனித்தகாளகண்டரன்பினாலறுதின
முச்சரித்துளத்திலே யறிந்துணர்ந்துகொண்மினே. ௩௨௮

அண்ணலாரநாதியா யநாதிமுன்னநாதியாய்
பெண்ணுமாணுமென்றலோ பிறப்பதாகு முன்னலங்
கண்ணிலாணில்சுக்கிலங் கருத்தொடுங்கிநின்றபின்
மண்ணுளோருவிண்ணுளோரும்வந்தவாரதெங்ஙனே. ௬௨௯

எத்திசைக்குமெவ்வுயிர்க்கு மெங்களப்பனென்பிரான்
முத்திஞானவித்துளே முளைத்தெழுந்தசெஞ்சுடர்
சித்தினிற்றெளிந்தபோது தேவர்கோயிற்சேர்ந்தன
னத்தனுடல்கண்டபோ தடங்கியாடலுற்றதே. ௬௩௦

வல்லவாசலொன்பது மருத்தடைத்தவாசலுஞ்
சொல்லும்வாசலோரைந்துஞ் சொல்லிவிம்மிநின்றதும்
நல்லவாசலைத்திறந்து ஞானவாசலூடுபோ
யெல்லைவாசல்கண்டபி னினிப்பிறப்பதில்லையே. ௬௩௧

ஆதியானதொன்றுமே யநேகரூபமாயமாய்ப்
பேதபேதமாயெழுந்து சர்வசீவனானபின்
ஆதியோடுகூடிமீண்டெழுந்துசன்மமானபின்
சோதியானஞானியாயிருஞ் சுத்தமாயிருப்பரோ. ௬௩௨

வண்டுபூமணங்களோடுவந்திருந்ததேனெலாம்
உண்டுளேயடங்குவண்ண மோதுலிங்கமூலமாய்க்
கண்டுகண்டுவேரிலேகருத் தொடுங்கவல்லிரேற்
பண்டுகொண்டவல்வினை பறந்திடுஞ்சிவாயமே. ௬௩௩

ஓரெழுத்துலிங்கமாக வோதுமக்கரத்துளே
யோரெழுத்தியங்குகின்ற வுண்மையையறிகிலீர்
மூவெழுத்துமூவராய் முளைத்தெழுந்தசோதியை
நாவெழுத்துநாவுளே நவின்றதேசிவாயமே. ௬௩௪

தாரதாரதாரமுந் தொடர்ந்தெழுந்ததாரமும்
பாரபாரபாரமென்று பரிந்திருந்தபாவிகாள்
நேரநேரநேரமு நினைந்திருக்கவல்லிரேல்
தாரதாரதாரமுந் தொடர்ந்துகூடலாகுமே. ௬௩௫

குண்டலங்கள்பூண்டுநீர் குளங்கடோறுமூழ்குநீர்
மண்டுகங்கள்போலநீர் மனத்தின்மாசறுக்கிலீர்
மண்டையேந்துகையரை மனத்திருத்தவல்லிரேற்
பண்டைமாலயன்றொழப் பணிந்துவாழலாகுமே. ௬௩௬

கூடுகட்டிமுட்டையிட்டுக் கொண்டிருந்தவாறுபோ
லாடிரண்டுகன்றையீன்ற வம்பலத்துளாடுதே
மாடுகொண்டுவெண்ணெயுண்ணு மானிடப்பசுக்களே
விடுகண்டுகொண்டபின்பு வெட்டவெளிகாணுமே. ௬௫௭

உள்ளதோபிறப்பதோ வுயிர்ப்படங்கிநின்றிடும்
மெள்ளவந்துகிட்டநீ வினவவேண்டுமென்கிறீ
ருள்ளதும்பிறப்பது மொத்தபோதுநாதமாய
கள்ளவாசலைத்திறந்துகாணவேண்டுமாந்தரே. ௬௫௮

நட்டகல்லைதெய்வமென்று நாலுபுட்பஞ்சாத்தியே
சுற்றிவந்துமொணமொணென்று சொல்லுமந்த்ரமேதடா
நட்டகல்லும்பேசுமோ நாதனுள்ளிருக்கையில்
சுட்டசட்டிசட்டுவங் கறிச்சுவையறியுமோ. ௬௫௯

நானுமல்லநீயுமல்ல நாதனல்லவோதுவேன்
வானிலுள்ளசோதியல்ல சோதிநம்முளுள்ளதே
நானுநீயுமொத்தபோது நாடிக்காணலாகுமே
தானதானதத்ததான நாதனானதானனே. ௬௬0

நல்லதல்லகெட்டதல்ல நடுவில்நிற்பதொன்றுதான்
நல்லதென்றபோதது நல்லதாகிநின்றபின்
நல்லதல்லகெட்டதென்றால் கெட்டதாகுமாதலால்
நல்லதென்றுநாடிநின்று நாமஞ்சொல்லவேண்டுமே. ௬௬௧

பேய்கள்கூடிப்பிணங்கடின்னும பிரியமில்லாக்காட்டிலே
நாய்கள்சுற்றநடனமாடு நம்பன்வாழ்க்கையேதடா
தாய்கள்பாலுதிக்குமிச்சை தவிரவேண்டிநாடினல்
நோய்கள்பட்டுழல்வதேது நோக்கிப்பாருமும்முளே. ௬௬௨

உப்பைநீக்கிலழுவிப்போகு மூற்றையாகுமுடலில்நீ
அப்பியாசைகொண்டிருக்க லாகுமோசொலறிவிலா
தப்பிலிப்பொய்மானங்கெட்ட தடியனாகுமனமேகேள்
ஒப்பிலாசெஞ்சடையனாகு மொருவன்பாதமுண்மையே. ௬௬௩

பிறப்பதெல்லாமிறப்பதுண்டு பேதைமக்கள்தெரிகிலா
திறப்பதில்லையெனமகிழ்ந்து யெங்களுங்கள்சொத்தென
குறிப்புபேசித்திரிவரன்றி கொண்டகோலமென்னவோ
நிறப்பும்பொங்கியழிந்தபோது நேசமாமோயீசனே. ௬௬௪

கோலமிட்டமேனிகுன்றில் கொண்டகோலமெங்ஙனே
சேலமெங்குசீருமெங்கு செத்தொழிந்ததல்லவோ
சாலநின்றுசாமியென்று சாற்றவல்லதாசர்காள்
ஆலமுண்டகாலகண்ட னாணைகாணும்காணுமே. ௯௪௫

முன்னிருந்தநிலைமறக்க மண்ணில்வந்தநாளிலே
பின்னிருக்கவகையறிய வேணுமன்றிவேறிலை
மன்னனென்றுங்கன்னனென்று மதியிழந்துபேசலால்
பொன்னிக்கதுமண்ணைத்தேடும் போகமாகுமாயமே. ௯௪௬

சுட்டெரிந்தசாந்துபூசும் சுந்தரப்பெண்மதிமுகத்
திட்டநெட்டெழுத்தறியா தேங்கிநோக்குமதிவலீர்
பெட்டகத்துப்பாம்புறங்கும் பித்தலாட்டமறியிரே;
கட்டவிழ்த்துப்பிரமன்பார்க்கில் கதியுமக்குயேதுகாண். ௯௪௭

காலனென்றுசொல்லுவோர் கலங்கிநிற்பர்காணுமே
காலனென்றுசொல்லுவோர் காலனோடுசேர்வரே
காலனென்றுசொல்லுவோர் பாலனாகிமாள்வரே
காலனைமறந்துபோது காண்பர்காணுமீசனை. ௯௪௮

வீடுநாடுநம்மதென்று வீண்புரளிசெய்குவர்
வீடுநாடுநம்மதாகில் காலநாடுநம்மதே
வீடுநாடுநம்மதென்னு வாதுதான்செயாவிடின்
வீடுநாடளிப்பவன் விமலனானம்மீசனே. ௯௪௯

வேதமோதுவேலையோ வீணதாகும்பாரிலே
காதகாததூரமோடி காதல்பூசைவேணுமோ
ஆதிநாதன்வெண்ணெயுண்ட வவனிருக்கநம்முளே
கோதுபூசைவேதமேது குறித்துபாருமும்முளே. ௯௫௦

பரமிலாததெவ்விடம் பரமிருப்பதெவ்விடம்
அறமிலாதபாவிகட்கு பரமிலையதுண்மையே
கரமிருந்தும்பொருளிருந்து மருளிலாதபோதது
பரமிலாதசூன்யமாகும் பாழ்நரகமாகுமே. ௯௫௧

ஐந்துஎட்டுமென்றபோது நட்டகல்லுந்தெய்வமே
சந்தையையொழித்தபோது சிந்தையொன்றதாகுமே
பந்தமுள்ளமானிடர் பகுத்தறியாதழிவதால்
எந்தநாதனென்செய்வா னிதறிவர்பித்தரே. ௯௫௨

சித்தரென்றுஞ்சிறியரென்று மறியொணாதசீவர்காள்
சித்தரிங்கிருந்தபோது பித்தரென்றுஎண்ணுவீர்
சித்தரிங்கிருந்துமென்ன பித்தனாட்டிருப்பரோ
அத்தனாடுமிந்தநாடு வர்களுக்கெலாமொன்றே. ௬௱௩

மாதர்தோள்சேராததேவர் மானிலத்திலில்லையே
மாதர்தோள்புணர்ந்தபோது மனிதர்வாழ்சிறக்குமே
மாதராகுஞ்சகதியொன்று மாட்டிகொண்டதாதலால்
மாதராகும்நீலிகங்கை மகிழ்ந்துகொண்டானீசனே. ௬௱௪

சோகபோகயோகமென்ன தொலையுமந்தத்துன்பமே
சாகலாகாபோகம்வேண்டி தவமிருத்தல்நன்றலோ
காகமேறுந்தம்பிரானுங் காட்டமாட்டான்றலைதனை
நாகபூஷணனமக்கு நல்லனுவன்வல்லமே. ௬௱௫

தெய்வதெய்வமென்றுசொல்லி தேசதேசமோடுவீர்
தெய்வமுள்ளமேலிருந்து திருவரங்கங்காட்டுமே
தெய்வமந்ததெய்வமே தெளிந்தஞானங்கிட்டினால்
தெய்வமேதுவம்தலால் தெளிந்தஞானபானுவே. ௬௱௬

மாயமென்னமாயமே மறைந்துநிற்குமுபாயமே
ஞாயமொன்றுதித்தபோது ஆயஞாயமாயமே
காயமீதுகாலன்றாக்கில் காயமப்போமாயமே
தூயஞானபானுவாதி சொல்வதுசிவாயமே. ௬௱௭

சிவாயமென்றவக்ஷரஞ் சிவபெருமானக்ஷரம்
சிவாயமென்றபோதது சடாக்ஷரவுபாக்ஷரம
சிவாயவாயரூபமே திருமலையஷ்டாக்ஷரம்
சிவாயவாயரூபபேதந் தாக்கும்போதுமாயமே. ௬௱௮

அண்டபிண்டசராசர மடுக்காய்நின்றபோதிலே
கண்டுகொண்டபெண்கள்கற்பங் கண்டுவந்தமாந்தர்காள
தொண்டைநோகச்சொல்லுமந்த்ரஞ் சொல்லொணாதமந்திரம்
பண்டையந்தமந்திரம் பகர்ந்தமந்த்ரஞ்சிவாயமே. ௬௱௯

ஆதிதேவனானது மனாதிதேவனானதுஞ்
சோதிதேவனானதுஞ் சுயம்புலிங்கமானதும்
வேதன்வெற்பன்தொழுதுநிற்கு மாதர்தோளிணையுநன்
னாதனாதனாதனாக னானதோர்சிவாயமே. ௬௱௰

சருகருந்திநீர்குடித்து சார்ல்வாழ்தவசிகாள்
சருகருந்தில்தேகங்குன்றி சஞ்சலமுண்டாகுமே
வருவிருந்தோடுண்டுடுத்தி வளர்மனைசுகிப்பிரேல்
வருவிருந்தோனீசனுகி வாழ்வளிக்குஞ்சிவாயமே. ௬௬௧

ஒன்றுமூன்றுநான்குதான் நான்முகன்படைப்புதான்
ஒன்றுநான்குஐந்துதா னும்பர்கோனழிப்புதான்
ஒன்றுயேழுயெட்டுதா னுலகநாதன்காப்புதான்
ஒன்றில்மூன்றனையும்போ துதிப்பதுசிவாயமே. ௬௬௨

ஐந்துமெட்டுமொன்றுதா னதையறியாமாந்தர்காள்
தெந்தனத்தோடேசிபேசி தென்னவனுடேகுவீர்
அந்தயிந்தயென்றபேத மாவியுள்ளமட்டுமே
சேரந்தனையீசன்பாதஞ் சேர்வதல்லோஞாயமே. ௬௬௩

கல்லபிள்ளைபெண்டுவாய்க்கில் நானிலத்தில்மகிழுவீர்
இல்லம்விட்டுயேகும்போது யிவரெலாம்பின்வருவரோ
தொல்லைநீர்செய்வினைகள்வந்து சூழுமன்றிவேறிலை
யல்லலானவவ்விரண்டை யறமறப்பீர்சிவாயமே ௬௬௪

ஆனைகட்டிசேனைகட்டி வாழுமன்னர்கோடிபேர்
பூனைகட்டவிடமிலாது போபொழியப்பார்த்துமே
ஊனைகட்டிநிலைத்திருப்ப துண்மையாமோகுருவெனும்
கோனைகட்டிவாழவேண்டுங் குறையிலைசிவாயமே. ௬௬௫

கூளம்போன்றமானிடக் குழாங்களானபாவிகாள்
தாளம்போடுந்தாசியாடில் தலைதெரியாதோடலேன்
காளகண்டனுதையில்மாண்ட காலனெதிர்வரும்
நாளைகாணிலென்செய்வீர் நாட்டங்கொள்ளும்நாதனே. ௬௬௬

உண்மைகண்டபேர்களு முணரகில்லாமாந்தரும்
பெண்மைகண்டுவாழ்ந்திருந்து பெற்றதுண்டுமேலிடம்
மண்மைவிட்டுமயங்கிநாளும் வந்துவந்துபிறந்திடும்
தன்மைகொண்டுமாள்வரல்லால் தனியைக்காணார்பாவமே ௬௬௭

கேளுமந்தசோதியந்த சோதியாதிகம்முளே
காளுமாளுமாளநாளும் நன்கறியவேணுமே
ஆளுமாளுதிக்கவிம்மி யாகும்வேறுகாண்கிலேன்
நாளும்பூசிநீறுபூசி சொல்லினில்லுமைமந்தையே. ௬௬௮

ஐந்தையெட்டைநிட்டைகூடி யழுத்தியுச்சரித்தபோ
தைந்துமெட்டுமொன்றதாகி யன்பைநீக்குமையனே
கந்தைகட்டிவேடமேது சந்தைகூட்டமேதுதான்
சிந்தைவிட்டொழிந்துசுத்த சிவத்தொடுகலப்பரோ. ௬௬௯

பாருமேபகருமே பாவிமக்கள்செவியிடங்
கூறுமேகுறியுமே கொண்டல்வண்ணன்சீரதை
ஆறுமேயைந்துமாகி வட்டவட்சரத்துள்நின்
றாருமூருநோக்கநோக்க வுயர்ந்தவீடுகிட்டுமே. ௬௭௦

கிட்டுமென்றவீடது கிடக்குமும்முள்ளறிகிலா
துட்டருடுநாடிநாடி வாடிப்போவீர்மாந்தரே
அட்டலக்மிராதன்றென்ன ரங்கன்சோதியானபோ
திட்டமன்றுள்ளாடுவா னிதறிமின்மாந்தரே. ௬௭௨

மாந்தர்வாழ்வுமண்ணிலே மறந்தபோதுவிண்ணிலே
சாந்தனை ஆவியைச் சரிப்படுத்தவல்லிரேல்
வேந்தனுநின்றுளாடும விமலன்பாதம்காணலாம்
கூந்தலம்மைகோணலொன்றுங் கூறிக்கொணுதிதுண்மையே. ( )

உண்மையுண்மைநாதனுண்மை யுலகமுண்மையல்லவே
கண்மைதிட்டுமாதராசைக கலந்தாலதுமுண்மையே
தண்மைவேண்டில்மாதரபோக்க தள்ளிப்பாருங்காணுணு
நண்பனிசன்யோகியாகி நாடிநிற்பனும்முளே. ௬௭௪

உம்முளேயெலாமிருக்க வுணரகில்லாமாந்தரே
உம்முளேயிருப்பதென்ன யிலாததென்னசொல்லுவீர்
உம்முளேயிருக்குமை யொழிந்தபோதுவுண்மைதான்
உமமுளேவெளிப்படு முலகபோகநீங்குமே. ௬௭௫

நீங்கும்வெண்கலந்திருனைசை யோட்டையாகிலாவியைத்
தாங்குமுங்கடேகமவீழில் தவித்துவாழ்வீர்நரகினி
லோங்குமபசசைவண்ணனுட லூற்றுநோக்கவல்லிரேல்
தூங்குமெச்சுகத்திலென்றுந் தூங்கிவாழ்விருண்மையே. ௬௭௬

அஞ்செழுத்தினிற்பிருதி யாகிடும்நகாரமே
ரெஞ்சகத்திருத்திநூறு திறமுறைக்கவல்லிரேல்
வஞ்சகப்பகைவரும் வலதுறைத்தபோர்களுங்
கெஞ்சியேபணிவர்யாவுங் கேட்டதெலாமீவரே. ௬௭௭

அப்புவினெழுத்தினி லமைந்ததோர்மகாரமே
செப்பிடினத்தினூறு திறமுறைக்கவக்கணங்
தப்பிடாதெவருமுன் தடமொடிங்கிராப்பகல்
எப்பொழுதும்வார்த்தைசொல்லி யின்பமாயிருப்பரே. சுஎஅ

கனலினெழுத்துடன் கலந்ததோர்சிகாரமே
நினைவதிலிருத்தினூறு திறமுறைக்கவல்லீரேல்
மூன்முகத்துப்போரரசர் முன்பணிவர்யாவரும்
மனமதுமகிழ்ந்துவாழ்க வல்லெழுத்திதாகுமே, சுஎகூ

வாயுவினெழுத்தது வழங்கிடும்வகாரமும்
நேயமாகநூறுதிற நிதமுருசெபித்திடின்
ஞாயுடன்பெண்ணுண்மிருகஞ் சாரும்பட்சியாவுமே
பேயுடன்பேதாளபிரம்ம ராட்சசுவசியமே, சுஅ௦

விண்ணெழுத்துவோங்கிட விரும்பியேயகாரசொல்
லெண்ணினித்தம்நூருறு யிடரறச்செபித்திடின்
மண்ணுடன்கருவுபாவை வைப்புசூனியம்முதல்
குண்ணிமோரணமுங் குலைகுலைந்தொடுங்குமே. சுஅக

சீச்சீசீச்சீசீச்சீயென்று செப்பிடச்சினம்வரா
சீயெனவிகழ்ந்தொருசொல் செப்பிடச்சினமதாய்ச்
சீயென்றேசிதாடைமீது திட்டெனவடித்திட
சீயெனும்பல்லங்களே சிதறிவிழுந்தேகுமே. சுஅஉ

முன்னெழுத்துவொன்றுடன் மூன்றெழுத்துங்கூட்டியே
பின்னெழுத்திரண்டினைப் பிணைத்துருவதேற்றிட
தன்னெழுத்துமூன்றினைச் சந்ததஞ்செபித்திடின்
மண்ணெழுத்துவாலையக்ஷ ரமுமாகுமங்ஙனே. சுஅங

சிவாயவசியென்னவுஞ் செபிககவிச்சகமெலாம்
சிவாயவசியென்னவுஞ் செபிக்கயாவுஞ்சித்தியாம்
சிவாயவசியென்னவுஞ் செபிக்கவானமாளலாம்
சிவாயவசியென்பதே சிருதலைத்தீயாகுமே. சுஅச

ஊனெழுத்துயிரெழுத்து வூமையெழுத்தானதும்
மானெழுத்துமாரெழுத்து மாயெழுத்துவானதும்
பானெழுத்துபாரெழுத்து பாவெழுத்துவானதும்
தேனெழுத்துக்கூடெழுத்து கூர்நமசிவாயமே. சுஅரு

கல்லுவெள்ளிசெம்பிரும்பு காச்சிடுந்துராக்களில்
வல்லதேவரூபபேத மங்கமைத்துபோற்றிடில்
தொல்லையற்றிடப்பெறுஞ் சுகந்தருமோசொல்வாய்
இல்லையில்லையில்லையில்லை யீசனாணையில்லையே. ௬௮௬

காடுமேடுகுன்றுபள்ளங் கானாறுகற்றியும்
நாடுதேசம்விட்டலைவர் நாதன்பாதங்காண்பரோ
கூடுவிட்டகன்றுன்னாவி கூத்தனார்க்கேனேக்கலால்
வீடுபெற்றரன்பதத்தில் வீற்றிருப்பரில்லையே. ௬௮௭

தங்கள்தேகநோய்பெரில தனிப்பிடாரிக்கோயிலிற்
பொங்கல்வைத்துவாடுகோழிப் பூசைபலியிட்டிட
நங்கச்சொல்நலிமிகுத்து நாளுந்தேஞ்சிமூஞ்சூராய்
உங்கள்குலதெய்வமுங்க ளுருகுலைப்பதுண்மையே. ௬௮௮

நேசமுற்றுப்பூசைசெய்து நீறுபூசிச்சந்தனம்
வாசமோடணிந்துநெற்றி மைதிலர்தமிட்டுமே
மோசம்பொய்புனைசுருட்டு முற்றிலுஞ்செய்மூடர்காள்
வேசரிகள்ம்புரண்ட வெண்ணீராருமேனியே. ௬௮௯

கட்டையாற்செய்தேவருங் கல்லினாற்செய்தேவரும்
மட்டையாற்செய்தேவரும் மஞ்சளாற்செய்தேவரும்
சட்டையாற்செய்தேவருஞ் சாணியாற்செய்தேவரும்
வெட்டவெளியதன்றிமற்ற வேறுதெய்வமில்லையே. ௬௯0

பேரிழவுகருமஞ்செய்த பிண்டசாதஉண்டையை
காருமுன்வுரவுண்ணாது காகத்திட்டருந்திடச்
சேரமோட்சவிட்டரிகில் செல்வரோகதிபெறப்
பாரினில்மடிந்தோர்நாளும் பாழ்நரகிலெய்வரே. ௬௯௧

எத்திசையெங்கெங்குமோடி யெண்ணிலாநதிகளிற்
சுத்தியுந்தலைமுழுகச் சுத்தஞானியாவரோ
பத்தியோடரன்பதம் பணிந்திடாதபாவிகாள்
முத்தியின்றிபாழ்நரகில் மூழ்கிநொந்தலைவரே. ௬௯௨

ஆசைகொண்டனுதினமு மன்னியர்பொருளினை
மோசஞ்செய்தபகரிக்க முற்றிலுமலைபவர்
பூசையொடுநேமமிட்டை பூரிக்கச்செய்பாதகாள்
காசினியிலெழுநரகைக் காத்திருப்பதுண்மையே. ௬௯௩

காயகாயமுண்பதாகக் கண்டவர்மதித்திட
மாயவித்தைசெய்தெங்கு மடிப்புமோசஞ்செய்பவர்
நேயமாய்க்கஞ்சாவடித்து நேரமினைத்தின்பதால்
நாயதாகக்கிழக்கி நாட்டினிலலையரே, ௬௯௪

நீரினிற்குமிழியொத்த நிலையிலாதகாயமென்று
ஊரினிற்பறையடித்து தாரியாய்த்திரியவர்
சீரினிலுனக்குஞான சித்திசெய்வேன்பாரென
நேரினிற்பிறர்பொருளை நீளவுகைப்பற்றுவார். ௬௯௫

செம்மைசேர்மரத்திலே சிலைதலைகள்செய்கிறீர்
கொம்மையற்றகிளையில்லாத குரடுசெய்தழிகருகிறீர்
நம்முளேவிளங்குவோனை ஞடிஞேக்கவல்லிரேல்
இம்மளமும்மளமு மெம்மளமுமல்லவே. ௬௯௬

யோகஜாடைகாட்டுவார் உயரவும்யெழும்புவார்
வேகமாகவட்டசித்து வித்தைசற்றெட்டுவார்
மோகங்கொண்டுமாதரின் மூத்திரப்பைசிக்கியே
பேயதுபிடித்தவன்போற் பேருலகிற்சாவமே. ௬௯௭

வாதஞ்செய்வேன்வெள்ளியும்பொன் மாத்துயர்ந்ததங்கமும்
போதவேகுருமுடிக்கப் பொன்பணங்கள்தாவென
சாதனைசெய்தெத்திசொத்து தந்தைதக்கவர்ந்துமே
காததூரமோடிசெல்வர் காண்பதுமருமையே. ௬௯௮

காவியுஞ்சடைமுடி கமண்டலங்களாசனம்
தாவிருத்திராட்சம்யோக தண்டுகொண்டமாடுகள்
தேவியையலையவிட்டுத் தேசமெங்குஞ்சுற்றியே
பாவியெனவீடெலாம் பருக்கைகேட்டலைவரே. ௬௯௯

முத்திசேரசித்தியிங்கு முன்னளிப்பேன்பாரெனச்
சத்தியங்கள்சொல்லியெங்குஞ் சாமிவேடம்பூண்டவர்
நித்தியம்வயர்வளர்க்க நீதிஞானம்பேசியே
பத்தியாய்ப்பணம்பறித்துப் பாழ்நரகில்வீழ்வரே. ௭00

பாதக்குறடிட்டுக்காலிற் பாரச்சடைசுற்றியும்
போதனுஷியர்பக்கம் போக்குவருத்தாகவும்
நீதமாய்மௌனச்செய்கை நேரிற்காட்டிச்சாடைசெய்
சூதுபுரிசாமிகளாய்த் தொல்லுலகுழல்வரோ. ௭0௧

எட்டெழுத்துரெண்டெழுத்து யேகமோரெழுத்துடன்
தொட்டெழுத்துவிட்டெழுத்து தோணுயிரெழுத்ததில்
கட்டெழுத்துகாலெழுத்துக் காட்சியெழுத்தானதும்
ஓட்டெழுத்துவோரெழுத்து வூமையெழுத்தானதே. ௭௦௨

ஆதியாயரிக்குமுன்ன மங்கெழுந்தவட்சரம்
சோதியாயரிக்குமுன்னஞ் சொல்லுகின்றவட்சரம்
வாதியாயரிக்குமுன்ன நிற்குமந்தவட்சரம்
நீதியாயரிக்குமுன்ன நின்றதஞ்செழுத்ததே. ௭௦௩

ஊமையெழுத்தானதே வுடலதாயமைந்தது
ஓமெழுத்துவானதே வுயிரதாயுதித்தது
ஆமெழுத்துவானதே வகிலமாய்ச்சனித்தது
தாமெழுத்துமூன்றிலுஞ் சராசரங்களானதே. ௭௦௪

இச்சகஞ்சனித்ததுவு மீசனைந்தெழுத்திலே
மெச்சவுஞ்சராசரங்கள் மேவுமைந்தெழுத்திலே
உச்சிதப்பலவுயிர்க ளோங்கலஞ்செழுத்திலே
நிச்சயமெஞ்ஞானபோத நிறகுமைந்தெழுத்திலே. ௭௦௫

சாத்திரங்கள்பார்த்துபார்த்து தான்குருடாவதால்
நேத்திரங்கெடவெய்யோனை நேர்துதிசெய்மூடர்ககாள்
பாத்திரமறிந்துமோன பக்திசெய்வல்லிரேல்
சூத்திரப்படியாவருஞ் சித்தராவரங்கனே. ௭௦௬

காணுதுகிட்டாதுகைக் கெட்டாதுகண்டிட்டாலது
தோணுதுதுடர்ந்திடாது தொட்டிடவெட்டாதது
ஈணிடாதிசைந்திடாது விங்குமங்குமல்லது
நாணுதுநத்தாதுசொக்கி நாடெங்கெங்குமுள்ளதே. ௭௦௭

ஆயனைந்தெழுத்திலே யானுமைந்தெழுத்திலே
மாயனைந்தெழுத்திலே மரலியைந்தெழுத்திலே
காயமைந்தெழுத்திலே காட்சியைந்தெழுத்திலே
வாயுமைந்தெழுத்திலே வையமைந்தெழுத்துளே. ௭௦௮

அஞ்செழுத்துவெட்டெழுத்து வன்பத்தோரெழுத்தது
நெஞ்செழுத்துநெட்டெழுத்து நீடூழிதழைத்தது
துஞ்செழுத்துச்சுட்டெழுத்துச் சூட்சமாதிசூட்சமம்
மிஞ்செழுத்துமெய்யெழுத்து மேலெழுத்துமொன்றிலே. ௭௦௯

ஏய்க்குமைந்தெழுத்தினையு மெண்ணியேபிடித்திடார்
வாய்க்குவந்தமட்டுளறி ஜாதிபேதமோதுவோர்
நோய்க்குளேமடிந்துநாளு நுட்பொருளைகாண்கிலார்
பாய்க்குளேபடுத்துவாதைப் பட்டுழன்றுமாய்வரே. எகo

சிதம்பரத்தின்சக்கர சித்தரிந்திலாதபேர்
நிதம்பரமசிவனையும் னிந்தனைசெய்பாதகர்
சதம்பரமக்கியானியாகச் சாத்திரநூலாய்குவர்
அதம்பரவவுலகினி லங்கிங்குமலைவரே. எகக

மனவுருதிதானிலாத மட்டிப்பிணமர்டுகள்
சினமுறப்பிறர்பொருளைச் சேகரித்துவைத்ததை
தினந்தினமூரெங்குஞ்சுற்றி திண்டிக்கேயலைபவர்
இனமதிற்பலர்கள்வையு மின்பமற்றபாவியே. எகஉ

உப்புப்பாண்டமோடடாவிங் கோடிடுமுயிரடா
கப்படிக்குஊனடாமுற் காலனுக்கிறையடா
ஒப்படிசெய்நெல்லடா வுமிப்பதர்கரிக்கடா
எப்படிக்கிருக்கினுமிறப்பதுண்மையுண்மையே. எகங

உச்சிநேருண்ணாவின்மே லோர்விளக்கெறியுதாம
இச்சையற்றஞானிகட்கு மெங்கினுந்தெரியுதாம்
அச்சுமட்டவாசிகுதிரைக் கங்குபடியும்வைத்திடில்
உச்சியிலெறியுஞ்சோதி யுள்ளொளியைக்காணுமே. எகச

எங்குமாறுவீட்டிலெண்ணை யில்லாத்தீபமேற்றியும்
மங்கிடாதெரியுதுபார் மாணிக்கவொளியதாய்
பொங்கமாய்மணிவிளக்கைப் பூரிக்கத்தரிசித்தோர்
சங்கையற்றுத்தன்னைத்தா னறிந்தவர்களாவரே. எகரு

சங்குவொன்றுதாரைரெண்டு சதங்கையின்சிலம்பொலி
எங்கினுமுழங்கவோசை யிட்டுநன்னடம்புரி
சங்கரன்சடாதரனற் சாம்பவிமனோகரன்
திங்களைச்சடையணிந்தோன் சீர்பதமுங்காண்பரோ. எகசு

வாசிக்குதிரைமீதிலேறி மண்டலங்கள்தாண்டியும்
நாசிவழியிலேரியோக நாட்டமுமறிகிலார்
பூசிக்கவமுதமுண்டு பொன்மயமதாகினோர்
வீசிம்பாசக்கையுளோனை வென்றுவிண்ணையாள்வரே. எகஎ

மூலமாறுவீட்டினில் முளைத்தெழுந்தமுச்சுடர்
காலிரண்டுமாறிமாறிக் ககனமீதெழும்பியும்
தூலவீடுயெட்டடியிற் சொக்கித்தூங்கவல்லவர்
சீலமேவுஞானியாகிச் சிற்பரனைக்காண்பரே. ௭௧௮

நந்தவனமாறுமனை நாலைந்துபேர்காவலர்
சொந்தவீடுகாதமெட்டிற் சுற்றிவரவல்லவர்
சிந்தையற்றுத்தில்லைவெளியி னிர்த்தனத்தைக்கண்டிட
சந்ததம்பிறப்பிறப்புத் தானகன்றுவாழ்வரே. ௭௧௯

வீடுமேலுமாறடுக்கு விண்ணளாவக்கட்டியும்
கூடுதொண்ணூற்றாறுபேரைக் கூட்டியுறவாடியும்
தேடும்பொருள்வஸ்துவொன்றாய் சிந்தையிலமைத்தவர்
நாடுதேசங்காடுவிட்டு நற்பதவிசேர்வரே. ௭௨0

வெற்றியாறடுக்குமேலும் விண்ணடுக்குமானது
சுற்றியெங்கும்வேவுகார் தொடர்ந்துலாவுநற்றலம்
முற்றிலுமாக்கினைகொண்டு மோகமற்றுவாழ்பவர்
நெற்றியிறசதாசிவன்மனோன் மணியுநிற்பதே. ௭௨௧

வழுத்துமாறடுக்குமேலும் வாய்வடுக்குமானது
பழுத்திடும்பழமதுவாய்ப் பண்புளதுநற்றலம்
சுத்தியில்விசுத்திகொண்டு சுத்தமாயங்குள்ளவர்
கழுத்தினில்மயேஸ்வரன் மயேஸ்வரியைக்காண்பரே. ௭௨௨

பாரிலாறடுக்குமேலும் பந்தடுக்குமானது
நேரினிலமைந்தநித்தியா னந்தமானநற்றலம்
சீரினீலனுகதத்திற் சேரவுமங்குள்ளவர்
பாரினில்ருத்திரன்ருத்திரி வாழ்ந்திடவுங்காண்பரே. ௭௨௩

சந்தியாறடுக்குமேலு சம்பரமானகட்டடம்
பந்தியாய்ப்பதிதர்கூடி பக்திசெயுநற்றலம்
முந்தியும்மணிபூரக மோதவுமங்குள்ளவர்
உந்தியில்விஷ்ணுலட்சுமி யோங்கிடவுங்காண்பரே ௭௨௪

ஞாலத்தினிலாறடுக்கு மேல்நளினகட்டடம்
கோலத்துடன்மாதவர்கள் கூடியுள்ளநற்றலம்
பாலத்திற்சுவாதிஷ்டான பதியிலங்குள்ளவர்
மூலத்திற்பங்கயன்வாணி முன்னிருக்கக்காண்பரே. ௭௨௫

வையத்தினிலாறடுக்கு மேலடுக்குமானது
உய்யவேமுனிவரங் குலாவியுள்ளநற்றலம்
பையவுமூலாதாரத்திற் பார்க்கவுமங்குள்ளவர்
குய்யங்கணேங்கரன்வல்ல பையைக்கூடக்காண்பரே. ௭௨௬

கோட்டையொன்பான் வாசலிற்கூடியுள்ளோரைந்துபேர்
நோட்டக்காரராறுபேர்களுக்கர்தொண்ணூற்றாறுபேர்
மேட்டைச்சுற்றிக்கொல்லையெங்கும் வேணவித்துதூவியும்
வாட்டமாய்ப்பயிர்விளைத்து வாழ்ந்துகொண்டிருப்பர்காண். ௭௨௭

இவ்விதத்திலூனெடுத்திருப்பதையறிந்திடார்
செவ்வையாயோசிக்கிலுண் டிறங்குதற்பெரிதென
ஔவியம்பொய்வஞ்சனைசூ தானதையியற்றியும்
கௌவுநாயைப்போலுழன்று காசினிற்றிரிவரே. ௭௨௮

கட்டவேண்டுங்காளையைக் கடக்கவேண்டுமாசையை
ஓட்டவேண்டும்பூசையை யொடுக்கவேண்டும்வாசியை
யெட்டவேண்டும்புத்தியை யிருத்தவேண்டுங்காயத்தை
கிட்டவேண்டும்ஞானத்தைக் கிடைக்கவேண்டுமுத்தியே. ௭௨௯

ஏற்றவும்வாசியினே யிறக்கவும்வாசியினே
மாற்றவும்வாசியினே மடக்கவும்வாசியினே
நீற்றவும்வாசியினே நிறுத்தவும்வாசியானே
நாற்றிசைவாசியினே நடக்கவிடும்வாசியே. ௭௩0

பூத்ததுவரும்பிலே புகுந்ததுமலரிலே
மூத்ததுமலரிலே முத்தியதும்பிஞ்சிலே
ஏத்ததுவும்பிஞ்சிலே யிறுகியதுங்காயிலே
காத்ததுவுங்காயதிலே கண்டதுகனியதே. ௭௩௧

அஞ்சதிலேரெண்டது வறிந்ததில்லையெங்கினும்
பிஞ்சதிலேபூவது பொருந்துதிலேகாணவும்
நெஞ்சதிலேநின்றது நிலைத்ததிலேசொல்லவும்
கொஞ்சத்தினில்மிஞ்சமெத்த கொண்டியற்படுவேலுமோ ௭௩௨

கையிலாதகுட்டையனுங் கட்டியேயடித்ததும்
காலிலாதநெட்டையனுங் கையின்மேலுதைத்ததும்
இப்பிலாமதுமூடல வேரியங்குவுண்டதும்
[illegible]மீதரிந்துகொண்டு வானமேறிவாழுமே. ௭௩௩

வேலூரென்றகோட்டையுள் விளக்கிராப்பகலெறிந்
தாலூமுள்ளோர்காண்பதில்லை கண்படைத்தகுருடர்காள்
காலதூரில்நாறுகாதம் காடுசுற்றுமட்டங்கண்
ணுலூரீணுஞ்சென்றுவோட்ட நாட்டங்கொள்வாரில்லையே. ௭௱௪

கண்டமேல்முக்கோணக்கோட்டை கட்டியகொடிமரம்
அண்டையுளமர்ந்தர்யோக பாணியாகநின்றுமே
சண்டைசெயதுராணுவத்தைத் தான்கெலிப்பராயிடின்
எண்டிசையின்வல்லராவ யெவருமஞ்சிடுவரே. ௭௱௫

பாசமாம்வலைக்குளே பகட்டுமசொந்தவீட்டினை
நாசமாக்கித்தீயெரிந்து நாளுமேயழிகுமுன்
வாசமுறவேசுழி முனையையோட்டவல்லவர்
ஈசனார்நிலைமருவி யின்பமாயிருப்பரே. ௭௱௬

அன்னமொன்றிருந்துலாவு மழகுமண்டபத்தினில்
முன்னமொருவாண்புலி வுருமபியுமெதிர்த்திட
தன்னிடத்திலஞ்சுகிளிகள தாண்டியதைச்சுற்றயில்
வென்னில்மூன்றுயாளிகள் விழுங்கவும்பார்க்கின்றமே. ௭௱௭

தோப்பிலோங்குமாங்குயில்கள் கூப்பிடுமவ்வேளையில்
மாப்பிளைமார்வந்தங்ஙனே சாப்பிடவழைத்திட
ஒபபமிட்டுவைந்தாராந்தை யெட்டியெட்டிப்பார்க்கவும்
ஆப்படித்தடக்கவல்லோ ராண்பிள்ளைகளாவரே. ௭௱௮

மீன்கள்யாவுநீரினில் மேய்ந்திருக்குமவேளையில்
ஊனருந்தும்நாரைவந்து வொவ்வொன்றுய்ப்பிடித்துண்ண
வான்முகில்பொழியவேடு வன்வலையைவீசியும்
தான்மிகப்பிடிக்கவல்லோன் தாரணிப்பிறசித்தனே. ௭௱௯

நாகமொன்றுகொம்பிலேறி நாலுபக்கமபார்க்கையில்
வேகமாகச்சேவலொன்று வெம்பிகொக்கரித்திட
போகவெகுதூரமில்லை பொட்டெனப்பிடிக்கவும்
சோகமற்றுருக்ஷங்கண்டோசுத்தஞானியாவரே. ௭௱௰

மேலைப்பட்டியோர்குளத்தில் மேவுமக்கரூரினில்
நாலுபக்கஞ்சேருமெத்த நாட்டிலிடைக்காட்டினில்
பாலதாகச்சுத்தஞ்செய்யும பண்புளாரைக்கொண்டுமே
மேலையூரைக்கண்டுலாவி மேவியங்கிருந்திடே ௭௱௧௧

பாழதானபாழ்கிணற்றுட் பார்க்கரெண்டுகெண்டைகள்
தாழ்வுராதிருக்கவஞ்சார் காகமங்குதாக்கிட
சூழவோர்கழுகுனோக்கி சுற்றிவந்துகொல்லவும்
வீழ்ந்திடாததற்குத்தப்பி மீண்டுகொண்டதாருகாண். ௭௪௨

ஆற்றினில்முதலையங் தனேகநாளிருக்கையில்
வேற்றிடங்கரடிரெண்டு வெம்பியேமுரண்டிட
கூற்றுவனுமூவருடன் குரூரபாசம்வீசியே
மாற்றிடப்பிடிப்பன்காலை வாங்கியுமடக்கிடே. ௭௪௩

முட்டையிட்டொருபறவை முன்னவயங்கார்க்கையில்
செட்டைவிரித்தோர்பறவை சென்றிடவுங்காட்டினில்
மொட்டைவைகன்னியில்ரெண்டு வேடுமான்கள்சிக்கியுங்
கட்டுண்டுதவிர்க்குதுபார் காணவல்லோர்நாணலே. ௭௪௪

காலிரண்டிற்கோபுரமுங் கட்டியொன்றிருப்பதில்
மேலிருந்திழியமூர்த்த மேயருந்திநாளுமே
கோலிரண்டிலூதிலூதிக் கும்பித்துத்தம்பிக்கவும்
மாலிருந்துசெய்யவல்ல மாந்தர்களுமில்லையே. ௭௪௫

அன்னமும்பெரிதலா லதிற்றண்ணீர்பெரிதல்ல
சொன்னமும்பெரிதலா சுவையெவைபெரிதல்ல
கன்னலும்பெரிதலாற் கரும்பதுபெரிதல்ல
மன்னவன்பெரிதலால் மற்றவர்பெரியரல்லவே. ௭௪௬

மண்ணதுவிலாமலெங்கும் விண்ணுமில்லைகொஞ்சமும்
வாசமேயிலாமலெங்கு மலர்களில்லைசொல்லவும்
பெண்ணதுவிலாமலெங்கு மாணுமில்லைகாணவும்
பேரொளிக்குநேரிருள் பிரப்பதில்லையில்லையே. ௭௪௭

நாட்டமானஜோதிகாண நானிலத்துள்ளவர்கள்
பூட்டகமறிந்திடார்கள் பொய்க்குருவைத்தேடியே
வீட்டகமிருந்துபொல்லா வீண்கதைகள்பேசியுந்
தீட்டகத்தில்மூழ்கியே தெளிந்திடாதிருப்பரே. ௭௪௮

பெண்ணுமாணுங்கூடியே பெரியவரங்காணது
எண்ணுநாதவிந்தமூ மிருந்துகர்ப்பமானதால்
மண்ணுவிண்ணிலாவிடின் மற்றவைஜனிக்குமோ
தண்ணீருமக்கினிபோலச் சங்கற்பவிகற்பமே. ௭௪௯

ஒன்றுதித்ததென்பதும்பொய் இன்றுநாளையென்பதும்பொய்
நன்றினைக்கருதலும்பொய் யுண்மையைவிரும்பலும்பொய்
நன்றதைச்செய்வதும்பொய் நற்கருத்துள்ளதும்பொய்
என்றைக்கிருட்டும்பபொய் யிறப்பதுமெய்யெண்ணிடே. ௭௫௰

வீணைசைகொண்டெங்குஞ்சுற்றி வேசரிபோலோடியும்
தோணுதவைகளைப்பேசித் துட்டருக்குந்துஷ்டர்கள்
மாணுக்கர்பலரைக்கூட்டிமாதபசியாகியும்
காணுதகாட்சியைக்காணக் கத்திருப்பர்யென்பரே. ௭௫௧

பெண்டாட்டியாவதும்பொய் பிள்ளைகளாவதும்பொய்
கொண்டாட்டமாய்தாய்தந்தை குலஸ்வாமியாவும்பொய்
செண்டாட்டமாகசில சீடர்களைக்கூட்டியும்
திண்டாட்டப்படுவரெங்குந் தேடியோடிநாடியே. ௭௫௨

நாயைப்போலும்பெண்டைப்போலுந் தன்முலையைத்தந்தவள்
மாயையாகவந்தவளே மாங்கலியம்பூண்டவள்
பேயைப்போலும்பூதம்போலும் பேதிக்கப்பிடித்தவள்
நாயைப்போலுமநரியைப்போலும் நாடெங்குந்திரிவளே. ௭௫௩

பாக்கியங்கள்வந்தென்ன பராக்கிரமம்வந்தென்ன
யோக்கியங்கள்வந்தென்ன யுயர்பொருள்கள்வந்தென்ன
வாக்கியங்கள்வந்தென்ன வைராக்கியங்கள்வந்தென்ன
போக்கியங்கள்வந்தென்ன பொல்லார்கட்கெந்நாளுமே. ௭௫௪

திருத்தலந்திருப்பணி திருவிழாவுஞ்செய்திட
ஒருத்தர்நற்கதிபெறவு முள்ளதோசொல்லெங்கிலும்
வருத்தமின்றியேழைகட்கு மாதுவர்பரங்கட்கும்
பெருத்தவன்னதானஞ்செய்யப் பேருலகடைவரே. ௭௫௫

மெத்தைவீட்டினிற்படுத்து மெல்லியருடன்கூடி
அத்தையம்மான்கண்டெவரு மானந்தமிகக்கொள
சத்தையற்றிடவலார் சைதன்னியத்திற்சேர்வரோ
வத்தையீதெனவறியா மானிடரென்னாளுமே. ௭௫௬

ஏழைபஞ்சையானபேரி ஏர்ப்பவர்துயர்தெரிந்து
கூழையாகிலுமவர்கொலை குளிரவீய்பவர்
வாழையடிவாழையாக வாழ்ந்திடவெந்நாளுமே
தாழையைப்போலத்தழைத்துச் சர்தகமிருப்பரே. ௭௫௭

பஞ்சையும்பனாதிக ளாதியோரைவைதுமே
அஞ்சிடாதடித்தவ ரனியாயமுஞ்செய்திட
வஞ்சகவினைகள்சூழ்ந்து வாழுநாளுமவிணதாய்
நஞ்செனநமன்கையினி னசமாவரங்கனே. ௭௫௮

கண்ணினாற்கண்டிட்டதும் காதிற்கேட்டசொற்களும்
பண்ணபுண்ணியங்களும்பொய் பாவனசுகமும்பொய்
எண்ணரும்பலதவம்பொய் ஈசன்பாதஞ்சேர்தலும்
மண்ணுவிண்ணும்பொய் கொடியமரலியூருமெய்யதே. ௭௫௯

வேதியர்தபோதனரை மெய்ச்சிவனடியரைச்
சாதியாதிகற்றுநிற்குரு சாஸ்திரிப்புலவரை
நீதியோதுமாதவரை நிட்டூரப்படுத்தியே
சூதுசெய்துவாதுசெய்யுஞ் சோபரென்றும்மாள்வரே. ௭௬0

வம்புகள்வழக்குகள் செய்வாயிடும்பர்வஞ்சகர்
கும்புகூடிவார்த்தையாடி குடிகெடுக்குமபாதகர்
பம்புகள்வைப்புகள் பில்லிபார்வைசெய்யுமசூனியர்
வம்பொணாதிநம்பொணாது நாட்டிலெங்குங்காணவே. ௭௬௧

பொய்கொலைகட்காமமுடன் போதகுருவித்தைகள்
மெய்ப்படவுஞ்செய்துதிரி வீணர்களென்னாளுமே
உய்துமன்னவத்திரங்க ளொன்றுமின்றிபதரதாய்
நைந்துமிக்கநாசமாகி நாட்டினிலலைவரே. ௭௬௨

வாணர்கள்வைதியர்கள் மாதவர்கள்வேசையர்
வீணர்கள்சுயம்பாகி நாவிதன்வேந்தர்சேவகர்
பாணர்கள்சூனியர்கள்மா பாதகர்கொலைஞரை
காணவும்பகைத்திடாது நல்லுறவாய்நில்லுமே. ௭௬௩

தன்னதுவிட்டிறபெண்டிரைத் தானிறுத்திநாளுமே
அன்னியரிடமுஞ்சென்று லங்கனேகுடியதாய்
முன்னிருக்குமூடர்பெண்டீர்முற்றுங்கற்புடையரோ
என்னசொல்வீரிவ்வகைக் கியம்பொணாதியம்புமே. ௭௬௪

சாதிபேதஞ்சொல்லுகின்ற சண்டாளர்கள்சந்ததம்
நீதிலாதன்னியரிடஞ் சுவையருந்துமாரதாய்
நீதுறுமிழிகுலத்திற் றிண்டிகேயுமுன்றுமா
நீதிமெத்தசொல்வார்காண் ணீநிலகுருக்களே ௭௬௫

பாலுநற்பமுழுஞ்சீனி பசியிலாதுவுண்பவர்
நாலுவகைபேசவல்ல நாணயங்களுள்ளவர்
மேலுங்கீழும்பார்த்துவொன்றை வெட்டிவெட்டிக்கெல்லுவர்
போலுமல்லகெட்டியல்ல பூட்டகமாய்ப்பேசவே. எசுசு

ஆரணங்கள்சாத்திரங்க ளாகமபுராணங்கள்
காரணங்கள்காவியங்கள் கலைக்கியானஞானங்கள்
பூரணங்கள்பூதபவு ஷியவர்த்தமானங்கள்
தோரணையாய்ச்சொல்லுவல்லோர் சுத்தராவரில்லையே. எசுஎ

எல்லாம்வல்லசித்தரென்றே யெங்கிஞுந்திரிபவர்
கல்லாதபேர்களுக்குக் காட்சிதரவேண்டியும்
செல்லாதவிடங்கள்சென்று திண்டிக்கேயலைவது
பொல்லாதகாலத்துக்கேற்ற போங்காலமீதாகுமே எசுஅ

முத்திமுத்தியென்றுசொல்லி முன்னேனைக்காணுயலே
கத்திகத்திக்கடைவிள காலினில்விழுபவா
பத்திபத்தியாய்த்துதித்துப் பாடியும்பரமனை
சுத்திசுத்திவந்துபணி சூதர்பதஞ்சேர்வரோ. எசுகூ

அரிதிலுமரிது மானிடப்பிறவியாவது
அரிதிலுமரிது கூன்குருடுசெவிடிலாதது
அரிதிலுமரிது வாணதிலறங்கள்செய்வது
அரிதிலுமரிது ஞானவீடடைவதொன்றுமே. எஎ0

மாடுமக்களகழனிகாணி மாளிகைகள்தேடியே
வீடுகட்டிமேடைகட்டி மெத்தைமேலுலாவியும்
நாடுவிட்டுதூரதேசம் லாபந்தேடவோடி வீண்
பாடுபட்டபுல்லர்கள் பதமடையக்கூடுமோ. எஎக

ஒன்றதாய்ப்பலவதாயங் குள்ளதாய்ப்புறமபதாய்
நன்றதாகிதீயதாகி நான்மறைக்கெட்டாததாய்
சென்றதாய்செனிப்பதாய் சிறப்பதாய்செழிப்பதாய்க்
கன்றதாய்தாயதாய் காப்பதும்சிவாயமே. எஎஉ

பிணமதாகிலுயிர்கொடுத்துப் பின்னையெழுப்புவேன்
மணமபெறவுருக்கித்தங்கம் வார்த்திடுவேன்பாரமாய்க்
கணமெனும்பூதப்பசாசினைக்கதறவோட்டுவேன்
குணமெனக்குண்டென்போர் முத்திகோடியங்கடைவரோ. [illegible]

## 27-நட்சத்திரங்கம் அதற்காணும் சுரரேகசாந்தியும்.

அசுவனிக்கு.

ஆவதோரசுவனியிலன்று தித்திடுஞ்சுரம்
போகும்பத்துநாளினிற் போகாவிடிலோர் சாந்திகேள்
ஈவதுநவதானியமிவன்றலையைச்சுற்றியே
கோவதற்குவைத்திடக் குணமதாங்கொடுஞ்சுரம். ௭௭௪

பரணிக்கு.

பரணியிற்சுரமுதிக்கப்பகருமைந்து நாளிலே
விரைவினில்விடாததாகி லெள்ளுஞ்சோறுஞ்சுற்றியே
நிரவியூரின்மேற்கினில் நிலைக்கநாலுசந்தியில்
பரவிவைத்திடவங்கேபரந்து போஞ்சுரமதே. ௭௭௫

கிருத்திகைக்கு.

கிருத்திகையிற்றோன்றுகாச்சல் கேளிருபத்தோர்தினம்
பொருத்தமாகிநின்றுபோம் போகாவிடிலாநெய்யுஞ்சோர்
திருத்தமாகச்சுற்றியுநீ சேருமக்கினிமூலையில்
விருத்தமாகவைத்திடவிலகுமச்சுரமுமே. ௭௭௬

ரோகணிக்குக்குணம்.

மந்தமாகும்வாய்பினற்றும் வாந்திசெய்திருமிடும்
சந்ததமலம்விடுஞ்சலமிறங்கும்போதினிற்
குந்திவாந்திசெய்யுந் தேகங்கொப்பளிக்குங்காய்ந்திடும்
தொந்தவாய்வும்பரியுமிக்கசுருண்டிடுஞ்சொரியுமே. ௭௭௭

பார்க்கமார்வயற்றினிற்குப் பாரைபாச்சுவாறுபோல்
சோக்கவும்பிடரிகண்ட மூந்திமிர்களேறிடும்
ஏர்க்கவும்பதினோராநாளேகிடு மேகாவிடின்
தீர்க்கமாகக்ஷீரசாதம் சுற்றிவையூர்நடுவிலே. ௭௰௮

மிருகசீருடத்துக்கு.

மிருகசீருடச்சுரம் விலகுமார்நாளொன்பதில்
வெருவவுநிற்காவிடின் வெள்ளைபுஷ்பமைந்துமே
சிரசிடத்தில்சுற்றி மாலின்க்ஷேத்திரமுன்வைக்கவும்
மருவாரக்கடசியில் சுரமும்நோயுமேடுமே. ௭௭௯

திருவாதிரைக்கு.

ஆதிரையினிற்சுரமுமைந்து நாளையில்விடும்
வாதித்துவிடாதேல்மரண மிருபத்தைந்தினிலாகும்
வேதித்துப்புதன்வியாழம் வெள்ளிகாரியின்பகல்
ஓதியும்பரமானன்றம்சுற்றி கோயில்முன்வையே. ௭௮0

புனர்பூசத்துக்கு.

புனர்பூசமுதித்தகாச்சல் போகுமேழுநாளல்லது
தனித்திருபத்தோருநாளிற் றன்விலகுமில்லையேல்
முனிந்துமேகாயமுஞ்சோறு முன்பெருமாட்கோயிலிற்
கனிந்துமேவைக்கச்சுரமுங் காணுதோடுங்காணுமே. ௭௮௧

பூசத்துக்கு

பூசத்திலுதித்திடும்புகல் சுரமபொல்லாங்கில்லை
நேசமாயுதித்தபோதே நின்றிடும்மிஜமிதே
பாசத்திலுதித்ததற்குப் பச்சாந்தியில்லையே
தேசத்திலுதித்தநோய்க்குச் சேதமில்லைதீருமே. ௭௮௨

ஆயிலியத்துக்கு.

ஆயிலியமன்றுதித்த வச்சுரமடுத்தநாள்
போயிடும்போகாவிடில் போகுமேழுவார்நாளினில்
தீயநாகப்புத்திற்பாலும் தீபதூபமிட்டிடில்
நோயதுவகன்றிடு நுணுக்கமானநுட்பமே. ௭௮௩

மகத்துக்கு.

மகத்தினிலுதித்தவெப்பு மாறுமீரார்நாளினில்
அகத்தியம்விடாவிடின் ஆறுபத்துநாள்செலும்
சுகம்பலிக்குமெள்ளுஞ்சோறும் சுற்றிசுடலைவைத்திடில்
சகத்தினிலமுஞ்சுரமுந் தாண்டியோடுஞ்சண்ணியே. ௭௮௪

பூரத்துக்கு.

பூரத்திலுதித்தகாச்சல் போகும்பத்தோர்நாளினிற்
பாரத்தில்விடாவிடில் பருப்புஞ்சோறுஞ்சுற்றியே
கூரதைப்பிடாரிவாழும் கோயில்முன்றுவைத்திடில்
சிரதாய்ச்சுரமுந்தீர்ந்து செவ்வையாயிருப்பரே. ௭௮௫

உத்திரத்துக்கு.

உத்திரத்துதித்தவெப்பு வொன்பதாந்தினத்திலே
அத்திரம்விடாவிடி லதறகுத்தேனுஞ்சோறுமே
குத்திரமாய்ச்சுத்திவிண்டு கோயில்முன்னம்வைத்திட
பத்திரமாகச்சுரம் பரந்துபோகும்பாரிலே. ௭௮௬

அத்தத்துக்கு.

அத்தத்திலுதித்தகாச்ச லகலுமேழுநாளினில்
முத்தத்தில்விடாததாகில் முறையாய்ப்பாலுஞ்சோறுமே
மொத்தத்திற்றலையைச்சுற்றி மூர்க்கதுர்க்கைக்கோயில்முன்
வைத்தமேசுரமுந்தீர்ந்து மாறியோடும்மையமே. ௭௮௭

### சித்திரைக்கு.

சித்திரைக்குறித்தசாச்சல் சேர்ந்தவெட்டுநாளினுள்
நித்திரைபோலேகுமே யேகாதிருக்கிலங்ஙனே
வத்திரஞ்சோறுங்கரியும் வைத்தவர்க்குசுற்றியே
சித்திரமிழைத்ததேவசன்னிதிமுன்வைத்திடே. ௭௮௮

### சுவாதிக்கு.

சுவாதியிலுதிசுரந்துலையும் பத்துநாளையில்
ஆவாவதிற்றீராவிடிலதற்குச் சோரிலைக்கரி
நிவாசியப்பத்தலையைச்சுற்றி நேர்நிணஞ்சேர்காட்டினிற்
றிவாகரனெதிரில்வைக்கச்சென்றிடுஞ் சுரமதே. ௭௮௯

### விசாகத்துக்கு.

விசாகநாளெடுத்த சுரமேயிருபத்தொன்றினிற்
நிசாசரமதாயிருக்கில்நேரிரைச்சிச்சோறுமே
திசாதிசையின்புன்னைமரத்தின்கீழேவைத்திட
நிசாநிசஞ்சுரமுந்தீர்ந்து நெட்டியோடுங்காணவே. ௭௯0

### அநுஷத்துக்கு.

அனுடநாள்சுரங்கண்டாற்றிலதிலொருபயமில்லை
மனதிற்சேற்றசாதியொன்றுவைப்பதுவுமங்கிலை
தனதுநாட்கெடுவதுவுஞ்சாற்று தற்குமொன்றிலை
இனமறிந்துஅவுழ்தமீயவேகிடுமெ வினாவிலே. ௭௯௧

### கேட்டைக்கு.

கேட்டைசுரமெட்டிரண்டி கெட்டியாகவிட்டிடும்
பிட்டுமங்கள்செய்திருக்கில் மிக்கபாலுஞ்சோறுமே
தேட்டையாகக்கேசஞ் சுற்றித்தேடித்துர்க்கைக்கோயில்முன்
போட்டையாகிலச்சுரம்புலம்பியோடு மங்கனே. ௭௯௨

### மூலத்துக்கு.

மூலத்திற்சுரம்வருனேடிடும் பதினொன்றிற்
சீலமாய்விடும்விடாதேல் செல்லுமெட்டுமாதத்திற்
கோலமாய்ப்பயறுஞ்சோறு கொண்டுவைசமாதியில்
ஞாலத்திற்சுரமகன்று நாடாதோடுமங்ஙனே. ௭௯௩

### பூராடத்துக்கு.

பூராடத்துதித்தசுரம் போதமெட்டாநாளினில்
மாராட்டமாய்விடாவிடில் மாயனார்தன்கோயில்முன்
சீராட்டமிடப்பாரிசத்தினின்றுசொர்ணதானமும்
பாராட்டத்தர்மமளிககப்பற்றறுஞ்சுரமதே. ௭௯௪

உத்திராடத்துக்கு.

உத்திராடந்தன்னிலேயுதித்தசுரமங்ஙனே
தத்திரெண்டுநாளினிற்றணிந்திடுமதில்லையேல்
பத்திகொண்டுசாந்திசெய்யும் பாவனங்களில்லைகாண்
சித்தியான ஆவுடதத்திற்றீருஞ்சுரஞ்சீரிலே ௭௯௫

திருவோணத்துக்கு.

ஓணத்திற்சுரமூந்தோன்றிலொன்று மேபயமிலை
ஆணவமொடுங்கிநின்றகன்றிடுஞ்சுரங்களும்
தோணவேறோர்சாந்தியது சூட்டுதற்கிலாமலே
நாணவேபகன்றது நடுக்கடலிற்புக்குமே. ௭௯௬

அவிடத்துக்கு.

அவிட்டநாளெடுத்தவெப்புவ கலும்பத்துநாளினிற்
றவிர்க்கவும்விடாவிடிற்றயிருஞ்சோறுஞ்சாற்றியே
குவியவுமறையோர்கைக்கொடுத்திடச்சுரமது
புவிகருளேவிலகியோடுமபொய்யலவீதுண்மையே. ௭௯௭

சதையத்துக்கு.

சதையத்திற்சுரமுதிக்கத்தான்விடும்ரெட்டினில்
விதையவும்விடாததாகில் மரணமுமோராண்டினில்
உதையத்திற்பஞ்சவர்ணச்சோறுச்சித்தலைசுற்றியும்
இதையத்தேற்றியந்தணர்க்கிடச்சுரமகலுமே. ௭௯௮

பூரட்டாதிக்கு.

பூரட்டாதியிற்சுரமும் போகுமாறுநாளினில்
ஈரட்டாய்விடாவிடி லிரண்டதாரில்விட்டிடும்
ஓரட்டாய்ப்பாற்சோர்சுற்றி யொற்றைக்கொம்பன்கோயில்முன்
மாராட்டமில்லாது வைக்கவந்தசுரமாறுமே. ௭௯௯

உத்திரட்டாதிக்கு.

உத்திரட்டாதியினிலுதித்த சுரமீரெட்டிற்
றத்திபோம்போகாவிடிற்றயிரும் சோறுஞ்சுற்றியே
வெற்றிசேரும் கோயில்முன்புவைத்தவர்திரும்புமுன்
மத்தியிற்சுரமதுவும் வாங்கிடுந்தீங்கில்லையே. ௮௦௦

ரேவதிக்கு.

ரேவதியுதித்தசுரநேரிலெட்டு நாளினிற்
போவதும்போகாவிடிற்புகழாய்ப்பாற்சோர்சுற்றியே
போவதூநற்சித்திர மெழுதுமண்டபத்தினில்
ஆவதுமேல்வைத்திடவகலுஞ்சுரமன்றளே. ௮௦௧

சாதிலிங்கத்தின்குளிகை சாற்றவுமெளிதினில்
ஆதியந்தமாயனுபானத்தினைப்புகலவும்
சோதிக்கப்பலமுறைதொடர்ந்துசெய்யவல்லவர்
நீதியாகவேகளிக்க நேருரைத்தபாகமே. ௲௦௨

சஞ்சிதம்லவங்கம்லிங்கர்தாளிசபத்திரியும்
கொஞ்சியேசமனதாகக்கொள்ளவித்தநீரிலே
மிஞ்சரெண்டுசாமமாட்டிமேவுங்குன்றிவீதமாய்
அஞ்சிடாதுருண்டைசெய்தமைத்ததையெடுத்துமே. ௲௦௩

ஆனவேளைவேர்பிடியதின்மேற்பட்டைதட்டியுங்
காணப்பசும்பாலரைத்துக்கண்டரைத்துப்பாலில்சேர்
ஊனமறவாரமோருருண்டையந்திசந்திக்குத்
தான்தரவறுத்தஉப்பு தாக்கவெள்ளைச்சாகுமே. ௲௦௪

பூனிலக்கடம்புபட்டைப் போட்டரைப்பலமதாய்
கானினிற்செருப்படைச்சார்கண்டரைத்துழக்கினில்
மேனிடவேழ்நாளுமேல்விசிறியேகுணமதாய்த்
தானிதில்வறுத்தவுப்பு தாக்கக்கிரையாகுமே. ௲௦௫

ஆகிடப்புளிப்புகையு மாகாப்புண்களாறிடும்
ஏகிடுநற்றேனினல்லதிரு பிச்சாற்றினிற்சுரம்
நேகத்திப்பிலிலவங்க நெல்லிவற்றல்சேற்பொரி
பாகஞ்சூரணம்மதுவிற் பாச்சவிக்கல்மாறுமே. ௲௦௬

வட்டத்துத்திச்சாற்றிட மண்டலமோர்குளிகையைக்
கெட்டதேகந்தூலமாகும் கிளராவாரஞ்சாற்றினிற்
பட்டிடமும்மண்டலம் பசும்பொனிறமாகிடும்
தட்டவேநற்சிரகத்திற் ரூபசுரந்தீருமே. ௲௦௭

தீரவும்பழரசத்தில் சேர்த்துகுண்டையுள்ளமத்
தேறிடக்கடிவாயில் தீட்டிடவிஷமறும்
ஏறவுந்தேட்கொட்டுக்கும் வாயிலிட்டிடவுமட்டிடும்
கோறவிஞ்சிசாற்றிற் சன்னிகுளிர்சுரம்பறக்குமே. ௲௦௮

கார்திரிபலைதிரிகடுகு சூரணத்தினில்
ஓருருண்டைகோமயத்தி லூட்கொளவிஷபாகம்
பேருஞ்சூலைகாமாலையும் பித்தபாண்டுரோகமும்
பாருந்தேகமூறலும் பறந்திடுமனைத்துமே. ௲௦௯

உன்னுமிழுநீரிலோ ருருண்டையுண்டச்சுனியம்
சண்ணுமபூதகரப்பான் பட்டைச்சாற்றிலண்டவாதமும்
பண்ணுமபுளியனிலைரசத்தில் பைத்தியசுரமறும்
எண்ணுமிஞ்சிச்சாறு தேனிலிடவுன்மத்தந்தீருமே. ௮௧௦

வெல்லத்தினிலோருருண்டை விழுங்கவேவியர்வைபோம்
நல்லவேளைச்சாற்றிலுண்ண நவிலுமதாபசுரமறும்
சல்லியமுத்தாமணியின் சாற்றில்மருந்திடருமே
மல்லுநொச்சிச்சாற்றில்தாக்க வாதசுரந்தீருமே. ௮௧௧

நெல்லித்தூள்மேதித்தயிரிலிடவயர்கடுப்பறும்
சொல்லவுங்கையான்ரசத்தில் கூட்டிருமலீளைபோம்
நல்லவேஷப்பாலிலே நவிலபிரமியங்கள்போம்
வல்லசாதிக்காய்ப்பொடியில் மாட்டக்கிராணிதீருமே. ௮௧௨

சாருவேளைச்சாற்றிலிடத் தவிரும்புறவாதமும்
நேரவெண்ணையிழைத்துதாக்க நீங்குங்கண்டமாலையும்
கோரமேனிச்சாற்றிலே குமுங்குமவிற்புருதியும
சோரசமதாகம்வசம் புத்தூளுஷ்ணவாய்வுபோம். ௮௧௩

எருவிலிச்சார்தன்னிலுண்ண நற்கரப்பான்கட்டியும்
பருகுஞ்சர்க்கரையில் பதினெட்டுநோய்கள்நஞ்சறும்
மருவும்பூச்சாற்றினில் மயக்கநஞ்சுசுழற்றலும்
உருகுநெய்யில்நேரிலேறு முட்கொளப்போமியாவுமே. ௮௧௪

தலைச்சன்பிள்ளைப்பாலிடக் கண்தன்னொளியின்பூவறும்
இலையரிசிகரியிலே முயலகன்றுபோகுமே
நிலைப்புளியம்பட்டைச்சாம்பல் நீர்தெளிவிருத்ததில்
பலிதமூவாருண்டையிற் பரங்கிப்புண்களாறுமே. ௮௧௫

வெற்றிலையின்சாற்றிழைத்து விழியிலிடக்காசம்போம்
உற்றசாராயலது காடியூட்டிடச்சனியறும
நற்கழுதைமூத்திரத் தரைக்கண்ணிலிட்டிட
அற்றிடும்பசாசுபே யதிற்பிரமராட்சசே. ௮௧௬

ஆப்பாலிலுரைத்தோருண்டை யாசனத்திற்கட்டிட
சாப்பாகவுடம்புகைகால் தன்செரிச்சல்மாறிடும்
காப்பாகத்தன்னெச்சலிற் கலந்தரைத்தைந்துண்டையை
தாப்பயுள்ளங்காலிற்பூசத் தானேங்காதஞ்செல்வனே. ௮௧௭

அண்டமுள்ளேபூர வீரமும்மயஞ்சாம்மபின்
கொண்டரைத்துச்சம்பளச் சார்கூட்டியேரவியிட
விண்டிடமெழுகதாகும் வெண்ணைநெய்தேனிற்கொள்
கண்டிடும்பாரிசவாய்வு கண்டமாலையேகுமே. ௮௧௮

கப்பலரிப்பட்டையோர் பலங்கொணர்ந்திடித்துமே
குப்பமேனிச்சார்மிதக்க ஊரவையிரண்டுநாள்
வெப்பிலாநிழலுலர்த்தி மீண்டுமிவ்வார்செய்தபின்
தப்பிலாதுசூரணித்து தன்னிடைக்குசீனியே. ௮௧௯

சீனிசேர்த்தோர்மண்டலஞ் சிறக்கவரைக்காற்பலம்
தானுண்ணவவரை முறிப்பானகரிபூண்டுடன்
மீனுடன்காராமணி மிளிர்சுரைக்கரியாகா
ஆனதிற்றிமிரும்குஷ்டமகலும் ரிணமியாவுமே. ௮௨௦

முன்பட்டையிருபல முதிர்வென்னிரிலையரைத்து
தன்னைசீலையிறபிழிந்திடுஞ் சலமுமோர்பலம்
அன்றருந்தவார்திரெண்டு பேதிநான்காவர்த்தியாம்
நின்றிடாததாகில்மோரும் சாதமுண்ணநிற்குமே. ௮௨௧

நிற்கவிச்சாபத்தியத்தினிங்கிடும் விரணங்கள்
வாககமுன்பட்டைகஸ்தூரி மஞ்சள்கருஞ்சீரகம்
சொற்கரிசலத்தரைத்ததிற கழற்சியுள்ளைகயில்
மிக்கதண்டுயோனிரிணம் விலகிடும்விரைவிலே. ௮௨௨

மண்ணிற்புநாகங்கொணர்ந்து வார்த்துமோரிலில்விட
வண்ணதுமணக்கிடுமதைப் பசும்பாலில்விட்
டெண்ணிடவெரித்து சிவப்பேறிடவெடுத்தெறிந்
துண்ணரைரூபாயிடையு மோரைந்துநாளிட்டிடே. ௮௨௩

நாளுஞ்செம்மண்பூமியுள்ளரசமாமாத்தடி
வாளும்பூமிநாகந்தன்னை வன்று செய்படைச்சொரி
மீளும்புண்புரைகிரந்திமிக்கவெடிசூலையும்
நீளுங்கையில்கால் ரிணங்கள்யாவும்போகுமுண்மையே. ௮௨௪

லிங்கம்ரெண்டுசெந்தூரமிரண்டு விரம்நாபியும்
பொங்குவாளமும்வகைக்குப்போட்டோர்விராகனிடை
தங்கவிஞ்சிநொச்சிலித்தணிக்கருநொச்சிலிச்சார்
அங்குமுச்சாறுமுச்சாமமுமரைத்துலர்த்திடே. ௮௨௫

உலர்த்தியேபொடித்துடண விடையாயுண்ணச்சூலையும்
விலர்த்தியாகுங்குன்மவாயுவும் விட்டிடுஞ்சுரமதும்
நிலைத்திடச்சுத்தியுஞ்செய்து நேரளிக்கும்போதினில்
பலத்தநோயகன்றிடும்பின்னிச்சாரத்தியத்திலே. ௮௨௬

கூட்டிலிங்கம்வீரம்பூரம்வெள்ளைவெயிலைச்சாற்றினிற்
றூட்டியாய்த்தனித்தனியேபூரச்சாறுஞ்சுருக்கிட
பூட்டிடநற்கட்டதாகும்பகலிநற்கடிலே
நாட்டிலுள்ளோர்கட்டுதற்குநல்லகட்டதாகுமே. ௮௨௭

மேனிபாலம்நாலதில் வெங்காயம்பயறெண்டுநாய்
தானரைத்தபின்விளக்கு எண்ணெயிற்கிளறியே
ஊனமறமேலகியஞ்செய்துண்ணப்பக்கசூலையும்
நானம்போமார் நோவுபித்தஞ்சோகைபலக்கட்டுமே. ௮௨௮

பூவரசன்பட்டைகாயம் பூடலம்வகைக்குமே
தூவியிருபதாய்கிழ லுலர்த்திச்சூரணித்ததில்
தாவஞ்சமன்வெள்ளைச்சாக்கரைசேர்த்தோர்மண்டலம்
ஈவதும்வெருகடித்துப்பாரிட்டுகொள்ளவேண்டுமே. ௮௨௯

வேணடுந்தலைநாபிலநீக்கிமோருழுகவும்
மீண்டுமிச்சாத்திய மிருக்கமேகவூரலும்
தாண்டிடுங்கிரந்தியுங்கடிப்புக்குட்டமானதும்
நீண்டிருந்தநோயெலா நிமைகருமேபரக்குமே ௮௩0

வெண்மிளகுடன்மிளகிலிங்கமக்கிராகாரமொன்
றண்ணாவுமொட்டுனுப்பாக்காய்புட்டிவெல்லமொன்
டொன்னாவுதேன்பல மொன்றரையும்லேகியஞ்செய்
துண்ணவிற்சிதளாந்தாகமுக்குத்திறனுமே. ௮௩௧

அரைப்பலம்பழயமிளகாய மணக்கெண்ணையில்
உரைக்கவும்விட்டு வறுத்ததூள்பனைவெல்லத்தினில்
விரைக்கவும்பாவாக்கி நெய்தேன்விட்டதைக்கிளரியும்
தரைக்குளேயோர்சுண்டையளவுண்சண்முறுமுஷ்ண வாயுவே. ( )

வீரம்பூரஞ்சூதங்கெந்தியும்லிங்கமோரிடை
தூரமிளகைந்திடைக்கு சூரணங்களஞ்சியால்
சேரக்கண்டுபுட்டி வெல்லந்தேனிற்கற்கண்டிவிட்டு
தீரவும்பத்தியமின்றி செல்லும்வேணநோய்களே. ௮௩௩

ஓரைக்கால்கெந்திகால் சூதமரைலிங்கமுக்கால்
கோரவெள்ளையொன்று கௌரிகூரொன்றேகால்வீரமும்
தாரமொன்றரையிடை தனித்தனியாய்ச்சேர்த்ததை
கோச்சுத்தித்து முலைப்பாலிலரையென்சாமமே. ௮௩௪

சாமமுமரைத்திடத்தளர் குழம்புமாகிடும்
நேமமாயனுபானத்தினெல் லிடையளித்திட
போமதிற்சீதளஞ்சன்னி போகாசுரம்வாய்வதும்
ஆமதில்மேகமுதலனந்த நோயகலுமே. ௮௩௫

மோரிலிட்டுலர்ந்தநாகமும்பலம்தொன்றுகால
நேரினில் முருங்கைவிரையும்பலமீரேழதாய்
பாரினிற்சாதிக்காய் நாற்பலங்குழித்தயிலமாய்
சேரிறக்கிக்கால்விரானிடை யிரைந்துநாளிலே. ௮௩௬

இட்டிடவும் வெற்றிலையினிற்றடவியுண்டிட
கெட்டிடவுந்தாது விர்த்தி நேரிடவுமுண்டு காண்
பட்டிடுமெங்நோய்களும் பரந்திடுமெளிதினில்
கிட்டிடும்பலாபலன் கிரீடியாவரங்கமே. ௮௩௭

வீரம்பலம் நாலரையுமேபசுமஞ்சட்கிழங்
கேரவும்பலமுமைந்திடித்தசாற்றரைத்துமே
கோரவுமகலிலிட்டுக்கொண்டு சீலை செய்ததை
பூரவும்பூமிமட்டம்புதைத்து மேல்மணலிடே. ௮௩௮

மணலுநால்விரற்கடைவதிற்கொட்டியுமூன்றொரு
தணலிடமுதற்புடந்தகித்ததையரைத்துமே
குணமுடன்சீலையுஞ்செய்து கூட்டிறுலெருவினில்
மணமுடன்மறுபுடத்தில் வாட்டியுமெடுத்திடே. ௮௩௯

எடுத்தபின்னெவ்வோரொருவுமேற்றிப்பதினோர்புடம்
விடுத்திடும்பின்முன்போற்றுமிமேலுமூன்றொருமுதல்
தொடுத்திடுமுன்போலரைத்துச் சுட்டும்புடம்பத்தது
அடுத்திருபத்தோர் புடமுமாகிலெள்ளளவுமே. ௮௪0

எள்ளளவுதேனினெய்யி லிட்டிடவும்வேளைக்கு
துள்ளும்வாய்வெண்பத்து நாலுஞ்சோறுசுரமெட்டெட்டும்
கள்ளநோயெலாமறும் காருமிச்சாபத்தியமாய்
உள்ளதுமூன்றைந்துநாளு முட்கொளுமேவைக்குமே. ௮௪௧

மேலுமப்பளாகாரம் விராகனிடையொன்றதை
நாலுபடிநற்சலத்தில் நாட்டித்தூள்சுழூரத்துமப்
பாலுந்தீபாக்கினியாகப் பார்த்தெரித்தொருப்படி
கோலவுட்பிராந்திவர்ணங் கூடப்புட்டியிட்டிடே. ௮௬௨

இட்டிடவிந்துட்டிடை யிதைக்குடிக்கவேழிநாள்
தொட்டிடவுமபித்தமாகிற் சூட்டும்பழச்சாற்றினில்
விட்டிடுமார்நோயதும் விலகுங்குன்மமெட்டதும்
அட்டியொன்றிலாமலே யகலுங்காதமங்கனே. ௮௬௩

பச்சையாம்பசும்மஞ்சட்கிழங்கின் சார்படியொன்றில்
மிசச்மாமணக்கெண்ணை யரைப்புட்டியுட்காசகிட
அச்சம்பொன்வருணமாம் அதையெடுத்துக்காசிடை
சொச்சமாய்க்குடிக்கவாய்வு தூறியுபரக்குமே. ௮௬௪

செங்கல்பெற்சிட்டக்கல்லைச் சிறுதுண்டதாய்நொறுக்கியே
பொஞ்கவுஞ்சிறுவர்நீரினிற்போட்டு ஊரப்பின்பொடித்து
மங்ககந்தகத்திராவகத்திலேயரைத்ததை
அங்குபில்லைசெய்துயொரு ஞம்பதில்புடமிடே. ௮௬௫

வெள்ளியையுருக்கி மூவிசைமொகடம்பூரசத்
துள்ளதைத்தோய்வெட்டையாகுஞ் சூட்டுங்கிஞ்சம்பொட்டிலுப்
புள்ளநிட்டுமுன்னரச மூட் டியரைத்துப்புடம்
மெள்ளப்போட்டிடவெளுப்பாம் வெணநோய்க்கிட்டிடவே. ௮௬௬

புந்துமன்றூடன் கருவூமத்தன்பத்திரியரைத்
துத்ததோர்குகைபண்ணியு மூற்றியிரசத்தினை
வைத்துவாயைமூடிச் சிலைமண்ணதுசெலுத்தியும்
ஓத்தைசட்டியினிலுப் பினுட்குகையிலேற்றிடே. ௮௬௭

ஏற்றியும்வாய்மூடிச்சிலையெய்து நாற்சாமவரைச
சாற்றிடும வேலன்விறகலதி லுப்பைவிறகில்
தூற்றியுமெரிக்கப்பதங்கித்திடுமேற்சட்டியில்
ஆற்றியங்குடைந்ததிலதைமந்ததையெடுத்திடே. ௮௬௮

எடுத்ததையோர்புடியிலினிலேற்றிவாய் கார்க்கிட்டுமே
தொடுத்திடவரிசிடையைச்சூட்டுந்தேனுநெய்யினில்
இடுத்திடவெள்ளைச்சுருக்கு மாறும்பிடையும்ரிணம்
விடுத்திடுமேகமூதலிருபத்தொன் றுமேகுமே. ௮௬௯

செம்பினிற்களிம்பலது செங்கால்பச்சையும்வெள்ளை
வெம்பிடவிமைத்துரிண மேற்றடவமாறிடும்
நம்பிடப்புடைரிணத்தில்நாட்டநீர்வாட்டிடும்
அம்புவியிலிவ்வெண்ணெயினற்புதங்காணேரீலே. அ௫௦

கெந்திசுத்தியும்விளக்கெண்ணெயினிலுருக்கியே
வெந்திடத்தணணீரிற்சாய்த்த தோர்விராகனுமிடை
தொந்தமாய்ச்சுன்னத்திற்றுரஞ் சுத்திசெய்ததுஞ்சமன்
சிந்திக்கவிரண்டுமிருதேங்காய்ப்பாலிற்சேர்த்திடே. அ௫க

சேர்த்தரைத்தப்பாலினிலிதைக்கலக்கிக்காச்சியும்
பார்த்தெரித்தவ் வெண்ணெயைப்பார்த்திருத்துள்வெண்டலை
ஆர்த்திடலேகியஞ்செய்ததைச்சுண்டையளவதாய்
கோர்த்திடவந்திசந்திகொடுக்கமூன்றுநாளுமே. அ௫உ

கொடுத்திடயெண்ணெயைச்சிரங்குத்திப்பூசியத்தினம்
விடுத்திலுப்பைபுண்ணாக்கை மேற்றேய்த்து மூழ்கநீரினில்
அடித்துமூணுட்காலேமோர் சோரன்றிராநெய்சோருண்ண
தொடுத்திடப்பத்தியமேகஞ்சூழ்கரப்பானேகுமே. அ௫ங

வெள்ளைப்பூலாப்பட்டையுந்தன்மேற்கொழுந்துசீரகம்
கொள்ளவாமணக்கெண்ணெயுங்கூட்டியங்கெரித்ததை
பிள்ளைகள்தங்கட்கிடவும் போகுமத்திவெட்டையும்
உள்ளநோயனைத்தும்போமுடம்புபுஷ்டியாகுமே. அ௫ச

பூண்டுமுத்திரியுடன்பொரிச்சல் மிளகின்வீதம்
மீண்டுமோமமங்காசிடையாய் விண்டரைத்துமுண்டிட
தூண்டுமிளகினீர்சாதஞ்சூட்டக்காப்பிரொட்டியும்
நீண்டுபேதிநிற்காதாகினெய்யதனிலேற்றிடே. அ௫௫

ஏற்றவுட்டணத்தின்பேரிலேங்கப்பேதியாகிடின்
மாற்றச்சுக்குவோமங்காயம வாழைப்பட்டைச்சாற்றரைத்
தூற்றரெண்டுருண்டைவைத்துரைத்திடவுமக்கணம
போற்றவுஞ்சலா முஞ்செய்து போகுமுஷ்ணபேதியே. அ௫சா

உண்ணப்பாலர்க்குப்பேதியுண்டாகில்மூலைப்பாலரைத்
தண்ணதைக்கொடுத்திடவகலும் பேதியானது
சென்னதுமந்தத்திற்பேதி செல்லமூலைப்பாலிட
வண்ணவோமமாத்திரையரைத்திட்டுப்புளித்தள்ளே. அ௫எ

கமடளியிலேயுந்துத்தமூவரைத்துப்பற்றது
நம்பிடமேற்போடவாறுநாளுங்கண்டமாலேயும
வெம்பிடக்கஞ்சாயிலேயு மீரவெங்காயத்தையும்
தெமபிடவதககிககட்டக்திரும பவுத்திரமே. ௮௬௮

ஆரினெய்யவுரிச்சார் சமன்மெழுகநாயெரித்
நாவிலேயசிய டச சாவயிநசமூயயோம்
மேவிநலெல்லாணேகபிககாய் வளனோவெங்காயஞ்சம
ஞெவெரித்தேநமூசா ர புகலில்நாட்டச்சிராய்வீழுமே ௮௬௯

பொட்டுலுப்புரேவை சினனி போட்டுமொருகோப்பையிற்
றுட்டதுவொன் றடட்பொம கதுச் சுட்டுருமைமோரினில்
விட்டணைக்குநைறச்துணடபின் வேண்டுமோகுடித்திட
வுடடிப் றிங்கே றியாரு மககணஞ்சுருணமே. ௮௭௦

கல்லெண்ணொச்சிபிராறு சாட டிமுழக்கதாய்
சலபிமிாகுப்பமங்கால் சாணரைந்நிட்டெண்ணேயிற்
சல்விககாசித் நா ங கரஞ்சீரகங்கபுஞ்சுநுள்
செல்லவிட்டுமூரி கலே சிரமேபாயிரசுழுருமே ௮௭௧

வாதுவாட பாநுபச்சரியமே பாமைசாட்சியும
சாதிபத்தி மகிர பட சாற்றுநாமுடியிவனைக்
கோதுமாயிராசனி மட மகோதுமைச்சமனிடை
தோதிாயிபிலை திச் சூரணிமெநான்றுக்குமே. ௮௭௨

ஆககியமாதநுக்குரசைலமக் கடலேவிநஞ்செய்
தேகமெருவேனோ வாயிபிட்டுமெமன்றுதீரினா
தாககிகொபடரித்தாநை விழுங்கவுவகால்மண்டலம்
தூக்கிற்பக்கியரில்லைகள் சுள்ளுசாராயதன்னுமே. ௮௭௩

காரக் காரருரு நம்லெங் சவசாரியஞ்சமண்டமூச
சாரரைத்தண்டோட டிவிட்டுந் தான்மேலோடுமூடியு
மாரசசிலேசெய்துவுள் மணலில்வைத்துமூடியே
எரவைநதெருப்புடமிடச செந்தூரமாருமே. ௮௭௪

சாதிலிங்கமோரபலந் தனிக்குமட்டிக்காயிறுள்
மோதவிட்டுசசிலித்து மூவைநெருப்புடமிடும்
போதிற்கட்டுமோட்டுப் பிரமதண்டுசாறுழக்
காதியாய் சகருக்கிட மெழுகதாமரைத்திடே. ௮௭௫

அரைத்திடோர்பணவிடைச் சீனிகற்கண்டிஸ்வெண்ணையில்
உரைத்திடத்திரிகடுகிற் றேனிலோர்விராகனிடை
விரைத்திடச்சுண்டைவீதத்தில் மேவும்வாய்வகன்றிடும
மூரைத்திடுநோய்க்கைந்தீரைந்து மூவைந்துநாள்மூட்டுமே. ௮௬௬

மூட்டிடச்சகலமேகமும் வாய்வுகிரந்தியும்
மாட்டிடச்சர்வசுரஞ்சூலைகள் குன்மம்வாய்வதும்
தீட்டிடவுண்ணுக்கைத்தின்னுந் தியநோய்திரட்சியும்
வாட்டிடுங்கைகால்பிடிப் பிடிமார்நோய்குடைச்சலே. ௮௬௭

குடைச்சலிற்கிச்சாபத்தியங் கூடாதுபுளிப்புகை
இடைச்சதுமுருங்கைப்பீர்க்கன் கேளவரைவண்டையும்
இடைச்சல்சிறுமுள்ளிக்கீரை கடுகுபூண்டிரைச்சியும்
அடைச்சிநீக்குமுறிவுவெண் மிளகுசிறுகீரையே. ௮௬௮

மிளகுகியாழம்வைத்துண்ணவு மோமந்தேய்த்துமூழ்கவும்
விளக்கெண்ணை நல்லெண்ணெயில் மூன்றுதலைமுழுகும்பின்
புளிக்கச்சீயக்காயரைப்புடன் மூவெண்ணையிலும
வளப்பமாய்க்கூட்டித்தலைக்கு வார்த்துப்பும்புளிசேரே. ௮௬௯

கரட்டுக்கெந்தியைப்பொடி தலையரைத்துள்வைத்ததை
விரட்டியைந்தினிற்புடமிடப் பஸ்மமாநெய்யிலில
திரட்டியுணமேகப்படை தினைதவளைச்சொரியூரல்
விரட்டிடவின்னும்பலது மேகும்வெகுதூரமே. ௮௭௦

சிந்திற்கொடியின்சூரணஞ் சேரவைந்துபலம்
ஏந்துமோமமுமதுர மேலங்கிராம்புகோட்டமும்
மீந்தசாதிக்காசாபத்திரி விடையங்கிராம்பதும
ஏந்துமாமுத்தக்காசு நன்னாரிவசுவாகியே. ௮௭௧

வாசிசந்தனஞ்சீரக மாவாரையிலுப்பைப்பூ
மாசறுகோரோசினை வகைக்கிருவிராகனிடை
வீசுசர்க்கரைப்பல மிரண்டுதேனுமோர்பலம்
நேசமாய்ச்சூரணமல்லது லேகியஞ்செய்திடே, ௮௭௨

இட்டிடச்சகலகழிச்சல் மேகம்பிரமியங்
கட்டிடுந்தலையிடிக்கை காலெரிவுபீநசம்
கெட்டிடாதுநீரிழிவு நீர்கடுப்புநீரடைப்
பொட்டிடாதுவுள்ளுருக்கி போகும்பலநோய்களே. ௮௭௩

தட்டிப்பூரம்வாழைப்பட்டைச் சாற்றரைத்தோட்டிட்டதை
ரொட்டிதிருப்பிஞற்போற்றிருப்பி யேழ்விசையரைத்
தெட்டியேழ்திரஞ் சுட்டுத்திரிகடுகுச்சூரணத்
தொட்டியேயரிசியடையுண்ணப் போம்வினைகளே. ௮௱௪

கெந்தகத்திராவகமிருபலம் வெண்கோப்பையில்
அந்தமாகவிட்டிலிங்கமையம் வைத்துச்சட்டியில்
குந்திடவுங்கோப்பைவைத்துக் கோப்பைவாஸச்சரிமணல்
சிந்திடாதுகொட்டிவைத்துத் தீயெரியடுப்பிலே. ௮௱௫

தீயதிற்றிராவகந்தீஞ்சிக்கொஞ்சமிருக்கையில்
ஆயதிலிங்கம்பூர்த்ததில்வரும் போதிறக்கியும்
சாயவுமாறியதின்பின் றணணீரினையூறறிடின்
பாயவுமெல்லாமடியிற் பற்றிநிற்குங்காணவே. ௮௱௬

காணவேகலக்கிக்கலக்கத்தண்ணீரிருத்தபின்
ஈணவுமிவ்வாறுநாலேந்தேதிநற்தண்ணீரைவிட்
டேணவுங்கழுவியூற்றியுள்ளபடிவைத்திட
தோணவேகாய்ந்தது தல்லியபஸ்பமீநாதுமே. ௮௱௭

படிகியுமிரண்டுபலம்பாச்சுந்தாரமோர்பலம்
பொடியதாய்க்கலியாணப்பூசுணைச்சாற்றிருசாமத்
திடமுடனரைத்துப்பில்லை செய்துலாத்தியீரொரு
புடமிடத்தாளகபஸ்மப் போக்குவின்மையாகுமே ௮௱௮

கெந்திதாளகமவனகக்கிருவிரா கனைதில்
முந்தியுமெருக்கம்பாலொருதுலாமும்விட்டதில்
பந்திக்கத்தேவகாயிரண்டின்பாலினிலரைத்தபின்
சந்திக்கக்கலந்தரைத்தரைத்ததைக்காச்சியிறக்கிடே. ௮௱௯

இறக்கியும் பெரியவர்கட்கித்தயிலமுத்துளி
உரைக்கவுஞ்சிசிரினிலுட்குடிக்கப்பேதியாம்
ஒருதுளிசிறியவர்கட்குள்ளளிக்க நாற்றிற
முரியது நற்பேதியாமுறிப்புமோருஞ்சோறுண்ணே. ௮௱௰

உண்ணவுங்கிரந்திசிரங்குச்சொரிகுட்டமும்போல்
கண்ணவும்வாய்வுமேகங்கரப்பான்காயங்காங்கைகட்
கெண்ணையுண்டுமூன்றுநாளிச்சாபத்தியம்வைத்திட
வண்ணமாய்ப்பலவினைகள் வாடிவனமேகுமே. ௮௱௰௧

ஊமத்தைச்செடியைச்சூரியனுதிக்குமுன்னேபோய்
நாமத்தைக்கெல்லிப்பிடுங்கிரண்டதாய்ப்பிளந்ததை
வாமத்திலவெயிலிற்போடவாடவாடவறறிடும்
சேமத்தோடதையாப்பது செட்டிடாதுநீங்குமே. ௮௮௨

நீங்குந்தோன்றுமூன்றுநாளிற்குள்செய்பலித்திடும்
ஆங்கரையாப்புத்தோன்று நாளுமுந்தற்பூநாகத்தை
பாங்கதாயரைத்து மூளுட்பற்றுபோடவீக்கமும்
ஓங்கிடாதனத்துமாறியுள்ளநோயொளிக்குமே. ௮௮௩

வாட்டியவர்க்கன்பருப்பச்சார்சித்தாமணக்கெண்ணெ
கூட்டித்திரிபுரபதங்கங்கொடுக்கவேளையொன்
றாட்டிடவகன்றிடும் பதங்கமூமில்லாவிடின்
நாட்டிமூவேளைக்கொடுக்கநல்வாய் கோணல்மாறுமே. ௮௮௪

புங்கம்வேர்கரடித்தோல்புலித்தோலு மரிக்கரி
பொங்குநல்லெண்ணெயிற்சோரல்போட்டெரித்திறக்கியே
தங்க மூவேளைப்புகட்டச்சாறுங்கக்குவாறுமே
மங்கவெங்குநில்லாது வனமலையிற்செல்லுமே. ௮௮௫

சீயக்காயுழக்குச்சட்டியிலிட்டுத்தண்ணீர்படி
காயவிட்டுமெட்டிலொன்றாய்க்காச்சியுட்கொடுத்திட
நேயமானமாதர்கட்குநின்றிடுஞ்சூதகவாய்
வேயவிப்படிமூன்று நாளுட்கொடுக்கட்டேருமே. ௮௮௬

சோத்தவித்தசாதிக்காய் மூன்றுபூரம்விராகனிடை
வார்த்துமுப்பலஞ்சித்தாமணக்கெண்ணெயிலரை
நூத்தவுங்கலக்கிக்கரண்டி விதமைநாளது
நீத்தவயர்கொட்டலுக்குண்ணிச்சாபத்தியத்தி ௮௮௭

ஆரஞ்சிப்பழத்தின்சரபத்திற் கரித்துள்சமன்
ஓரவுஞ்சுலேகியஞ்செய்தொன்று சேர்த்ததை
நேரவுமேடுக்கரண்டிரெண்டுமணிக்கோதிறந்
சோவுண்ணவாயினூற்றஞ் சென்றிடுமணக்குமே. ௮௮௮

அங்கிடுங்கன்றியிப்பவுரிச்சாற்றரைத்ததைத்
தங்கிடச்சிமிளிலிட்டிராத்திரி நித்திரையிற்
போகவிடவாரமுதட்டிற்பூசவெள்ளையானது
நங்கிடக்கறுப்புமாகுநல்லுதட்டிற்காணுமே. ௮௮௯

எள்ளெண்ணையனையஞ்ஞினைசயவெள்ளெருக்கன்பால்
கொள்ளும்புட்டிதன்னில்விட்டு கோர்றாமஞ்சள்தூள்பலம்
மெள்ளவுங்கலக்கிவெய்யலில்வைக்குந்தயிலத்தில்
தெள்ளக்கைகாற்றோய்குடைச்சற்றீரத்தீயிற்காச்சிடே. ௮௯௰

ஈரமாய்வெங்காயநற்புளி கருப்பங்கட்டியும்
சீரகங்கோவையிலையைச்சேர்த்தாமணக்கெண்ணெயில்
நேரவேதடவித்தீபந்தேறக்காச்சியைந்தையுந்
சேரவுஞ்சுட்டேவரைத்துத்தீநீரிற்குழப்பிடே. ௮௯௧

குழப்பியதனைமூன் றுணாட்கொடுக்கவாக்கினையாம்
பழக்கமாய்த்துவரையிற்பருப்பாம்பச்சைப்பயறதும்
புழக்கமாகச்சேர்க்கவும் புளிப்புமாகாபத்தியம்
சழக்கறவரய்ப்புண்ணட்சாரந்தண்காச்சலகலுமே. ௮௯௨

காயஞ்சீரகமுமோமமங்கடுகிந்துப்புத்திரிகடு
நேயமாய்ப்பசும்பாலுந்தைவேளைச்சார்கடைமருந்
தோயவுமிடித்துப்பால்சற்றுட்பதமாய்லேகியம்
பாயக்காச்சிப்பாகதாய்ப்பகுகவிருநேரமே. ௮௯௩

ராமலட்மணென்றதும்பொய் ராமனுமமந்திரம்பொய்
நாமரூபபேதமானனுலுடத்து தேவரும்பொய்
காமனும்பொய்விமனும்பொய் கருவியுங்கரணமும்பொய்
சோமசூர்யரன்றிமற்ற சொற்பொருட்கள்பொய்யதே. ௮௯௪

கன்கடந்தவத்துவும்பொய் கண்டதும்பொய்விண்டதும்பொய்
எண்கடந்தமந்திரங்களெந்திரங் களானதும்பொய்
விண்கடந்ததேவரும்பொய் வேதனும்பொய்மாலவன்பொய்
பண்கடந்துநின்றமெய்ப் பராபரமதொன்றதே. ௮௯௫

நட்டுவைத்ததேவரும்பொய் நான்மறைகளானதும்பொய்
கட்டிவைத்தபுத்தகக்கதைகளும் புராணமும்பொய்
எட்டுதிக்குதேவரும்பொய் ஏழிரண்டுலோகமும்பொய்
மட்டிலாதஜோதிநம் மனத்துளேவிளங்குமே. ௮௯௬

மூலமந்த்ரமென்றதும்பொய் மூவரும்பொய்ஐவரும்பொய்
ஞாலமென்றுவாழ்வதும்பொய் நாலுவேதமானதும்பொய்
காலனென்றயேமனும்பொய் காலரிந்துகாலைநோக்கி
மேலுலகச்சென்றவர்க்கு வேறுதெய்வமில்லையே. ௮௯௭

அண்டமும்பொய் அண்டமுள்ளடங்கலும்பொய்யானதால்
மண்டலம்பொய் மண்டலமனுக்களும்பொய்மற்றுள
தெண்டிரைக்கடல்களும்பொய் தேவரும்பொய்யாவரும்பொய்
கண்டமொன்றுளே கருப்பதானதொன்றுமெய்யதே. ௯௯௮

சாவதென்றுசொல்வதும்பொய் சாவதும்பொய்சர்வமும்
ஆவதென்றுசொல்வதும்பொய் ஆவதும்அழிவதும்பொய்
காவலிட்டமேலைவாசல் கால்கடந்தஞானிகட்கு
ஆவியில்லருமீசனன்றி யாருமில்லைமெய்யதே. ௯௯௯

பொய்யெலாந்திரண்டிருண்ட பொய்யெடுத்தபொய்யர்கள்
மெய்யலாதபொய்யிதனை மெய்யதென்பதேதுகாண்
மெய்யிலேயிருந்துதித்த மெய்க்கருவைபெற்றிடில்
பொய்யதென்றமெய்யுமிக்க மெய்யதாகுமெய்யிதே. ௧௦௦௦

அரியுமற்றுமையுமற்று அரனுமற்றுவப்பரம்
கருணைசெம்மைவெண்மையென்ற கடல்கடந்ததப்பரம்
பெரியதுற்றதுமதியுமற்று பேசுகின்றதாரமற்று
தூரியமுங்கடந்து நின்றஜோதியேசிவாயமே. ௧௦௦௧

குண்டலங்கள்பூண்டுமென் குளங்களாற்றில்மூழ்கிமென்
கண்டகோயிலுமன்னிருந்து கைவணங்கிதன்னிமென்
பண்டுமுன்னுமோதினாலும் பழுத்தவேடமாகிநான்
மண்டுகங்கள்போலவே மயங்கிநின்மாசருக்கிலீர். ௧௦௦௨

மணங்கமழ்ந்தபூவிரம் மலர்ந்தபோதுதேனினை
வணங்குலாவுவண்டுதாடி வந்தருந்தும்வாறுபோல்
மணங்குலாவுஜோதியை மனத்துளேயிருத்திடில்
பிணங்களாவதேதுநீர் பிழைத்திருக்கலாகுமே. ௧௦௦௩

சொல்லிருந்தகவில்லிலே சொல்லதன்முடிவிலே
அல்லிருந்தயிருளிலே பருக்கனொராசியிலே
புல்லிலேயபுனலிலே பிறந்தபல்லுயிரிலே
எல்லையற்றயீசர்நோக்க மில்லதில்லையில்லையே. ௧௦௦௪

அஞ்செழுத்துமூன்றெழுத்து அச்சுபத்துஓரெழுத்து
மிஞ்சுமாறெழுத்தெனவழுத்துகின்றழுத்தர்காள்
அஞ்சுமூன்றுமாறுமன்ப தொன்றுமல்லவப்பொருள்
நெஞ்சடக்கபற்றிபேர்க்கு நிற்குமோசிவாயமே. ௧௦௦௫

த்தகத்திலேயிருந்த பொய்ப்பகட்டுஞானிகாள்
த்துவத்தைதேசிக்க நாவடங்கஞ்ப்பதேன்
த்தகத்திலேயிருக்கும்ஜீவனைத் தெரிந்திடில்
த்தகத்திலேரிநாளும் மண்ணளவிருப்பரே. ௬0௬

ண்ணளவதானவண்ட மண்டலங்களொன்றிலொன்
றண்ணளவிலாதலோக மேழிரண்டுதன்னுளே
ண்ணளவிலேயிருந்து கண்கடந்தசோதியை
நன்னளவிலேயிருந்து வோர்ந்தகுருஞானியே. ௬0௭

ஞானியென்றுவேடமிட்டு நாளுமூரைசுற்றியே
ஊன்வளர்க்கவாய் மதத்துஉத்தளங்கள்பூசுவீர்
கான்றிரிந்தசேவுபோல காமமேகருதுவீர்
ஏனுமக்குஞானியென்று யாவரிட்டபேரதோ. ௬0௮

பெண்டுபிள்ளைசுற்றமற்றபேரெலாந்திருத்தியே
கொண்டுவாழ்வின்றிகுளத்தமூழ்ந்து மாடைபோல்
விண்டுரைக்கவாயிலாது வேட்டையாடுமூடனே
தொண்டர்வேடமிட்டது துடிக்கிலுந்துடிக்கலே. ௬0௯

மந்திரமுணர்ந்தநாய் மதிமயக்கும்வெறியா
மந்திரமிருந்ததும்பிறக்குந்தந்திரத்தையோ
அந்திரத்துவாயுவை அமைத்தருந்துஞானிமுன்
எந்திரப்பிலுக்கெலாம் பொழிஇலைத்தகோலமே. ௬௧0

கோலமிட்டுநீர்தெளித்து கும்பமூங்கலசமிட்டு
வாலைதொட்டுப்பூசை முன்வைத்தருங்குருக்களே
நூலையிட்டகும்பமும் நோக்கமிட்டதெய்வமும்
ஆலமிட்டகண்டர்முன்னடுக்குமோஉரைசெயே. ௬௧௧

அடுத்தடுத்துசென்று லாவுமம்பலத்துநாதனை
அடுத்தடுத்துசென்றுநீ யடக்குமாரடைக்கிடில்
எடுத்தெடுத்துசென்றுயீம மிட்டெரித்தபேரெலாம்
உடுத்துஉண்டிருப்பரென்று உன்னுளேன்தெரிந்திலாய். ௬௧௨

பில்லைகட்டிசெம்பினைப் புடத்திலிட்டூதியே
மல்லுகட்டும்வாதிகாள் மனக்களங்கமற்றதோ
எல்லையற்றயீசனாரிருப்பிடமுணர்ந்தலோ
கல்லைசுட்டபோதிலுங் களங்கமற்றதங்கமாம். ௬௧௩

விட்டெரிந்தவித்திலே விளைந்தெழுந்தகோதையை
பட்டரிந்தமுன்னவர் பரித்தெரிந்தவாறுபோல்
கட்டரிந்துநித்தமுங்களை பிடுங்கவல்லரேல்
சுட்டெரிந்துபோவரோ சுடலையுமிருக்குமோ. ௬௧௪

ஆற்றிலேகுளித்தெழுந்து ஆகமங்களோதுவீர்
காற்றிலேகுரைந்திடுங்கணக்கரிந்துகொண்டிரோ
நாற்றிலேகளையெடுத்து நற்குடியாகாதநீர்
ஊற்றிலேமுணமுணக்கு முங்கள்மந்திரமேதடா. ௬௧௫

மூலவட்டமீதிலே முளைத்தெழுந்தசோதியை
ஆலவட்டமிட்டலோ வமர்த்திவைக்கவேணுமாம்
கோலமிட்டகன்னிபோல் குறிப்பிலேயிருந்திடில்
மாலையிட்டபிள்ளைபோல் மனங்குளிர்ந்திருக்கலாம். ௬௧௬

ஆசனத்திருத்திமே லணிமணிதுலக்கியே
போசனத்திற்காய்பசட்டு பூசைசெய்யும்வேதியா
தாசனென்றுஉன்னைநாடித்தாள்பணிந்தபேர்க்கெலாம்
ஈசனிருப்பிடத்தையெங்க னென்றுரைப்பையோ. ௬௧௭

செம்பிலேகளிம்பெடுத்து சீமையாளவேன்னிநீர்
கும்பலாய்புடத்திலே குருடராவதென்பயன்
சம்புவையிறைஞ்சியுஞ்சவளையற்றபோதலோ
கம்பமுமபழுக்குமே கயிலையுந்திறக்குமே. ௬௧௮

மண்ணில்பெண்ணில் பொன்னிலுமயக்குமோகபாதகர்
பண்ணும்புண்ணியங்கள் பாபமெண்ணியுஞ்செய்வார்களோ
ஒண்ணிலுந்தன்கண்ணிலுநேருண்மையையறிகிலார்
சண்ணியுமெழுநரகிற்சண்டனூர்க்காளவரே. ௬௧௯

பாரதம்ராமாயணம் பாகவதஞ்சலக்கிரீடை
ஆரணப்புராணமநு விக்கியானமுங்கைவல்லியம்
காரணம்விலாசம் நாடகமாடல்பாடல்களும்
தோரணையாய்ப்பார்க்கக்கேட்கச்சூழ்பவமொழியுமோ. ௬௨௦

கல்லுகட்டைச்சாணிமண்ணு காரயந்துராசெம்பில்
கொல்லன்வார்த்துருவமைத்த கோயிலுட்சிலைகளை
மல்லுகட்டாய்க்கட்டியு மகோத்சவஞ்செய்போதினும்
இல்லையேகதிபெறவு மேமனுப்பிணங்களே. ௬௨௧

கஞ்சிகாளஹஸ்தியானைக்காவலூ வண்ணாமலை
மிஞ்சிதில்லைக்காசியிராமேஸ்வரமதுரையும்
துஞ்சியாவுஞ்சுற்றித்தூரதூரமுந்திரிந்தபேர்
எஞ்சியகதிபெறவுமீசன்பதஞ்சேர்வரோ. ௯௨௨

கம்பைகொள்ளடங்காவேரிகங்கைதுங்கபத்திரா
நம்பிசிந்துசரஸ்வதியுநர்மதாகோதாவரி
சம்புத்தீவுளநதி சகலதீர்த்தமாடினும்
எம்பிரானருள்பெறவிணையடிக்காளாவரோ. ௯௨௩

முப்புரமெரியீசனை முன்றொழாதமூடரை
எப்பவும்வெங்கடேசனிறக்கப்பிச்சையெடுப்பித்
தொப்பத்தன்மலைவலஞ்செய்தொன்றுபாதிமொட்டையாய்த்
தப்பிக்கோல் குருவையிவன்றன்செருப்பாற்சாடியே. ௯௨௪

தம்மதத்தைவிட்டொரு தனிமதஞ்சேர்சண்டியை
எம்மதத்தவரிகழவென்னலாபம் பெற்றனர்
அம்மதத்துமன்று கெட்டலைந்திழிந்தறிவிலா
சம்மதங்கொண்டோர்குரங்குதன்சேட்டைக்குள்ளாவரே. ௯௨௫

ஆரணிப்பெரியபாளையத்தமர்மாதிச்சியே
காரணியாய்வேப்பஞ்சீலை கட்டிக்கண்டதீபம்வை
கோரணிகள்செய்தெல்லோரும் கும்பிடமயேசனைப்
பூரணிமாந்தர்மானத்தைப்போக்கிப்பூசிப்பிப்பளே. ௯௨௬

உற்றநோய்ப்பிணிக்கெலாமங்குள்ளோர்கள்மயிரொரு
பெற்றபிள்ளையின்மயிர் பெருமாளுக்கீனிவது
நற்றவமியற்றொண்ணாத நன்றிகெட்டநாதிகள்
சுற்றமாமனைவருந்தொல்லைபட்டுழல்வரே. ௯௨௭

இல்லல்லாமஹம்மது ரசூலல்லாவிஸ்லாமதம
அல்லல்லாவெனுந்துலுக்கரல்லாக்கைவிரலைந்தை
மல்லல்லாகொடுத்துஇந்து மதத்தர்கொண்டாடாவிடின்
சொல்லல்லாச்சுடுகாடாகிசுற்றிநாய்களோடுமே. ௯௨௮

ஆதிபாரதத்திற்பலராமர் துரியோதனர்க்
கோதிசுபத்திரையைத் தரக்கிருஷ்ணனருச்சுனர்க்
கேதிலீயவிருவ ரெதிர்த்தாழிக்கலப்டையை
வாதியாய்விடத்தசாவதாரமாயதூருரை. ௯௨௯

பார்க்கராமாயணத்திற் பரசுராமன்விஷ்ணுவாய்
இர்க்கராமன்வில்வளைத்த சேதிகண்டெதிர்த்தவன்
மூர்க்கராமாவென்றனுசை முன்வளையென்நீந்திட
மார்க்கமாய்த்தசா வதாரமாயனென்றேசொல்லுமே. ௯௱௦

இங்கிதராமாயணம் பாரதமிரண்டிலுந்
தங்கியதசாவதாரச்சங்கற் பஞ்சொல்லல்லவர்
பொங்கதாயோர்பத்திலே இரண்டுபோகவெட்டலோ
நங்கதல்லவேயிதற்கென்னட்டுவீர்கள்பாட்டரே ௯௱௧

அன்னமென்னடைப்பாஞ்சாலி புள்ளிருக்கவிமனுஞ்
சன்னலைத்திறந்துவைக்கத் தாக்கியதாலவாயுவும
பின்னமுறவிவமோர்னுமாப்பிள்ளையென்றுரைப்பசற்
இன்னமென்சந்தேகமோ மெடுத்துரைப்பீர்நீங்களே. ௯௱௨

மெய்யரிச்சந்திரன் சொத்துமேகோசிகாகிந்தபின்
வையங்கணவ்வூரில்மீண்டிடவர்திடேனென்றசொற்
பொய்யதாகத்தோட்டிசொற் புரண்டுவந்துராண்டதால்
ஐயவனபகீர்த்தியடைந்த தோவசத்தியமே. ௯௱௩

சந்திரவதியின்சொற்ற பா தெனமொழிந்தல் பொய்யென
வந்திக்கவரசனசேனை மாய்த்தவனென்றதால்
சிந்திக்காதுபொய்யுரைத்த செய்தியால்மெய்யாவளோ
முக்தியேவரசன்போல வோதலுமீதுண்டையோ. ௯௱௪

லோகிதாசன்பொய்யுரையினுட் பநகாணவுமறு
போகியாயசலாத்துப்பிள்ளை கருடன்சென்றுமே
வேகியாய்த்தர்டையையுங் கொய்துமீண்டுவருமேவெனைச்
சோகியாய்விடந்தீண்டித் துடர்ந்துவாராதுண்மையோ. ௯௱௫

சத்தியகீர்த்தியெனுமந்திரி முன்னுரைத்தது
அத்தினமூவரைவிட்டகலே னென்றனுதினம்
பத்தியுமரசன்பின் பரிந்துபோனதாகையால்
புத்தியெங்கொளித்ததோசொல பொய்யுரையுமலலவோ. ௯௱௬

குறிசொல்மேடைகத்திகட்டி கொண்டைகுச்சுஅங்கியோடு
நெறிமதுரைப்போலு டுத்திகெட்டிடுஞ்சாராயத்தால்
வெறிபிடித்துளகுமந்த வீணரைப்பணிந்ததால்
மூறிபிருமக்குமோட்ச வீடடைவுசொல்லுரோ. ௯௱௭

பக்கச்செடி லுச்சிச்செடிற் பற்றுந்தீப்படுகளம்
முக்கியந்திருவிழாவை முற்றுநம்புமூடர்காள்
எக்கலிக்கொட்டியுந்திரி யேனமுமதியுள்ளவர்
மக்கியுமடிவரௌரவா திநரகெய்வரே. ௯௩௮

ஏசுமதவாதிகளிறந்தபின்கடைசியிற்
பாசம்வைத்தொருமிக்கப் பலரையுமெழுப்பியே
நேசமுறப்பாபத்தை நிராகரித்துமோக்ஷத்தில்
வாசமிகவைக்கவேசர்வேசவரலுமுண்மையோ. ௯௩௯

மண்ணினிற்றன்சாயலாய் மனிதனைப்படைத்ததின்
எண்ணத்தாறசமுனைதயினை யெந்தேவன்சிருஷ்டித்தார
குண்ணவாதாமெலுயியினைக் கொண்டேவாளினைப்படைத்
தண்ணோவுயிரேற்றியதிவ்வா றெனக்குரையுமே. ௯௪௦

வள்ளுவாமனைவிபிராண வாதைப்படாத்தயில்
உள்ளநீருழமியுங்கூழிடிலுயிர் போமெனால்
மெள்ளகொங்கணவன் கொக்கொாதைதயுரைக்கையில்
தென்னருமணியிசரங்கைவபத் தேவியநயாதமேதா. ௯௪௧

தேவியாமி நப்பாமாயில் சேருமபோதோர்மைந்தரைக்
கூவியழுவுமபெறுமோ கொதையருமக்கணாம்
பாவிக்கவாதீபகபன்பலமநியகிலாதேனா
சேயிகசச்சிஷநூடமாலுள தேவியென்பதெங்ஙனே. ௯௪௨

இன்றிறந்தபிணத்தைத் பார்த்திவிபிறக்கும்பிணம்
சென்றிருந்தாவின்னெந் செனிக்குபோமறுபடி
என்றிறந்துமிறவாமலிருந்தும் பிறந்திடா
நன்றறஞ்செய்தார்களோ விநாட்டிலுளமைந்தரே. ௯௪௩

ஆக்கலுமழித்தலுந்தன்னா லெனட்பிதற்றியே
போக்கிரித்தனங்கள்செய்யும பொல்லாததுன்மார்க்கர்கள்
மூர்க்கமாய்ச்சொன்னபடி முடியாவிடிலக்கணம்
சாக்கிரித்தனமாய்த்தெய்வ சங்கற்பமென்னுவரே. ௯௪௪

வரம்பெற்றபத்மாசூரன்ம யேசன்றலையிற்றொட
கரம்வைக்கவோடியயவேலங்கயொளித்ததுன்மையோ
உரங்கொளவிலிங்கப்பாவையுட் புகுந்ததாருரை
பரன்விக்லரூபயெடுக்கப் பற்றுமோகைசென்னிமேல் ௯௪௫

சீதையைப்பரிகொடுத்தச் சீராமன் இலங்கையில்
தீதுறக்குரங்கசெழு பத்திரண்டுவெள்ளமும்
ஆதரவாய்க்கொண்டெதிர்த்தவன் கெலித்தலாண்மையோ
மாதினையழைத்துப்போய் வனம்விடுத்தல்மானமோ. ௬௪௬

மன்மதன்லட்சுமிமாயனார்க் குமைந்தனாகையால்
அன்னவன்சொர்க்கமத்தி பாதாளத்துண்மாதரை
முன்னவன்காமனாய்மோக மூட்டியும்புணர்ச்சிசெய்
தன்மையாற்றன்மாதுர்க்குத்தா னுமாப்பிள்ளையலோ. ௬௪௭

சத்தியமநுவிக்கியர்னந்தர்க்குஞ் சொற்றருமரும்
நித்தியப்பொருளதி நிபுணனென்றநீதனும்
அத்தினந்தன்னோடுபெண்டு தம்பிமார்களாரையும்
வைத்துசூதிலாடிதோர்க்க வெத்தருமஞ்சொலலுமோ. ௬௪௮

முன்னம்பிரம்மகீதையு மொழியும்பகவத்கீதையும்
சொன்னகிருஷ்ணனியாவுந் தானென்றோதிடோர்க்களத்தினில்
வன்னெஞ்சன்மடிக்கச்செய்த மாயவனோர்தெய்வமோ
இன்னமும்வியாசப்புரட்டியம்புதலநீதமே. ௬௪௯

நாரணனுலகமுண்டோ னகிலேனோர்பாரதம்
காரணம்பஞ்சவரால் மூவாறக்குரோணிசேனையை
மாரணஞ்செய்தோன்றவனோ மானிடன்கோபிகளைப்
பூரணமாய்க்கற்பழித்தோன் போக்கிரியுமல்லவோ. ௬௫௦

சருவேசனேவலங்காயிற் றுனொளிக்கமாயனும்
உருவமோகினியாய் வந்தொன்றுகச்சேர்ந்தணைந்திட
பொருந்தவோரரியரப் புத்திரனுங்குதித்தலாற்
பெருந்தேவரானோடு வாண்பிணைந்ததுபெருமையோ ௬௫௧

ஆதியந்தநாமரூப மாண்பெணாற்றவத்தனைச்
சாதிவேடஞ்செய்கை கோலஞ்சாதனந்தமுதல்
ஓதிப்பிரசங்கிக்கவாணறுற்ற நூற்புராணமாய்ப்
போதிக்கவுரைத்தியாவும் பொய்க்கதைப்புரட்டரோ. ௬௫௨

ஊனதுவோர்கோயிலாயுயிரது வோர்வத்துவாய்
ஞானதுவோர்தம்யமாய்த் தவஞ்செய்வதோர்சத்தியாய்
கானதுவோர்காணியாய்க் காண்பதுவோர்காக்ஷியாய்
ஆனதுவோராக்ஷியாய் மாவதுவோர்சாக்ஷியே. ௬௫௩

நாறுகாதயோசனை நொடிக்குளேபரக்குமுன்
னேறுமோர்பரியிற்சீனி இட்டஅங்குபடியும்வைத்து
தானுமண்டலங்கடந்து வப்பாலுமுப்பாழினிற்
சேறுடன்றங்கமும்முட்சாதிபோகமெய்துமே. ௬௫௪

மூச்சுக்காறுகாததூர முன்னடக்குந்தேசிமேற்
பாச்சலிட்டுமேறியங்கு பாரவனஞ்சென்றதில்
ஓச்சமின்றிதங்கினானுமி யோகசித் திரைக்கொள
பேச்சதின்றிப் பிரமானந்தப் பேரின்பமடைவரே. ௬௫௫

சர்ச்சனரிடமிருந்து சந்ததமெஞ்ஞானியை
அர்ச்சனைபுரிந்தவரருள் விழிஞெக்கெய்திலார்
துர்ச்சனரிடமடுத்து தொல்லைபட்டுழன்றுமே
காச்சனைபுரிந்தவர் கலங்கியேநிற்பார்களே. ௬௫௬

கண்ணிற்காண்பதுவும் பொய்காதிற்கேட்பதும்பொய்
எண்ணிடுநினைவதும்பொய் யிச்சடலமானதும்பொய்
உண்ணிடுமுணவதும்பொய் யுற்றதுசொல்வதும்பொய்
மண்ணினிலிருப்பதும்பொய் வஸ்துவொன்றுமெய்யதே. ௬௫௭

பேராசைப்பிடித்தவர்பிரம லோகமாளினுங்
காராகரசவாதமாங்கனகஞ் செய்யக்கோறுவர்
பூராகவஞ்ஞானத்திற் பொருளைத்தேடவல்லவர்க்
கோரணமெஞ்ஞானஞ யோகக்கோரிங்கிட்டாததே. ௬௫௮

உற்றுப்பார்க்கவொன்றிலை யுறுதியாகாம்பவும்
சுற்றுமுள்ளகற்பிதங்கள் சொல்லவும்பொய்யாகுமே
சற்றுயோசிக்கின்சடநீஜகமெலாமு மித்தையாய்
அற்றிடும்போதல்லவோ யவையனைத்துந்தோன்றுமே. ௬௫௯

முப்புசத்தினையறிவர் மூதுணர்ந்தஞானிகள்
உப்புசத்தினையறிவ ருண்மைமேவுமியோகிகள்
அப்புசத்தினையறிவ ராத்துமக்கியானிகள்
வைப்புசத்தினையறிவர் வாதியும்வைத்தியரே. ௬௬0

காறுகாருயூத்திடக் கனகத்தையெக்காலுமே
நாறுநாறுகாலமாக நட்டங்காணுவாதிகள்
வேறுவேறுநூல்களை விவேகிபோலுணர்ந்தெலாங்
காறுமாறாய்ச்செய்தவர் தனமெலாமொழிப்பரே. ௬௬௧

ஓங்கியும்பிரணவச் சொரூபியாயுதித்தவள்
தாங்கியும்வையமதனைத் தாயதாய்ரக்ஷிப்பவள்
ஏங்கியுமிருப்பவரையின்ப முறச்செய்குவள்
பாங்கியாய்ப்பக்கத்துணின்று பாதுகாத்திருப்பாளே. ௯௬௨

ஓரெழுத்தாய்மூலமா யுதித்திடும்பிரணவம்
ஆரணத்தில்முன்னும் பின்னனுசரிக்குமக்ஷரம்
பேரெழுத்தனைத்திலும் பிணைந்திருக்குமந்திரம்
கூரெழுத்திற்கோடியதிற் கூடிடுமெமந்திரமே. ௯௬௩

வாசியு முப் பூவது மனமது மூலப்புளி
நாசியு னுனிநடுவி னுட்டமு மறிந்திட
வீசியுங் குழலூதிமே லேறியங்கமர்ந்திடில்
ஊசிமுனைப் பேரொளியினுள்ளதுநடனமே. ௯௬௪

டீக்கமாயிரண்டுஆறு ஆண்டுகாத்துநாதனால்
வாக்கும்மனங் காயமு மறந்துபவுன முற்றுமே
போக்குவருத் தானதொன்றைப் போதவு மடக்கியும்
சூக்குமதூலத்தைக்காண சூக்ஷமுமறிந்திடே. ௯௬௫

அறியவு மிருகலை யதனைமாற றிடும்விதி
குறியும்ரேசகப்புபூரகக் கும்பமூன் றக்தினை
நெறியுடன் குருவுரைக்க நேர்மைகண் டனுதினம
வறியஅம்மென் றூன்றிநங் பிங் வங்கென வகுத்திடே. ௯௬௬

வகுத்தோதுங்கை காலையு மடக்கியு முட்கார்ந்ததில்
தொகுத்துப்பின்னி பூதியுண்டுருத்தியுட்பொருத்தமாய்
பகுத்தவுண்ணுவைமடக்கிப் பகருநாசிபாதையில்
மிகுத்துவங்கலையடக்கி மேற்குமபித்தெழும்பிடே. ௯௬௭

கும்பித்தேஎழும்பிவிண்ணினில் கூர்ஹடயோகத்தினிற்
றம்பித்தேயிடைகலைபின் கலையிரண்டுந்தாக்கியே
வெம்பியுமதேசிந்திழியலவ்வொருகடிகைமேல்
நம்பியுப்பயயக்தியாய் நாளிலத்திறங்குமே. ௯௬௮

முன்னமே வாசிவாலங் சிங்கென்ன மொழிந்ததை
தன்னிலேவா சிகுண்டலி தட்டியு மெழுப்பியே
இன்னமுங் கதும்பியே யகாரவீட் டிருத்தியும்
உன்னைகண்டேஉன்னுண்ணின்று ஓதுஅம்மகாரமே ௯௬௯

மகாரமுஞ்சிகாரம்வைத்து வாய்மடித்துண்ணமுதழும்
பகாரமு மோங்காரமே சத்தாகுமட்ட மாசித்தி
அகாரமொன்றையறியதன்மே லானவைத்துவைத்தெரி
உகாரஞ்சச்சிதானந்தத்து உண்மைக்காணுமூதியே. ௬௭0

சுத்தனுகவாசியுன்னுட் சூட்சமாய்வசப்பட
நித்தமியோகத்தினின்று நேர்செலுத்தவல்லிரேல்
சித்தனுகநங்கென்றாதிச் சேரவும்பூரித்தகதை
முத்தனுகப்பக்ஷமட்டுமே முன்மறவாதோதிடே. ௬௭௧

வாசியும்வசப்படவடிக கடிதிருட்பிட
நாசியைப்புரட்டிடா உடுநிலைதிகைத்திட
தேசியைவங்சிங்வுங்கென்று சேரக்கீழிறக்கிட
பேசியுமிடைகலையைப் பின்கலையில்விட்டிடே. ௬௭௨

விடுக்கவுமேமூன்றடி நடக்கையினுள்மாறிடும்
அடுக்கவுமேபூரகும்ப ரேசகித்துமிவ்விதம்
தொடுக்கவும்பத்தாவர்த்தி மாறுதியறவல்லவர்
நெடுக்கவும்யோகத்திருக்கு நேர்மையைக்கண்டோர்களே. ௬௭௩

ஆவதற்குண்மைஞானம் மறிவதற்கவன்கியானம்
மேவவுநிதந்தியானம் வீற்றிருக்கவுமோனம்
தேவதுயித்தாம்பிரமஞ் சிக்கிடவருந்தருமம்
பாவமும்விட்டோன்கர்மம் பகரொணுதுமர்மமே. ௬௭௪

மருமங்காண (அம்உம்ஓம்வயநமசி) யென்றுநீ
புருவமையக்கண்ணிரண்டைப் பூட்டிப்பாரடுத்ததை
வெருவலுறங்கலசைதல்மேவல் சோம்பல்பாச்சலற்றுநீ
நிருவிகர்ப்பமாயிருந்து நேரிற்காணுமோனமே. ௬௭௫

மோனத்தினிற்பஞ்சவர்ண முற்றுநாதகீதமும்
தானத்தில்ரவிமதி சராசரம்வரைநதி
ஆனதிற்சுக்கிலசுரோணி தப்பேரிநின்முகம்
நானதுநீ சர்க்குருமீனைற்றுரகந் தோன்றுமே. ௬௭௬

தோன்றுமாராதாரமுநேர் சூரியப்பிரகாசமும்
ஈன்றவாதிப்புருடன்வாக்கிய மத்துவிதப்பொருள்களும்
ஊன்றுங்குணங்குறிபுத்தி யுண்ணெறிவிளக்கொளி
போன்றும்பூதபவுஷ்ய வர்த்தமானமும்புகலுமே. ௬௭௭

புகலவுமுறுதிகொண்டு பூட்டியுஞ்சுழிமுனை
சகலவாணவந்துண்டாய்த் தரித்தாணந்தவாழ்வினிற்
பகலவன்போலேசொலித்துப் பாரில்விட்டகுறைதொட்டு
அலையுமூழ்வினையறுத்து வாக்கினையைநோக்குமே. ௯௭௮

நோக்கியும்பிரமநீயாய் நுட்பங்காணத்தம்பதம்
ஆக்கியுமுத்திச்சதமா யகலவும்பொய்வாழ்வினைத்
தூக்கியும்வழிப்படச் சுழிமண்டல முங்கண்டு
போக்கியமும்மூட்சாதியைப் பூணும்பதஞ்சேருமே. ௯௭௯

நேரவுங்குருவினைத்தினந் தொழுதுபோற்றியும்
நேரவும்பிரமானந்த நிஷ்டையும்புரிந்திட
நேரவுமிருபிறவிச் சென்றிடவனுதினங்
கோரவுமுத்தியைப்பெற கூர்வதுவுமுண்மையே. ௯௮௦

ஆவதுமழிவதுமருள் வதும்பெறுவதும்
ஈவதுமிறப்பது மிசைவதுமெதிர்ப்பதும்
கோவதுங்குருவதுங் குணமதுங்குறியதும்
போவதும்வருவதும் புகலொணாப்பொருளிலே ௮௮௧

வாதுகூறிதர்க்கர்பேசி வம்புசெய்யும்வீணர்கள்
போதுபோமளவுந்தாம் புத்தியினால்வதறியும்
சேதுபரியந்தமோடித் தேசமெங்குஞ்சுற்றியும்
ஏதுவின்றியெம்பிராணிணைப்பதத்தைச்சேர்வரோ. ௯௮௨

கள்ளுடன்சாராயமுங்கஞ்சாவபின்மதத்தையும்
தள்ளுபடியொன்றிலாது சந்ததங்குடித்துமே
சொன்னெழ வெறித்துவிழ்ந்து சுத்தஞானியானெனத்
துள்ளியுந்திரிபவர்கள் சோதியிற்கலப்பரோ ௯௮௩

எத்தொழிலைச்செய்திடினு மேதவத்தைப்பட்டினும்
முத்தரின்மனமதுவு மோனமேவிநின்றிடும்
கத்தபத்துக்கொத்திருக்குங் காரியமிலாதபேர்
நித்தமுமவதிபட்டு நீடேழிவதைவரே. ௯௮௪

பித்தர்போலும்பேயர்போல் பிசாசர்போலிருப்பருன்
மத்தர்போலி மிருப்பரங் கையமுதமும் புகுந்துண்பர்
செத்தர்போலுமிருப்பர் சிகண்டிபோலுமிருப்பர்
சுத்தமூலஞானியர்கள் சொல்லப்பேரின்பத்திலே. ௯௮௫

செங்கோலுஞ்செலுத்திநிதந் தேசமெங்குமாள்பவர்
பங்கமாயரசைவிட்டுப் பார்வனங்கள்சுற்றியே
பொங்கமாயோகத்திருந்து பூசனைசெய்ஞானியர்
அங்கலிங்கபீடமாக வானந்தித்திருப்பரே. ௯௮௬

ஆனந்தத்தில்மூழ்கிபவனாபோகியன்னத்திற்கே
தானந்தேடியுண்பதிற்றத்தஞ் செய்வரன்னாட்டலன்
கானந்தனில்வேர்கிழங்கு காய்கனிசருகுமுண்
கூனமறப்பதவிசேர்ந் துய்வர்களெக்காலுமே. ௯௮௭

முத்திபெறவேண்டுமாகின் மோகத்தினைவிட்டிடு
சத்திபெறவேண்டுமாகின் தாரத்தினைவிட்டிடு
பத்திபெறவேண்டுமாகின் பாசத்தினைவிட்டிடு
சித்திபெறவேண்டுமாகின் செல்வத்தினைவிட்டிடே. ௯௮௮

ஆசையற்றுக்கானதிலனாதியா யனுதினம்
பாசமறறுயோகஞ்செய்து பக்திசெய்யவல்லிரேல்
நேசமுற்றுமாந்தருன்னைநிதமும் பணிபவும
பூசைபெற்றுமூட்சாதி போகத்தையடைவரே. ௯௮௯

காயத்திரிமந்திரத்தைக்கைவிரலாலெண்ணியே
மாயத்திருட்டுருட்டுகள் வஞ்சனைசெய்பாதகர்
ஞாயமொன்றிருக்கவனி யாயத்திற்கலந்திட
சாயமெடுப்படைவது சங்கியங்கிருப்பரே. ௯௯௦

சாமிப்பிறப்பித்தானோ பூசாரிப்பிறப்பித்தானோ
காமிப்பிறப்பித்தானோதகப்பன்பிறப்பித்தானோ
தாமிப்பிறப்பித்தானோ தனியாய்ப்பிறப்பித்தானோ
சோமிப்பிறப்பித்தானை நிலையாய்ச்சொலுமிங்ஙனே ௯௯௧

மந்திரமெட்சணிசாலம் வசியமும்மருந்திடு
தந்திரங்கைமாற்றுவித்தைச் சாதனப்பழக்கத்தோ
டெந்திரமேவல்மாரண மெதிரேற்றிவையெலாம
பந்தனமாகச்செயும பரமனெழுத்தொன்றிலே. ௯௯௨

எண்ணிலாதமாதர்கட்கு வீந்தவர்காஷாயமும்
பண்ணியுமுபதேசம் பதங்காணாராசாரியாய்
அண்ணுடலுயிராவிமூன்றைத்தத்தஞ்செய்தீந்திட
குண்ணிடாதவர் சொத்தினைக்கோங்குவர்குருவாமோ. ௯௯௩

ஒன்றிரண்டுமூன்றுநான்குமைந்தாறு முகத்தரை
என்றுந்தெய்வமாக வெண்ணுமேழைமதியாளர்க்கு
ஒன்றிரண்டுமூன்றுநான்குமைந்தாறுமுகமிலா
தென்றும்வியாபித்தவன்றினகரனைப் போலுமே. ௧௦௧௦

எங்கள்தெய்வமுங்கள்தெய்வ மீதறிற்பெரிதெனச்
சங்கைகொள வைணவர் சைவர்தர்க்கமிட்டிட
தங்கவெச்சமயந்தோறுந்தானொன்றாய்ச்சொலிப்பவன்
பங்கயனரணன்காணாப்பரப்பிரம்மமாகுமே. ௧௦௧௧

எச்சமயத்தேவர்கட்குமீசனொருவனலால்
மெச்சமயத்தெவர்க்குமெங்கெங்கும வெவ்வேறுதெய்வங்களோ
மிச்சவாடுமாடுமானைவெம்புலி குரங்குநாய்
வச்சகல்லுசாணிமண்ணுவாண்பெண்தெய்வமல்லவே. ௧௦௧௨

கும்பிடுந்தெய்வமெலாய் குலத்தெய்வமாய்க்கோடித்தே
நம்பினாளும்பூசைபொங்கல் நற்பலிகள்தந்திட
வெம்பிடவெதுமபிடாபிடியதினலிபட
தெம்பிடக்குடிகெடுக்குஞ் செய்தெய்வமாகுமே. ௧௦௧௩

பேயுடன்பிசாசதும் பிரமராட்சசானதும்
தாயுடன்றக்கையுந் தண்ணீரில்மாண்டழிந்ததும்
நோயுடனொருங்கியுநொடியிறந்தொழிந்ததும்
நாயுடனொறும்புமாய்த்திறந்ததெய்வமீதலோ. ௧௦௧௪

# சிவவாக்கியம் ஆயிரம்பாடல்

முற்றிற்று.